
# பொன் மகள் வந்தாள்



அகிலா கோவிந்த்

## ஆசிரியரின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| கண்ணான கண்மணி | 65.00 |
| அழகி... நீ.. பேரழகி...! | 65.00 |
| மௌனமே காதலாக | 65.00 |
| காதல் தேன் நிலா | 115.00 |
| என் இனிய கண்ணாளா | 65.00 |
| தோகை இளம்மயில் | 65.00 |
| அன்புள்ள மான் விழியே | 100.00 |
| எங்கே என் தேவதை? | 100.00 |
| ரதி என்னும் அழகுக்கு | 70.00 |
| மன்னவனே வரலாமா | 70.00 |
| கண்மணி நிமிர்ந்து நில்லடி | 65.00 |
| வருகிறேன் ராஜகுமாரி | 65.00 |
| வண்ணமயில் பெண்ணொருத்தி | 85.00 |
| விழியோரப் பார்வையிலே | 70.00 |
| காக்கைச் சிறகினிலே | 80.00 |
| பால்வண்ணம் பருவம் கண்டு | 75.00 |
| வா பொன் மயிலே | 70.00 |
| அழகு மயிலாள் | 70.00 |
| மைவிழி மானே | 90.00 |
| என் சின்னக் குட்டிம்மா | 100.00 |
| வெற்றித் திருமகள் | 65.00 |

# பொன் மகள் வந்தாள்

## 1

நிர்மலா ஒரு கணம் கைகளைக் குவித்து வளைந்து நின்றாள். திரும்பினாள். தலை சாய்த்துப் பார்த்தாள். ரோஜா இதழ்களை அப்படியே திறந்து முத்துப் பற்களின் பளீரிடும் அழகைக் காட்டினாள்.

'க்ளிக்' கென ஒரு ஓசை.

அதுவரை கண்களைப் பதிந்திருந்த காமிராவில் இருந்து முகத்தை வெளியே எடுத்தான் அவன்.

''பிரமாதம்! பிரமாதம்... நிம்மி...!'' என கைகளை வேறு தட்டினான். கூடவே, ''உன் அழகு இந்தச் சின்னக் காமிராவில் என்னவாய் மிளிர்கிறது? பிரிண்ட் போட்டு காட்டுகிறேன் பார்! நீ மட்டுமல்ல அத்தனை பேரும் அசந்து விடுவார்கள். அந்த மல்டி பிராண்ட் கம்பெனி உன் போட்டோவைத்தான் தங்கள் புது டூத்பேஸ்ட் விளம்பரத்தில் போட வேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்று விடும். பிறகு நமக்கு யோகம் தான்!''

படபடவென அவளது 'இன்பா'... என்று செல்லமாய் அழைக்கப்படும் இன்பசாகரன் சொல்லி முடித்ததும் உச்சி குளிர்ந்துதான் போனாள் அவள்.

அவன் புகழ்ந்து சொன்ன விஷயத்தை விட கடைசியில் அவன், 'நமக்கு... யோகம் தான்...' என விளித்தானே...? அது... அதுதான் அவளை அதிக பரவசப் படுத்தியது...

ஆக... அவன் எப்போதும் அவளை தன் நினைவில் வைத்திருக்கிறான். தனது வாழ்வோடு இணையப் போகிறவள் என்று மனதில் பதிய வைத்திருக்கிறான். அதனாலே... தான் அவன் உள் மனதில் இருந்து இருவரையும் இணைத்தபடி அந்த உரிமையான வார்த்தையும் வெளிப்படுகிறது...

நினைப்பு மேலும் பரவசமாக்க அவனைப் பார்த்து மீண்டும் அழகாகப் புன்னகைத்தாள் நிர்மலா.

''ஆ...! அட...! அபாரப் புன்னகை...! இது... இது... இதைத்தான், ரஸித்தேன்...! காமிராவினுள் சிறை



பிடித்தேன்.... வெல்டன்...! கன்கிராட்ஸ் நிம்மி...!'' மறுபடியும் புகழாரம் சூட்டினான் அவன். பக்கத்தில் அவள் கைகளைப் பிடித்து ஓங்கிக் குலுக்கினான்.

அந்த ஸ்பரிசம் பட்டு கிறக்கமானவள் போல் அவனது முகத்தையே பார்த்தாள்.

இன்பசாகரனுக்கு நல்ல அடர்த்தியான சுருள் முடி. ஆறடி உயரத்துடன் திடமான புஜங்களும் உடற்கட்டுமாய் மலைக்க வைக்கும் கம்பீரத்துடன் சிறிய காந்தக் கண்கள் பளீரிட அவன் சிரிப்பதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் பரவசமாய் இருக்கும் நிர்மலாவுக்கு.

அன்றும் அப்படியேதான் கிறங்கி பிரமிப்பாய் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். கைகளைப் பிடித்து குலுக்கியவன் அப்படியே அவளை பூக்குவியலாய் அணைத்து ஒரு சின்ன அணைப்பு செய்து கூட விடுவித்தால் சுகமாய்த்தான் இருக்கும். அவளும் அதை அனுமதிப்பாள் என்றே தோன்றியது.

ஆனால் இன்பசாகரன் அப்படிப்பட்டவனில்லை. அவனுக்கு இது போன்ற சில்மிஷங்கள் சுத்தமாய் பிடிக்காது.

என்னதான் நிர்மலா உறவுப் பெண்... கட்டிக் கொள்ளப் போகிறவள்... காதலி என்று கூட வைத்துக் கொள்ளலாம் என்றாலும் இந்த கிளுகிளுச்சமாச்சாரங்கள் எதிலுமே அவன் லயித்ததில்லை. ஆர்வம் காட்டியதில்லை.

அவளுக்குத்தான் அவனோட பைக்கில் போகும் போது ஏற்படும் சின்ன உரசலும் அவர்களது

அட்வர்டைஸிங் விளம்பரப் பிரிவு அலுவலகத்தில் ஏற்படும் தோள் உராய்வும் தீ போல் பரவி அவளுள் உணர்ச்சிகளில் பற்றி எரிய வைக்கும்.

அப்போதெல்லாம் என்ன மனிதன் இவன்? கட்டிக் கொள்ளப் போகிறவள் என எப்போதோ உறுதியாயிற்று? பெரிய காதலர்கள் போல் கிஸ், உதட்டு முத்தம் என போகாமல் அவ்வப்போது ஆதரவான ஒரு அணைப்பு செய்து விடுவித்தால் கூட நன்றாக இருக்கும் தானே என்ற நினைப்பு ஓடும்.

கூடவே, இன்பசாகரனின் இந்த வரம்பு மீறாத கண்ணியத்தை நினைத்து கர்வமும் கம்பீரமும் கொள்வாள். மற்ற ஆண்களைப் போல அவள் அபார அழகை உடல் சதையைப் பார்த்து மயங்காமல் அவளை அவள் மனதை மட்டும் இன்பா பார்க்கிறானே... என்ற எண்ணத்தில் பரவசமாவாள்.

இன்றும் அப்படியே இன்பசாகரன் அவள் கைகளைப் பிடித்து குலுக்கியவன் அவள் ஏக்கப் பார்வையை கொஞ்சமும் கவனியாது அவள் முதுகில் செல்லமாய் ஒரு தட்டு தட்டியபடி அடுத்த வேலையை கவனிக்கச் சென்று விட்டான்.

ம்ஹூம்! என தோள்களை குலுக்கி முகத்தை வெட்டியவள் ஓரமாய் இருந்த டிரஸ்ஸிங் ரூமில் சென்று உடைகளை மாற்றிக் கொண்டாள்.

வெளியே வந்த போது இன்பசாகரன் ஸ்கெட்சிங் செய்யும் டிசைனர் பக்கம் நின்று அவனுக்கு சில இன்ஸ்ட்ரக்ஷன்களை கொடுத்து அவன் விரும்பிய டிசைனை



உருவாக்குவதில் மும்முரமாகி விட்டான். இனி இடியே விழுந்தாலும் சரி அவள் பக்கம் திரும்ப மாட்டான். அப்படி ஒரு வொர்க்க ஹாலிக்! வேலைப் பைத்தியம்... அவன்!

ஆபீஸ் முன்புற சோபாவில் பொத்தென அமர்ந்து டீபாயில் கிடந்த ஆங்கில பத்திரிகைகளை சலிப்பாய் எடுத்து புரட்டலானாள்.

'ஜே.கே. அட்வர்டைஸிங்' என்ற பெயரில் இன்பசாகரன் தனது எம்.பி.ஏ.படிப்பை முடித்த கையோடு தொடங்கி நடத்தி வரும் விளம்பரக் கம்பெனி அது. கம்பெனி ஆரம்பித்த முதல் வருடத்தில் போதிய ஆர்டர்கள் கிடைக்காமல் சிரமப்பட்ட நிலை மாறி இப்போது இரண்டாம் வருடத்தில் கொஞ்சம் கொஞ்சமாக ஆர்டர்கள் தேடி வர உற்சாகமாகி விட்டான் இன்பசாகரன்.

இன்பசாகரனின் தந்தையின் ஒன்று விட்ட சகோதரியின் ஒரே மகள் நிர்மலா. சொந்த அத்தை மகள். அவளும் அவன் கம்பெனி ஆரம்பிக்கும் நேரமாய் பார்த்து டிகிரி படிப்பை முடிக்க... அவனது விளம்பரத்துறையில் ஆர்வம் காட்ட... அவளை அப்படியே தன் உதவியாளினியாய் சேர்த்துக் கொண்டு கம்பெனியைத் தொடங்கி விட்டான் இன்பசாகரன்.

நிர்மலாவின் சிவப்பான பளீரிடும் அழகு, வடிவமான உடற்கட்டு, மயக்கமான மலர்விழிகள், பூவாய் உதிரும் முத்துப்பல் சிரிப்பு... என எல்லாவற்றையும் கவனித்து கணித்தவன் அவளையே தனது விளம்பரங்களின் மாடல் அழகியாகவும் ஆக்கிக் கொண்டான்.

அவனது அந்த நிர்மலா மாடல் தேர்வு வந்த ஒன்றிரண்டு விளம்பர வாடிக்கையாளர்களிடையே பெரும் வரவேற்பை பெற... நிர்மலா தான் தனக்கு நிரந்தர மாடல். அவள் ஒருத்தியே தனது விளம்பரங்களுக்குப் போதும் என்ற முடிவிற்கும் வந்து விட்டான் அவன்.

அதனாலேயே நிர்மலா மேல் அவன் காட்டிய அதீத அக்கறை, பாசம் எல்லாவற்றையும் காதலாகவே நினைத்து உணர்ந்த நிர்மலா ஒரு நாள் திடீரென அந்த முடிவிற்கும் வந்தாள். சொந்த அத்தை பையன். தொழிலும் இருவரும் இணைந்தே செயல்படுகிறார்கள். கட்டிக் கொண்டால் தான் என்ன?

அவளுக்கு அந்த கேள்வி எழுந்த உடனே அவள் தாமதிக்கவில்லை. நேரிடையாக அவனிடமே போய் கேட்டாள். அவனும் பெரும் ஆச்சரியத்தில் புருவம் உயர்த்தி, ''வாட்... எ.. கோ... இன்ஸிடென்ஸி! நானும் இதையே தான் இரண்டு நாட்களாய் நினைத்துக் கொண்டிருந்தேன். நீ... உடனே கேட்டு விட்டாய்...!'' என அவன் வியக்க... அவள் கண்களும் மலர்ச்சியுடன் பெரிதாய் விரிந்தது.

''நிஜம்மாகவா... இன்பா?''

''யெஸ்... பேபி...! வி... ஆர்... இன்... த ஸேம் போட். இரண்டு பேருமே ஒரே மாதிரி சிந்திக்கிறோம். செயல்படுகிறோம். வாழ்க்கையில் நாம் இருவரும் இணைவது நல்லதுதான்...!''

''ஓ... ஸ்வீட்... வெரி... ஸ்வீட்... இன்பா...! எங்கே மறுத்து விடுவீர்களோ... என்று பயந்தேன்.''



அவள் தன் உள்ளத்து படபடப்பைச் சொல்ல அவன் பெரிதாய் சிரித்தான். ''நீ என்னுடைய மாடல். நான் உன்னுடைய கோ ஆர்டினேட்டர். உன்னை மறுப்பதாவது?'' என்றபோது கூட அவளுக்கு அவன் தன் அழகை, மனதை பார்க்காமல் தொழில் ரீதியாகவே பார்த்து தன்னை வாழ்க்கைத் துணையாக்க சம்மதிக்கிறானோ? என்ற சந்தேகமும் தோன்றியது.

அதே திகைத்து விழிப்பது போன்ற போஸில் அப்படியே ஓரிரு நிமிடங்கள் சிலையாய் நிற்க... விரல்களால் அவள் கன்னங்களை நிமிண்டி மறுபடிச் சிரித்தான்.

''அதற்குள் கல்யாணக் கனவுகளை கற்பனை பண்ண ஆரம்பித்தாயிற்றா? வெயிட் பேபி. இன்னும் ஒரு ஆறு மாதம் போகட்டும். நம் கம்பெனியை ஒரு நல்ல நிலைமைக்கு கொண்டு வந்து விட்டு உன் கழுத்தில் மூன்று முடிச்சு போட்டு விடுகிறேன். ஓ.கே?''

''தேங்க்யூ... தேங்க்யூ... இன்பா...!'' மறுபடியும் அந்தப் பதிலில் பரவசமாகி நன்றியைத்தான் சொன்னாள் அவள்.

''ஓ.கே.பேபி. இனி வேலையை கவனிப்போம்...'' என்றபடி அகன்று விட்டான் அவன்.

போன மாதம் நடந்தவைகளை நினைத்து பகல் கனவில் லயித்திருந்தவளின் தலையை யாரோ தட்டுவது போல உணர்ந்து நினைவுக்கு வந்தாள்.

எதிரில் அவளது ஆசையான இன்பா தான்!

ஆனால் வழக்கம் போல் இல்லாமல் கோபம் தெறிக்கும் விழிகளுடன்.

''என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் நீ? கொஞ்சமாவது அறிவு வேண்டாம்?'' என்றான் எடுத்த எடுப்பில்.

அவள் திகைத்து எழுந்தாள்.

அவள் முன் பிரிண்ட் செய்து எடுக்கப்பட்ட போட்டோக்களை விசிறினான்.

கொஞ்ச நேரத்திற்கு முன் ஆசையாய் எடுத்து அவன் பாராட்டிய படங்கள்.

''என்னாயிற்று இன்பா?''

''என்னாயிற்று...? உன் முகத்தில் அந்த உதடுகளுக்கு மேலே பார்...! நன்றாகப் பார்!'' என்றான் கோபமாய்.

நிர்மலா புரியாமல் வாங்கிப் பார்த்தாள்.

இப்போது புரிந்தது. அவள் கன்னத்து ஓரமாய் உதடுகளுக்கு மேலே அந்த சிறிய பரு. இரண்டு நாளாய் இருக்கிறது. கண்ணாடியில் பார்க்க லேசாய்த் தெரிந்தது. காமிராக் கண்களில் பளிச்சென ஆகி போட்டோவில் துல்லியமாய் விழுந்திருந்தது.

''ஐயோ! ஸாரி... வெரி... ஸாரி இன்பா...! சிறிய பரு தான். கேமிராவில் அவ்வளவு விழாது என்று நினைத்தேன்...'' என தன் கன்னங்களைக் காட்டி பருவைத் தடவிப் பார்த்தபடி அவள் சொல்ல, ''உன் ஸாரியை... குப்பையில் கொண்டு போடு...!'' என்றான் அவன் எரிச்சலாய்.

''எவ்வளவு அருமையான ப்ராஜெக்ட்? எவ்வளவு சார்ஜ் தருவதாக சொல்லியிருந்தார்கள் தெரியுமா? ஐம்ப



தாயிரம்! சரியான மக்கு... வடிகட்டிய முட்டாள் நீ...! ஒரு இரண்டு நாள் முகத்தில் எதுவும் வராமல் பாதுகாத்திருக்க வேண்டாம். கோட்டை விட்டு விட்டாயே..! சே...! யூஸ்லெஸ்.. ஃபெல்லோ...!''

மக்கு, முட்டாள், யூஸ்லெஸ் பெல்லா... என தன் வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டி ஆத்திரத்தைக் காட்டினான் இன்பசாகரன்.

கொஞ்ச நேரத்திற்கு முன் அவளைப் பாராட்டி கொஞ்சிய உதடுகள் தான் இப்படி அலையாய் வார்த்தைகளை வீசுகிறது.

எல்லாவற்றையும் கண்களை மூடியபடி கேட்டுக் கொண்டாள் நிர்மலா.

கோபத்தின் சிகரமாய் அந்த போட்டோக்களை கிழித்து அவள் முகத்திலேயே விசிறினான். ''எல்லாம் வேஸ்ட்! காலையில் இருந்து நான் காட்டிய உழைப்பு, திறமை எல்லாமே போச்சு...'' என அலுத்தவன் அதே எரிச்சலோடு, ''இதோ பார்..! நீ என்ன செய்வாயோ.... எனக்குத் தெரியாது. இன்னும் இரண்டு நாளில் அந்தப் பரு உன்முகத்தில் இருக்கக் கூடாது. இரண்டு நாள் கழித்து வா. மறுபடியும் போட்டோ செஷன் செய்கிறேன். அதுவரை என் முகத்தில் முழிக்காதே... போ!'' என அங்கிருந்த நாலைந்து ஊழியர்கள் முன்னால் ஏசி அடிக்காத குறையாய் விரட்டினான் அவளது 'ஆசையான 'இன்பா.'

அப்படியே அவமானத்தில் குன்றி குறுகிப் போய் விட்டாள் நிர்மலா.

என்ன தான் இருக்கட்டும். முகப் பராமரிப்பில் அவள் அக்கறை காட்டாதது தவறு தான். அதனால் ஏற்பட்ட குழப்பம் தான். அதற்காக இப்படியா?

இன்னும் ஒரு மாதத்தில் அவளைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறவன் வாயில் இருந்து வரும் வார்த்தைகளா இது?

முதல் முறையாய் வேதனையாய் உணர்ந்து வாடினாள் நிர்மலா.

அதே ரிசப்ஷன் சேரில் அதே வருத்தத்துடன் தலை கவிழ கிட்டத்தட்ட அரை மணி நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள் அவள்.

தற்செயலாய் மீண்டும் முன்புறம் வந்த இன்பசாகரன் அவளைப் பார்த்ததும் எள்ளும் கொள்ளுமாகவே வெடித்தான். ''இன்னும் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்? போ...! என்... முகத்தில் விழிக்காதே...! போ..!''

மறுபடியும் அவன் விரட்ட, ''திரும்பத் திரும்ப இப்படியே சொல்கிறீர்களே இன்பா? நான் வேண்டுமென்றா முகத்தில் பருவை வர வைத்தேன்?'' என்று பொறுக்க மாட்டாதவளாய் அவளும் எதிர்கேள்வி கேட்டாள்.

அதற்கும், ''நோ... எக்ஸ்கியூஸ் நிம்மி. பரு வர விட்டது உன் தவறு. நீ தான் காரணம். என்னுடைய உழைப்பு, கஷ்டப்பட்டு கிடைத்திருக்கிற பெரிய ப்ராஜெக்ட் எல்லாம்.''



# 2

நிர்மலா அன்று அதே அலுப்புடன் கிளம்பி பஸ் பிடித்து வீடு வந்து சேர்ந்தாள்.

முன்ஹாலில் தினப் பேப்பரை புரட்டிக் கொண்டிருந்த தந்தை ராஜமாணிக்கம் நிமிர்ந்து பார்த்தார்.

அவளது சோர்வான நடையை கண்டுபிடித்தவாறு, ''வா... என் அருமை மகளே!'' என்றார்.

ராஜமாணிக்கம் எப்போதும் அப்படித்தான் கேலியும் கிண்டலுமாக பேசுவார். குலுங்க குலுங்க சிரிப்பார். மற்றவர்களையும் சிரிக்க வைப்பார்.

நிர்மலா அவருக்கு எதிரே இருந்த சோபாவில் பொத்தென விழுந்தாள். அவளுக்கு எந்தச் சோகமான மனம் வாட்டமான சூழ்நிலையிலும், தந்தையிடம் அவரைப் போலவே கேலியாய் பேசுவது மிகவும் பிடித்த விஷயம்.

அதனாலே, ''வந்தனம் தந்தையே...'' என கை கூப்பிச் சிரித்தாள்.

''வந்தனம் இருக்கட்டும். இன்றைக்கு என்ன நடந்தது? உன் இனிய இன்பா என்ன செய்தான்?''

"ஹும்..." என தோள்களை பெரிதாக குலுக்கி அலுத்தவள், "இன்பா... இன்று... என்னை துன்பா... வாக்கி விட்டான்..." என்றாள் அதே சலிப்புடன்.

பின் அவளே அதை விவரித்தாள்.

கேட்ட ராஜாமாணிக்கம் அவள் சொல்லி முடித்ததும் பெரிய ஹாஸ்யத்தை கண்டது போல் குலுங்க குலுங்க சிரித்தார்.

"ஐயோ! எதற்குச் சிரிக்கிறீர்கள்?" என்றாள் நிர்மலா விரட்டும் தொனியில்.

"பிறகென்ன நிம்மி? உன் முகத்தில் உனது இனிய இன்பா போட்டோ எடுக்கும் போது ஒரு சிறிய கொசு வர்ந்து உட்கார்ந்தால் கூட போச்சே...! எல்லாம் வேஸ்ட்.... என்று கத்துவானே... அந்தக் கொசுவைப் பிடித்து தண்டிக்க வேண்டும் என்று குதிப்பானே... என்ன சரி தானே?"

அவர் கேட்டதற்கு மறுக்காமல் தலையாட்டினாள் அவள். "சரிதான்! அப்படிப்பட்ட லூசு தான் இந்த இன்பா!" அதே எரிச்சலோடு.

ராஜமாணிக்கம் மறுபடியும் சிரித்தார்.

"அவன் லூசுவோ... இல்லையோ... நீ... அவன் மீது... பைத்தியமாய் இருக்கிறாய்தானே மகளே..."

"ஆனாலும் ரொம்பவும் நோகடிக்கிறார் இந்த இன்பா..." என்றாள்.

"டோண்ட் வொரி... எல்லாம் சரியாகப் போய் விடும்...!" என்றபடி ராஜமாணிக்கம் பக்கத்தில் வந்து பரிவாய்



அவள் தலையைக் கோதினார். "நான் வேண்டுமானால் இன்பாவை கண்டிக்கட்டுமா?" என்றார்.

"வேண்டாம். கண்டித்தால் உங்களிடமும் எரிந்து தான் விழுவார். அந்த இன்பா..."

"ம்ம்... அதுவும் உண்மைதான்..." என ராஜமாணிக்கம் தலையாட்டியவர். "பின் நான் என்னதான் செய்ய? சொல்! என் அருமை மகளே...!" என்றார்.

அதற்கு அவரைப் போலவே தலையாட்டி, "ஒன்றும் செய்ய வேண்டாம். சூடாக ஒரு காபி கப் அண்ட் ஸாஸரில் போட்டுத் தருகிறேன். ரஸித்துக் குடியுங்கள்... ஓ.கே.யா?" என்று சிரித்தபடி எழுந்தாள். கிச்சனை நோக்கி நடந்தாள்.

"உத்தரவு... இளவரசி...!" என காத்திருக்க ஆரம்பித்தார் ராஜமாணிக்கம்.

சிறு வயதிலேயே தாயை பறிகொடுத்து தந்தையின் அரவணைப்பிலேயே வளர்ந்தவள் நிர்மலா. பேங்க் ஒன்றில் மேனேஜராய் வேலை பார்த்து ஓய்வு பெற்றவர் ராஜமாணிக்கம். அவளை எந்த குறையுமில்லாமல் எந்த கஷ்டமும் தெரியாமல் அன்பாகவே வளர்த்தார் அவர்.

அதனாலே அவள் ஆசைப்பட்டது, கேட்டது என அத்தனையையும் அவள் மகிழ்ச்சிக்காகவே நிறைவேற்றுவார். கல்லூரியிலும் அவள் விரும்பிய பியூட்டிசியன் படிப்பை படிக்க அனுமதித்தார். அவள் இன்பாவை கட்டிக் கொள்ள அனுமதி கேட்ட போதும் துணிந்து பச்சைக் கொடி காட்டினார்.

அவரைப் பொறுத்தவரையில் நிர்மலா எது சொன்னாலும் எந்த பிரச்சினையானாலும், "உன் இஷ்டம்,

இட்ஸ் யூவர் ஒன் சாய்ஸ் பேபி...!'' என செல்லமாய் முதுகில் தட்டி அனுமதிப்பதையே தனது வழக்கமாய் பெரும் கொள்கையாய் கொண்டிருந்தார்.

நிர்மலாவும் தனது தந்தை காட்டும் பாசத்தில் நெகிழ்ந்து பதிலுக்கு அவர் மீது அன்பு மழையை பொழியத்தான் செய்வாள்.

சிறு குழந்தை போல் இன்னமும் அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு தான் தூங்குவாள். காலை பெட் காபியில் இருந்து இரவு உணவு வரை அவரது விருப்ப மறிந்து சுவையான உணவுகளை தயாரித்து பரிமாறு வாள். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவருடன் வாக்கிங்கில் கலந்து கொண்டு நடப்பாள்.

இரவு படுப்பதற்கு முன் ஒன்று விடாமல் ஊர் உலக விஷயங்களை இருவரும் அலசுவார்கள். மணிக்கணக் கில் பேசுவார்கள். சொல்லப் போனால் அவளுக்கு தந்தை ஒரு 'டியர் ப்ரெண்ட்' போலத்தான் என அடிக்கடி நினைப்பாள். தோழிகளிடம் பெருமையாய் சொல்லி மகிழ்வாள்.

ஆயிற்று. ஒரு வழியாய் தந்தைக்கு சூடான காபியை கொடுத்து தானும் ஒரு காபி கோப்பையுடன் சோபாவில் உட்கார்ந்தாள்.

செல்போன் கிணுகிணுத்தது.

எடுத்தாள். ஒருவேளை இன்பாவாய் இருக்குமோ...? கோபமாய் தன்னிடம் நடந்து கொண்டதற்கு ஞானம் வந்து மன்னிப்பு கேட்க... நினைத்திருப்பானோ...? அவளது நினைப்பு பொய்யானது. செல்போன் திரையில்



புதிய நம்பர் ஒன்று பளிச்சிட்டபடி சுவாரஸ்யமில்லாமல் பட்டனை அமுக்கி ''ஹலோ...'' என்றாள்.

''ஹலோ... மிஸ்... நல்வரவு... உங்களுக்கு...!'' என்றது தேன் தடவும் ஓர் ஆண் குரல். நிர்மலா திடுக்கிட்டாள்.

''நல் வரவா...? யாரது?'' என்றாள் கோபமாக.

''ஆமாம்! நல்வரவு! இனிய பூபாளம் ஒலிக்க... குயில் கள் மெல்லிசையாய் கூவ... உங்களுக்கு வந்தனம்...! இனிய நல்வரவு...!'' என்றது அந்த குரல் மீண்டும்.

''ஹலோ...மிஸ்டர்... யாரது...?'' உங்களுக்கு யார் வேண்டும்?'' என்றாள் எரிச்சலாக.

''நான் சரியாகத்தான் பேசுகிறேன் என்று நினைக் கிறேன்... நீங்கள்... நிர்மலா தானே? ஜே.கே.அட்வர் டைஸிங் புகழ் நிர்மலா தானே?'' என்றதும் நிர்மலா குரலை தாழ்த்தினாள்.

''யெஸ்! சொல்லுங்கள்!'' என்றாள் அதிகம் பேச விரும் பாதவளாய்.

''மிஸ் நிர்மலா உங்களுக்குப் பாராட்டுக்கள்.' உங் களது... சென்ற வாரம் வெளியான 'ஷாம்பூ' விளம்பரம் பார்த்தேன். மிக அழகாக மாடல் செய்திருந்தீர்கள். அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதற்காக உங்களைப் பாராட்டவே... உங்கள் அலுவலகத்தில் நம்பர் வாங்கி னேன்... இப்போது... போன் செய்து உங்களை பாராட்டு கிறேன்...''

நிர்மலா இன்பா மேல் கொண்டிருந்த எரிச்சலினாலோ என்னவோ அவன் சொன்ன ஒன்றையும் அவள் ரஸிக்க வில்லை. ரஸித்ததாக காட்டிக் கொள்ளவில்லை.

அதனாலே, ''அப்படியா? இப்போது என்னை பாராட்டி விட்டீர்களா? உங்களது ஆசை நிறைவேறி விட்டதா? போதுமா? போனை இப்போது வைத்து விடலாமா?'' என்றாள் திரும்பவும் வெடுக்கென.

''ஹலோ... மிஸ்... என்ன ரொம்பவும் கோபமாக சூடாக இருக்கிறீர்கள் போல் தெரிகிறதே...''

குரல் கேலியாய் கேட்டதும் மறுபடியும் கொதித்தாள்.

''ம்ம்... கோபம் தான்! ரொம்பவும் சூடாகத்தான் இருக்கிறேன். நீங்கள் ஒரு வண்டி நிறைய ஐஸ் கட்டிகள் வாங்கி என் முகவரிக்கு அனுப்புகிறீர்களா? குளிர்ந்து விடுகிறேன்!'' என்றவள் அதே எரிச்சலுடன் பதிலுக்கு காத்திராமல் பட்டனை அழுத்தினாள். இணைப்பைத் துண்டித்தாள்.

'இப்படி ஒரு நபரிடம் கூட சாதாரணமாய் போன் பேச முடியாதபடி மூட் அவுட் செய்து என்னை ரொம்பவும் இம்சை செய்கிறீர்களே இன்பா!' என கத்த நினைத்து அடக்கிக் கொண்டாள்.

ஆனாலும் ஒரு முன்பின் தெரியாத நபரிடம் இப்படி முகத்திலடித்தாற் போல் பேசியிருக்கக் கூடாது... என்ற உணர்வு எரிச்சலாய் எழும்ப அதையும் கட்டுப்படுத்தி னாள்.

இன்பாவின் ஒரு சின்ன கோபம் தன்னை இவ்வளவு தூரம் பாதிப்பை ஏற்படுத்துகிறதே... எதனால்? என திகைப்பாகவே யோசித்தாள்... அவள்!



# 3

மறுநாள் ஸ்கூட்டியை ஸ்டாண்ட் செய்து விட்டு கூட்டமில்லாத அந்த ரெஸ்ட்டாரண்டின் ஓரமான இருக்கையொன்றாய்ப் பார்த்து அமர்ந்தாள் நிர்மலா.

மேஜையில் கிடந்த மெனுகார்டை அவள் புரட்டிப் பார்த்த நேரத்தில், ''ஐஸ் கட்டிகள்... கிடைக்கவில்லை சின்னதாய் ஒரு ஐஸ்க்ரீம் அதுவும் எல்லோருக்கும் பிடித்தமான வெனிலா... உங்களுக்காக நான் ஆர்டர் செய்யட்டுமா?'' என்ற கணீர்க் குரலோடு எதிரில் உட் கார்ந்தான் அவன்.

ஒரு கணம் திடுக்கிட்டுத்தான் பதறிப் பார்த்தாள் அவள்.

அலை அலையாய் படர்ந்த சிகையுடன் நெடு நெடு உயரத்தில் திடமான உடற்கட்டுடன் முப்பது வயதுக் காரனாய் அவன் உட்கார்ந்திருந்தான்.

''நீங்... நீங்கள்... நீங்கள்...''

அவள் குரலில் திணற, ''நான்... நான் தான்... உங் களுக்கு போன் செய்தவன்... உங்களை எரிச்சல் படுத்தியவன்....'' எனச் சொல்லிவிட்டு வசீகரச் சிரிப்

பொன்று சிரித்தான். நிர்மலாவுக்கு தான் முகத்திலடித் தாற் போல் பேசி வைத்தது ஞாபகம் வந்தது.

சங்கடமாய் நெளிந்தபடி, ''ஐ... ஆம்... ஸாரி...'' என் றாள்.

''நோ! நோ...!'' என்றபடி அவன் தலையை வேகமாய் அசைத்தவன், ''என்னிடம் நீங்கள் ஸாரியெல்லாம் கேட்க வேண்டிய அவசியமில்லை. நான் உங்கள் ரசிகன்!'' என் றான் அவன் கண்கள் மின்ன.

நிர்மலாவுக்கு பெரும் வியப்பு.

''என்ன ரசிகனா?' என்றாள் அதே ஆச்சரியத்துடன்.

''எப்படி? சொல்லுங்கள்...!'' என்று அவள் கேட்ட போது, ''சொல்கிறேன். ஆனால் அதை ஒரு வெனிலா ஐஸ்க்ரீமை சுவைத்தபடியே செய்யலாம் அல்லவா?'' என கெஞ்சுவது போல் அவன் கேட்க புன்னகையுடன் தலையாட்டினாள் அவள்.

அந்த அவளது முத்துப்பல் சிரிப்பை உற்றுக் கவனித் தவன், ''பிரமாதம்! உங்கள் புன்னகை அந்த முத்துப் பல் சிரிப்பு கூட கிணுகிணுவென இனிமையாய் இசைப்பது போல் அல்லவா இருக்கிறது...'' என அவன் புகழாரம் சூட்டிய போது, 'வரிசையான பற்களுடன் கூடிய உங்கள் சிரிப்பும் பிரமாதம் தான்...!' என சொல்ல வந்த வாயை அடக்கி உதடுகளை இறுக்கினான்.

''ரொம்பவும் ஐஸ் வைக்கிறீர்கள். எனக்கு ஜல தோஷம் வந்துவிடும். விஷயத்திற்கு வருகிறீர்களா?'' என்றாள் அவள் முன் பின் தெரியாத அந்நியன் அவன் என்பதை உணர்ந்தவள் போல்.



அவன் படிய வாரிய அவனது அழகான சிகையை அசைத்தபடி, ''அப்படியில்லை... மிஸ். நிர்மலா... எனக்கு ரசனை கொஞ்சம் அதிகம். மனதில் தோன்றுகிறதை அப்படியே கொட்டி விடுவேன்...'' என்றவன் அவள் பார் வையில் தொனித்த அந்நியத்தன்மையை உணர்ந்தது போல், ''முதலில் என்னை அறிமுகப்படுத்திக் கொள் கிறேன்...'' என்றான்.

''மிஸ். நிர்மலா, ஐ... ஆம்... சரவணன். 'சரவணா அட் வர்டைஸிங்...' என்ற பெயரில் விளம்பரக் கம்பெனி யொன்று தொடங்கி நடத்தி வருகிறேன். போன வாரம் வெளியான உங்களது ஷாம்பூ விளம்பரம் பார்த்தேன். அதில் பட்டுப் போன்ற மிருதுவான உங்களது கூந்தல் பளபளக்க... தலைசாய்த்து சிரித்தபடி நீங்கள் நின்ற போஸ் அப்படியே என் மனதை கவர்ந்து விட்டது. அதற்காக உங்களைப் பாராட்டத்தான்...'' என்றபடி நிறுத் தினான்.

''புரிந்து விட்டது...'' என்றாள் நிர்மலா.

கூடவே நிர்மலாவுக்கு டக்கென அந்த ஷாம்பூ விளம்பரமும், அந்த விளம்பரத்திற்காக பலமுறை கேமிரா முன் தலைசாய்த்து நின்று சிரித்ததும், இன்பசாகரன் அப்போது, ''இது... சரியில்லை... அது... சரியில்லை... என்ன சிரிப்பு இது? பேக்கு மாதிரி ஒரு இளிப்பு இளிக் கிறாய்...? உன் வாயைத் திறந்து அத்தனை பற்களையும் காட்டு...'' என்றெல்லாம் திட்டி தீர்த்ததும் தான் ஞாபகம் வந்தது.

அன்றும் இன்பசாகரன் எள்ளும் கொள்ளும் வெடிக்க திட்டியதில் அவளுக்கு தலைவலியே வந்துவிட

எரிச்சலாய்த்தான் அந்த 'ஷாம்பூ' போஸைக் கொடுத் தாள்.

அது நன்றாக வந்திருக்கிறதா? இவன் ரஸித்து பாராட் டும்படி அமைந்திருக்கிறதா?

அவள் கண்கள் விரிய பார்த்ததை உற்றுப் பார்த்தவன் கண்டுபிடித்தவன் போல், ''என்ன நான் சொன்னதை நம்பவில்லையா? நீங்கள் அந்த விளம்பர போஸில் மிக அழகாக நடித்திருக்கிறீர்கள். மேலும்... நான்... நானும் இந்தத் துறையைச் சார்ந்தவன். விளம்பர கம்பெனி வைத்திருப்பவன். உங்களுக்கு சக போட்டியாளன்.... நானே வலிய வந்து உங்களை பாராட்டுகிறேன்... என்றால்... புரிந்திருக்குமே!'' என்றபடி சிரிக்க, அவன் சொன்ன போட்டியாளன் என்பது நிர்மலாவுக்கு அப்போது தான் மூளையில் படீரென உரைத்தது.

அடடா...! இப்படி ஒரு விளம்பர கம்பெனி ஆளுடன் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தாலே இன்பசாகரன் அவளை, ''குமுட்டை! குமுட்டை! உனக்கு அறிவிருக் கிறதா?' என்றெல்லாம் திட்டி ஒரு வழி பண்ணி விடு வானே?

அவன் தப்பித்தவறி இந்த ஹோட்டல் பக்கம் வந்து விடக் கூடாது. அவளைப் பார்த்து விடக்கூடாது என்ற பயத்தில் பணியாள் கொண்டு வந்த வெனிலா கப்பை வாங்கி படபடவென காலி செய்ய ஆரம்பித்தாள்.

''பார்த்து... பார்த்து... மெதுவாக... மெது... வாக... ஐஸ்... க்ரீம்... தொண்டையில் அடைத்துக் கொள்ளப் போகிறது...'' என்று அவன் சொன்னதை காதில் வாங்காதவள் போல், ''மிஸ்டர் சரவணன், உங்கள் பாராட்டுதலுக்கு எனது



மனமார்ந்த நன்றி...! எனக்கு நிறைய வேலைகள் இருக்கிறது. நான் கிளம்பலாமா?'' என்றபடி சாப்பிட்டு முடித்து கர்ச்சீப்பால் துடைத்துக் கொண்டு எழுந்து விட்டாள்.

அவள் அப்படி பேச்சை கட் செய்து கிளம்புவாள் என சரவணன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. முகத்தில் தொனித்த ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டே,

''ஓ.கே. மிஸ் நிர்மலா. உங்களது பொன்னான நேரத்தை நான் வீணாக்க விரும்பவில்லை. இன்னொரு முறை சந்தித்து நிதானமாய்ப் பேசுவோம்...'' என்றான்.

பதிலுக்கு, ''ம்ம்... பார்ப்போம்...'' என்றபடி ஒரு ரெடி மேட் புன்னகையை உதிர்த்தபடி வேகமாக விடைபெற்று நடக்க ஆரம்பித்தாள்.

அப்படி நடக்க ஆரம்பித்தவளுக்கு அவன் அந்த சரவணன் அவளையே வைத்த கண் வாங்காமல் முதுகு துளைக்கும் பார்வை பார்ப்பது போல் குறுகுறுப்பாய் தெரிந்தது.

அது உண்மைதானா... என்று அறிய டக்கென திரும்பிப் பார்த்தாள்.

என்ன ஆச்சரியம்! சரவணன் அவள் நினைத்தது போலவே... அவளையே பார்வையால் வெறித்துக் கொண்டு... இருந்தான்.

அவள் அப்படித் திரும்பிப் பார்த்ததும் சமாளித்து, கைகளைத் தூக்கி 'பை...' என்பது போல் காட்டினான்.

அவளும் அவளையறியாமலே பதிலுக்கு.

''பை! பை!'' என்றபடி நடந்தாள்.

நிர்மலாவுக்கே பெரும் வியப்பு தான்! இதுவரை முன் பின் பார்த்திராத ஒருவனிடம் எவ்வளவு இலகுவாய் பேசி விட்டாள்? பேசியதோடு மட்டுமில்லாமல் ரொம்ப நாள் பழகியது போல், 'பை...' சொல்லிக் கொண்டு அல்லவா... நடந்து கொண்டிருக்கிறாள்? எப்படி இது நிகழ்ந்தது? திகைப்பு விலகாமலே நடந்து கொண்டிருந் தாள் அவள்.

# 4

மறுநாள் முன்பு எடுத்த அந்த மல்டி பிராண்ட் கம் பெனியின் போட்டோ செஷன். இரண்டு மூன்று நாள் கண்ட கண்ட ஸ்கின் க்ரீம்களை உபயோகித்து கன்னத்து ஒரு பருவை ஒருவாறு விரட்டியடித்து இருந்தாள் நிர்மலா.

இன்பாவின் அலுவலகத்திற்குள் பயந்த பள்ளி மாணவி போல் தான் அன்று நுழைந்து முகத்தை இன்பசாகர னிடம் காட்டினாள்.

''ரைட்! இதை நீ முன்பே செய்திருக்க வேண்டும்...'' என்றான் அவன்.

அப்போது கூட அன்று அவளை எல்லோர் முன்னிலை யிலும் திட்டியதற்கு, இரண்டு நாள் அவன் முகத்தில் அவளை முளிக்காமல் இருக்கச் செய்ததற்கு எதாவது



வருத்தம் தெரிவிப்பான் என்றெல்லாம் அவள் எதிர்பார்த் தாள்.

ஆனால்... இன்பாவாவது அவளது உணர்வுகளை புரிந்து கொள்வதாவது?

''ம்ம்... என்ன அப்படியே போஸ் கொடுத்து நின்று கொண்டிருக்கிறாய்? கமான் க்விக்! ட்ரெஸ்ஸிங் ரூம் சென்று உடை மாற்றி வா...! சீக்கிரம்...! எனக்கு நிறைய வேலைகள் இருக்கிறது...!''

கல்நெஞ்சனாய் விரட்டினான் அவன்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் அவள் ரெடியாகி விட விறுவிறுவென போட்டோக்களை எடுத்தான் இன்ப சாகரன். முன்பு போல் இல்லாமல் அவன் அதை பிரிண்ட் போடும் வரை கூடவே நின்றாள்.

பிரிண்டில் பார்த்து, ''இப்போது ஓ.கே! சரியாக வந்து விட்டது...'' என்று அவன் சொன்னதும்தான் அவளுக்கு நிம்மதி.

அப்பாடா! இனி அடுத்த போட்டோ செஷன் வரை அவனிடம் ஏச்சு வாங்க வேண்டியதில்லை...! என பெருமூச்சும் விட்டாள்.

ஆனால் இன்பசாகரன் அடுத்த சில நிமிடங்களில் அவள் பக்கம் வந்தவன் நின்று மேலும் கீழும் அவளைப் பார்த்தான்.

''என்ன இன்பா?''

''வேறு ஒன்றுமில்லை. அடுத்தாற் போல் ஒரு உடல் ஃபிட்னெஸ் பற்றிய விளம்பரப் படம் எடுக்க வேண்டும். அதற்கு ஸ்லிம்மான பெண்ணின் உடல் வாகு தேவை.

உனக்குப் பொருத்தம் தான். உன்னையே உபயோகப் படுத்திக் கொள்ளலாம் என்று பார்த்தேன். ஆனால்...'' என அவன் இழுத்ததும் பதறத்தான் செய்தாள்.

''என்ன இன்பா... ஆயிற்று...?''

''பார்... உன் இடுப்புப் பகுதி... அந்த வயிற்றுப் பக்கம் கொஞ்சம் தடித்திருக்கிறது. எதையோ மூக்குப் பிடிக்க சாப்பிட்டிருக்கிறாய். மாடலாய் இருக்கிறாய். டயட்டில் இருக்க வேண்டும்... சாப்பிட வேண்டும் என்று கூட உனக்குத் தெரியவில்லையே...'' தோள்கள் குலுங்க அலுத்தான் அவன்.

''ஐயோ இன்பா...! நான் அப்படி ஒன்றும் சாப்பிட வில்லை. எப்பவும் டயட் தான். காலையில் ஒரு சப் பாத்தி மதியம் ஒரு கப் காய்கறிச் சாதம்... இன்னும்...''

அவள் மேலே சொல்வதற்குள் கைகளை உயர்த்தி, ''ஸ்ஸ்... நிறுத்து...'' என்றான் அவன் பின் அவள் பக்கம் வந்து, ''முட்டாள் மாதிரி சொன்னதையே சொல்லிக் கொண்டு இருக்காதே! எனக்கு தொழிலில் பர்பெக்ஷன் முக்கியம். இரண்டு நாள்... என்ன செய்வாயோ...'' என்றவன், ''வேண்டுமானால் ஜிம்முக்குச் சென்று அந்த இடுப்பு தடிப்பை குறைத்துக் கொண்டு வா. புரிகிறதா?'' என்றான் விரட்டலான குரலில்.

நிர்மலா சலிப்புடன் அவனைப் பார்த்தவள் வாய் விட்டே கேட்டு விட்டாள்.

''என்ன இன்பா... உனக்கு அன்பாகவே பேச வராதா? எப்போதும் என்னை விரட்டிக் கொண்டே இருக்கிறாய்... என்ன நான் சொல்வது உண்மைதானே...?'' எனவும் உறுதிப்படுத்துவது போல் கேட்டாள்.



அவள் கேட்டதற்கு லேசாய் தலையை சிலுப்பியபடி அவள் தோள்களில் உரிமையாய் கை வைத்து திருப்பி நேருக்கு நேர் அவள் கண்களைப் பார்த்தான் இன்ப சாகரன்.

''இதோ பார் பேபி, உன்னிடம் எனக்கு நிறைய உரிமை இருக்கிறது. அதனாலே கோபப்படுகிறேன். தொழிலில் ஏற்படும் மொத்த எரிச்சலையும் உன் மீது காட்டுகிறேன். அது உன் மக்கு மூளைக்கு... மரமண் டைக்கு ஏன் புரிவதில்லை...?'' என அதிலும் ஒரு குட்டு வைத்தான் அவன்.

''ஆனால்... ஆனால்... நானும் ஒரு சராசரிப் பெண் தானே...? எனக்கும் உணர்ச்சிகள் உண்டுதானே?''

அவள் ஏக்கமாய் கேட்டதற்கு கண்களை விரித்து முறைக்கவே செய்தான். ''உன் உணர்வுகளை குப்பை யில் கொண்டு போடு. எனக்கு தொழிலில் பர்பெக்ஷன் ரொம்பவும் முக்கியம். தப்பு செய்தால் ஏசத்தான் செய் வேன். அதற்காக காதலி போல உன்னை சதா தலையில் தூக்கி வைத்து கொஞ்சிக் கொண்டு இருக்கச் சொல் கிறாயா? சரியான முட்டாளாய் இருக்கியே...!''

''அப்படியில்லை இன்பா... இன்னும் ஓரிரு மாதத்தில் நாம் கல்யாணம் வேறு செய்து கொள்ள இருக்கிறோம்...''

அவள் முடிக்கவில்லை. சீறினான் அவன்.

''அதற்காக... பொண்டாட்டி தாசனாய் உன் காலடியில் கிடக்கச் சொல்கிறாயா?'' என்றவன் கைகளின் சுட்டு விரலை அவளிடம் எச்சரிப்பது போல் காட்டி, ''கல் யாணத்திற்குப் பின் இவளை வளைத்து விடலாம். உன்

முந்தானையைப் பிடித்துக் கொண்டு அலைய விட லாம்... என்றெல்லாம் ஆசை வைத்திருந்தால் இப் போதே அதை மாற்றிக் கொள். இந்த இன்பா எப்பவும் இப்படித்தான் இப்படித்தான் இருப்பான். புரிந்து கொள்...!''

'போதுமடா... சாமி...!' என அவள் காதுகளை பொத் திக் கொண்டாள். கேட்டதற்கு நன்கு வாங்கி கட்டிக் கொண்டாயிற்று? இனி என்ன? அவன் தான் தெள்ளத் தெளிவாய் சொல்லி விட்டானே? கல்யாணத்திற்குப் பின்னும் அவன் இப்படித்தான் அவளை உருட்டி மிரட்டி விரட்டிக் கொண்டிருப்பானாம். அதைச் சொல்லாமல் சொல்லி விட்டான்... பாதகன்! கட்டிக்கொள்ளப் போகிற வளிடம் ஒரு காதலன் போல்... கொஞ்சக் கூட வேண் டாம்... அன்பாய் பேசக்கூடவா தெரியாது?

அதற்கு மேல் இன்பசாகரனும் அங்கு நின்று கொண் டிருக்கவில்லை. ''ஏய்... ஏய் முட்டாள்... உன்னை யார் கேமிரா ஸ்டாண்டை நகர்த்தி வைக்கச் சொன்னது?'' என பணியாள் ஒருவனை வேகமாய் திட்டியபடி அகன்று போய் விட்டான்.

'சரியான முசுறு! இவனை கட்டிக் கொண்டு... எப்படித் தான் மாரடிக்கப் போகிறோமோ...?' என மீண்டும் ஒரு முறை அதற்காக கவலைப்பட்டாள் நிர்மலா.

நிர்மலா எப்படியோ அதே போல் இன்பசாகரனும் அத்தை மாமாவிற்கு ஒரே மகன். எம்.பி.ஏ.முடித்த கையோடு சொந்தக் கம்பெனி வைக்கிறேன் என ஆட்ட மாய் ஆடி மாமாவின் ரிட்டையர்மெண்ட் மூலம்



கிடைத்த பத்து லட்ச பணத்தையும் பிடிவாதமாய் போட்டு கம்பெனியை ஆரம்பித்து விட்டான்.

அவர்களுக்கும் மகனின் பிடிவாதம் கோபம் பற்றி தெரியுமாதலால் வழி இல்லாமல் சம்மதித்தனர். நிர்மலா வாரம் ஒரு முறையாவது அத்தையைப் பார்க்கப் போய் விடுவாள். அப்போதெல்லாம் அத்தை அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''இந்த இன்பாவை கல்யாணம் கட்டி நீதான் திருத்த வேண்டும். உன் கைகளில் தான் இருக்கிறது...'' என்பாள்.

''அட... நீங்கள் கவலையை விடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன். அவரை அப்படியே வளைத்து உங்கள் முன் எனக்கு குட்டிக்கரணம் கூட போடச் செய்கிறேன். போதுமா?'' என்பாள் விளையாட்டாய்.

ஆனால் இப்போது இன்பசாகரன் சொல்வதைப் பார்த் தால், அவனை திருத்துவதாவது திருத்தி வளைப்ப தாவது...? அவன் அல்லவா அவளை பெண்ட் எடுக்கப் போவதாய் அல்லவா சொல்லி வருகிறான்...?

அதே குழப்பமான மனநிலையில் எதுவும் தோன்றா மல் எழுந்து நடந்தாள். அவளுக்கு நீலா ஞாபகம்தான் வந்தது.

நீலா அவளது உற்ற கல்லூரித் தோழி. அவளது அட்வர்டைஸிங் கம்பெனிக்கு பக்கத்திலிருக்கும் மல்டி காம்ப்ளெக்ஸ் பில்டிங்கில் சொந்தமாக அழகு சாதனங் களுடன் கூடிய 'பியூட்டி ஷாப்' நடத்தி வருபவள்.

நிர்மலா வந்து விட்டாள் போதும் கடையை பணி யாளர்களிடம் பார்க்கச் சொல்லி விட்டு வம்பளக்க

ஆரம்பித்து விடுவாள். இருவரும் மணிக்கணக்காய் பேசுவார்கள்.

நீலாவிடம் அடிக்கடி இன்பசாகரனின் குணத்தைப் பற்றி அவள் சொல்லி அலுக்க, பதிலுக்கு அவள், 'நீ சொல்வதைப் பார்த்தால் அவன் இன்பசாகரன் இல்லை. துன்பசாகரன். அவனை விட்டால் உனக்கு வேறு ஆளே கிடைக்காதது போல் அலைகிறாயே...?' என்று தான் பழிப்பாள்.

அன்றும் அப்படித்தான் அவளது பொட்டிக் ஷாப் சென்று உட்கார்ந்தாள். நீலா உள்ளிருந்தவள் ஓடோடி வந்து விட்டாள். இருவரும் கதையளக்க ஆரம்பித்தனர்.

ஒரு மணி நேரம் கழித்து அவளுடன் பேசி முடித்த திருப்தியில் நிர்மலா எழுந்தாள். அவளிடம் விடை பெற்று கிளம்பினாள்.

அந்த மல்டி காம்ப்ளெக்ஸின் நிறுத்தத்தில் தன் ஸ்கூட்டியை எடுக்கப் போனாள். ஏதோ யோசனையில் கீயை எடுத்து ஹாண்ட்பேர் லாக்கை விடுவித்தவள் ஸ்டாண்டை தூக்கி விட்டு ஒரு கையினாலே வண்டியை பிடித்தபடி உட்காரப் போக சட்டென பாலன்ஸ் தவறியது அவளுக்கு.

அவளது பிடிப்பை விட்டு விலகி எதிர்புறமாய் ஸ்கூட்டி சாய்ந்தது. அவள் சுதாரிப்பதற்குள் வண்டியோடு எதிர்புறமாய் அப்படியே விழப் போனாள்.

நல்லவேளை! சட்டென ஒரு கரம் அபயப்பிடிப்பாய் சாயப் போனவளின் தோள்களைப் பற்றியது. கீழே விழுந்து விடாமல் காத்து நேராய் தூக்கி நிறுத்தியது.



ஆனால் ஸ்கூட்டியின் முன்புற ஹாண்ட்பார் சரியாக பக்கத்தில் நின்றிருந்த மாருதி கார் ஒன்றை பலமாய் இடித்து அதன் ஹெட்லைட்களை நொறுங்கலாய் துவம்சம் செய்திருந்தது.

'ஐயோ!' என அலறிக்கொண்டே நிலைக்கு வந்தாள் நிர்மலா.

சட்டென தன்னை தாங்கிப் பிடித்த கரங்களுக்கான சொந்தக்காரனை திரும்பிப் பார்த்தாள்.

புன்னகையுடன் அங்கு சரவணன் நின்று கொண்டிருந்தான்.

## 5

சரவணனை நிர்மலா அங்கு சற்றும் எதிர்பார்க்காததால் கொஞ்சம் தடுமாறவே செய்தாள். ''நீங்கள்... நீங்கள்...'' என்றாள் ஞாபகப்படுத்துவது போல்.

''யெஸ்... சரவணன்! சரவணா அட்வர்டைஸிங் சரவணன். உங்களுக்கு போன் செய்தவன்... அன்று ரெஸ்ட்டாரண்ட் வெனிலா ஐஸ்...க்ரீம்...''

அவன் மேற்கொண்டு சொல்வதற்கு முன்,

''புரிந்தது... புரிந்தது...'' என்றாள்.

'அப்பாடா...! என்னையும் உங்களது அழகான தலைக் குள் கொஞ்சமாவது ஞாபகப்படுத்தி வைத்திருக்கிறீர் களே... அதற்கு... மிகவும் நன்றி...'' என்றான்.

சட்டென சூழலை மறந்து சிரிக்கப் போனவள், உணர்ந்தவளாய், ''ஐயோ... ஸாரி... நான் தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். நீங்கள் மட்டும் பிடிக்காவிட்டால் நான் டொம்மென விழுந்திருப்பேன்...'' என்றாள் பயம் விலகாமலே. கூடவே ஸ்கூட்டியை சரி செய்து நேராய் நின்றாள். சரவணன் வண்டியை மேலும் கீழும் பார்த்தவாறு ''எதனால் இந்த தடுமாற்றம்? ஸ்டாண்ட் சரி இல்லையா...?''

''இல்லை... நான் தான் எதோ சிந்தனையில் பாலன்ஸ் செய்யாமல்...'' என்றவள் பார்வையில் தனது ஸ்கூட்டி யால் நொறுங்கிய மாருதியின் ஹெட்லைட் கண்ணாடி கள் தெரிய, ''போச்சு...!'' என கத்தவே செய்தாள்.

திகைத்த சரவணனிடம் உடைந்தவைகளை காட்டி னாள். ஸ்கூட்டி விழுந்து உடைந்திருக்கிறது. கார் யாரு டையதோ? அதன் உரிமையாளர் பார்த்தால் அவ்வளவு தானே! இனி... என்ன செய்யப் போகிறேனோ...? பணம் வேறு கொண்டு வரவில்லை...'' என்றபடி கைகளைப் பிசைய ஆரம்பித்தாள்.

அவளது தவிப்பை கொஞ்ச நிமிடங்கள் ரஸித்த சரவணன் சிரிப்பு மாறாமல், ''பதட்டம் வேண்டாம்'' என் றான்.

''உங்களுக்குத் தெரியாது... எத்தனை கார் உரிமை யாளர்களை பார்த்திருக்கிறேன். சின்ன ஸ்க்ராட்ச் ஒன்று காரில் பட்டாலே தாம்தீம்மென்று குதித்து ரகளை



பண்ணி விடுவார்கள் இன்று என்ன நடக்கப் போகி றதோ?'' அவள் மறுபடியும் நடுங்க சரவணன் நகைப்பை பெரிதாக்கினான்.

''மிஸ் நிர்மலா நீங்கள் ஒன்றும் பயப்பட வேண்டாம். இந்த கார் உரிமையாளர் உங்களை ஒன்றும் செய்ய மாட்டார்...'' என்றாள் குரலில் உறுதி தொனிக்க.

''எப்படி... எப்படிச் சொல்கிறீர்கள்? அவரை உங் களுக்குத் தெரியுமா? அப்படி ஒரு இளிச்சவாயர் உல கத்தில் இருக்கவா செய்கிறார்கள்...?''

அவள் முடிப்பதற்குள், ''ம்ம்... இருக்கிறார்கள். அது வும் உங்கள் எதிரிலேயே நின்று கொண்டு.. உங்களிடம் பேசிக் கொண்டு...'' என்றபடி குறும்புப் பார்வையுடன் அவன் நிறுத்தினான்.

சட்டென திகைத்து அவனையே உற்றுப் பார்த்தவள் வியப்பில் கண்களை விரித்தாள்.

''ஓ.... அப்படியானால்... அந்தக் கார்... உரிமையாளர்... நீங்கள்... நீங்கள்தானா... உங்களுடைய கார்தானா...?' என்றாள் தட்டுத் தடுமாறி.

''யெஸ்...! அந்தக் கார் உரிமையாளர் நீங்கள் சொன்ன இளிச்சவாயர் நான் தான்...!'' என்றான் சரவணன் கொண் டிருந்த சிரிப்பு மாறாமல் அவள் தவறை உணர்ந்தவ ளாய், ''ஐ... ஆம்... ஸாரி... கவனிக்கவில்லை...!'' என் றாள்.

''பரவாயில்லை...! நீங்கள் அப்படி இடித்ததற்கு நன்றி தான் சொல்ல வேண்டும். இல்லையென்றால் உங்களை இன்னுமொரு முறை சந்திக்க வாய்ப்பு கிடைத்திருக்

காதே...?'' என்றவன், ''மேலும் நான் உங்கள்... ரசிகர்...'' என முடித்தான்

''ரசிகரா?''

''ம்ம்...'' என வேகமாய் தலையசைத்த சரவணன் அவன் முன்பு மாடலிங் செய்திருந்த மயில் தோகை வண்ண துணி விளம்பரத்தை நினைவுபடுத்தினான். வெகு குழந்தைத்தனமான முகத்துடன் கணகவரும் சிரிப்புடன் அவன் செய்திருந்த அந்த மாடலிங்கை, 'மிக பிரமாதம்...' என புகழ்ந்தவன் அத்தோடு, அந்த விளம்பரம் மனோதத்துவ ரீதியாய் வாடிக்கையாளர்களை எப்படி கவர்ந்திழுக்கும் என்பதையும் விளக்கினான்.

விளம்பரத்துறை பற்றி நிறைய தெரிந்து வைத்திருக்கிறானே... என அதிசயிக்கத்தான் செய்தாள் அவள்.

மேலும் ஐந்து நிமிடம் பேசியிருப்பார்கள். நிர்மலாவுக்கு சட்டென இன்பசாகரன் தேடுவான் என்ற நினைப்பு மூளையில் சுரீரென உதித்தது.

அத்தோடு அவனிடம் பேச்சை முடித்து விட விரும்புபவள் போல்,

''ஆமாம். நீங்கள் வேறு எதுவும் வேலையாய் அவசரமாய் சென்றாற் போல் தெரிகிறதே?'' என்றபடி நழுவத்தான் போனாள்.

அவனோ, ''ம்ம்... அவசரம் தான்! எதிரே இருக்கும் காபி ஷாப்பில் ஒரு கப் காபி குடிக்க வேண்டும் என்கின்ற அவசரம் தான்!'' என்றவன் அத்தோடு நிறுத்தாமல், ''உங்களையும் கூப்பிட ஆசை தான். ஆனால் உங்களுக்குத்தான் ஆயிரத்தி எட்டு அவசர வேலைகள்



இருக்கும். எனது குரலுக்கெல்லாம் செவி சாய்க்க நேரமும் இருக்காது. மேலும் பெரிய புகழ்பெற்ற மாடல் நீங்கள்... சாதாரண ஒரு சமான்யனான என்னுடன் எல்லாம் வர சம்மதிப்பீர்களா?'' என்றான் பெரும் உரையை முடித்தவாறு.

அவன் பேச்சின் அர்த்தம் உணர்ந்து சங்கடமாய் நெளியத்தான் செய்தாள் அவள்.

இருந்தும் சமாளித்து, ''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை...! நானும் சாதாரணமானவள்தான்...!'' என்றாள் கைகளை விரித்து அப்பாவியாய்.

''அப்படியானால் வாருங்கள் பார்ப்போம்...'' நூல் விட்டு அவளை இழுப்பது கேட்க பட்டென சிரித்தாள் அவள்.

''வந்தால் போயிற்று...'' என்றான் லேசான தலையசைப்புடன்.

''ஆஹா...! வரம் கிடைத்து விட்டது... அப்படியானால் உடனே வாருங்கள்!'' என்றபடி சரவணன் போலி பவ்யத்துடன் குனிந்து கைகளை நீட்டியபடி வரவேற்க மறுபடியும் சிரித்தவள் அவனைப் பின் தொடர்ந்தாள்.

காபி ஷாப்பில் சுமாரான கூட்டமே தென்பட்டது. இருவரும் ஓரமான இருக்கையொன்றை பார்த்து உட்கார்ந்து கொண்டனர். சரவணனே ஆர்டர் செய்தான்.

சரவணன் ஆர்வமாய் அவள் செய்த விளம்பர படங்களை குறிப்பிட்டு பாராட்டியவன் அதன் பற்றிய விளக்கங்களையும் விசாரிக்க ஆரம்பித்து விட்டான்.

அவளும் உற்சாகமாகி விளக்க ஆரம்பித்து விட்டாள்.

இருவரும் காபியை அருந்தியபடி சுவாரஸ்யமாய் பேசிக் கொண்டிருந்தார்கள். நிர்மலா தான் தன்னை யாரோ உறுத்துப் பார்ப்பது போன்ற உணர்வு தோன்ற தற்செயலாய் பக்கவாட்டில் திரும்பினாள். திடுக்கிட்டாள். அங்கு எதிரே... கோபமாய் இன்பசாகரன்!

# 6

நிர்மலா இன்பசாகரனை அந்த இடத்தில் சற்றும் எதிர் பார்க்கவில்லை.

கோபத்தில் கண்கள் ஜிவுஜிவுக்க இரண்டு பேரையும் எரித்து விடுவது போல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனது கோபப் பார்வை முதலில் நிர்மலா பக்கம் திரும்பியது.

''எத்தனை நாட்களாய் இப்படி கண்ட கண்ட ஆண்களுடன் கூத்தடிக்கும் பழக்கத்தை வைத்திருக்கிறாய்... உனக்கு வெட்கமாயில்லை?''

''அது... அது...'' என வார்த்தைகள் பதிலுக்கு வராமல் தடுமாறினாள் நிர்மலா.

''யார் இது...?'' முதலில் அதைச் சொல்....!'' என உறுமினான்.

''நண்பர்... முன்பு... படித்தவர்... நீண்ட நாள் கழித்து பார்த்ததால்... இப்படி காபி ஷாப்பில்...''



சட்டென ஒரு பொய்யுடன் அவள் நடுங்காத குறையாய் பதில் சொல்லுவதைப் பார்த்து சரவணன் அதிசயிக்கவே செய்தான். அதிலும் நிர்மலா நண்பர் முன்பு... படித்தவர் என்றெல்லாம் கூறி தன்னை சிலாகித்தது கண்டு வந்திருப்பது அவளுக்கு ரொம்பவும் வேண்டியவன் என புரிந்து கொண்டான்.

சூழ்நிலையை எளிதாக்க, எழுந்து, ''ஐ... ஆம் சரவணன்..!'' என அவனை நோக்கி கைகளை நீட்டினான்.

இன்பசாகரனோ பதிலுக்கு திரும்பி அவனையும் முறைத்தான்.

''நீ... யார்... மேன்? ஒரு பெண் வந்து இளித்தால் நீயும் பல்லைக் காட்டிக் கொண்டு வந்து விடுவாயா...? உனக்கு வேறு வேலை வெட்டி கிடையாதா?''

அவன் சொன்னதைக் கேட்டு சரவணனின் முகம் இறுகியது.

''மிஸ்டர். முதலில் கொஞ்சம் மரியாதை... டீஸன்சியாக பேசுங்கள்... நிர்மலாவுடன்...'' என அவன் ஆரம்பிக்க. டக்கென மறுபடியும் குறுக்கே புகுந்த இன்பசாகரன், ''நிறுத்து... நிறுத்து! முதலில் நான் யார்... நிர்மலா யார்... என்பதைத் தெரிந்து கொள்...! நான் ஜே.கே. அட்வர்டைஸிங் இன்பசாகரன். இது என் அத்தை பெண் நிர்மலா. இருவருக்கும் அடுத்த மாதம் கல்யாணம். இப்போது புரிகிறதா?'' என்கவும் சரவணனின் முகம் மாறினான்.

ஒரு வேகத்தில் எழப்போனவன் அதிர்ச்சி அடைந்தவன் போல் அப்படியே உட்கார்ந்து விட்டான். பிரகாச

மான அவனது முகத்தில் டக்கென ஒளி மங்கியது போல் தோன்றியதை நிர்மலாவும் கவனித்தாள்.

அதற்கு மேல் இன்பசாகரன் அவளை அங்கு நிற்க விடவில்லை.

''இவனிடம் என்ன பேச்சு? வா... நீ...!'' என்றபடி தர தரவென அவளை இழுத்துச் சென்று விட்டான்.

நிர்மலா என்ன எதுவென்று யோசிப்பதற்குள்ளே அது நடந்து விட்டது. பேந்தப் பேந்த விழித்தபடி அவன் இழுத்த இழுப்பிற்கு நடந்து விட்டாள் நிர்மலா.

அரை மணி நேரம் கழித்து வீடு வந்ததும் தான் நடந்ததை நினைத்து ரொம்பவும் வருந்தினாள்.

இந்த இன்பா ஒரு கப் காபி சாப்பிடுவதற்குள் அந்த வரத்து வந்து விட்டானே? அவர் சரவணனையும் அப்படி எடுத்தெறிந்து பேசி எல்லோர் முன்னிலையிலும் அசிங்கப்படுத்தி விட்டானே!

அந்த சரவணன் என்ன நினைப்பார்? இனி அவர் முகத்தில் எப்படித்தான் முளிப்பது? கவலையாய் யோசித்தவள் இன்பசாகரன் தான் விரைவில் நிர்மலாவை கட்டிக் கொள்ள இருக்கும் விஷயத்தை சரவணனிடம் சொன்ன போது அவன் முகம் சட்டென இறுகி களையிழந்தது போல் மாறியதும் நினைவுக்கு வந்தது.

எதற்காக?

ஏதோ... அதிர்ச்சியடைந்தவன் போல் அல்லவா அவனது முகம் மாறிவிட்டது?

யோசித்தவளுக்கு பதிலும் தானாகவே வந்தது.



பின்... இருக்காதா? இந்த இன்பாவின் வெடிப் பேச்சை கேட்டால் யாருக்குத்தான் மனம் நோகாது?

ஆனால்... என்ன அந்த சரவணன் கொடுத்த காபியை வாங்கி ஒரு ஸிப் குடிப்பதற்குள் இந்த இன்பா வந்து விட்டான். பெரும் களேபரம் பண்ணி விட்டான்.

மேலும் ஒவ்வொரு முறையும் சந்திக்கும் போது சரவணன் ஏதோ சொல்ல வருகிறது போலவும் அதற்கு சந்தர்ப்பம் அமையாமல் போய் விடுவது போலவும் தோன்றியது.

என்னவாக இருக்கும்?

குழம்பியவளுக்கு மறுநாளே விடையும் கிடைத்தது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. லைப்ரரியில் போய் புத்தகங்களை குடைந்து கொண்டிருந்தவள் தற்செயலாய்ப் பார்த்த போது நூலகருடன் பேசியபடி சரவணன் நிற்பது தெரிந்தது.

முகம் மலர்ந்தவளாய் விறுவிறுவென அவன் பக்கம் போனாள். சரவணனுக்கும் அவளைப் போலவே ஆச்சரியம்!

''நீங்களா...?'' என்றபடி திரும்பினாள்.

''முதலில் நேற்று நடந்ததற்கு... ஸாரி... மன்னித்து விடுங்கள்...'' என்றாள் நிர்மலா ஞாபகம் வந்தவளாய்.

தோள்களை குலுக்கிய சரவணன், ''அதை விடுங்கள்... கொஞ்சம் நடப்போமா?'' என்றபடி லைப்ரரியின் வெளியே உள்ள புல்வெளி மரங்களை காட்டினான்.

இருவரும் நடந்தார்கள்.

சரவணன் தான் அந்த லைப்ரரி பற்றி, தான் அதன் உறுப்பினராய் நீண்ட நாள் இருப்பது பற்றி, பல அரிய புத்தகங்கள் பற்றியெல்லாம் விளக்கினான்.

அவனுடன் பேசுவது எவ்வளவு இலகுவாக எவ்வித தயக்கமுமில்லாமல் இருப்பது கண்டு நிர்மலாவே அதிசயித்தாள்.

ஆனால் அன்று சரவணன் நினைத்தது போலவே கேட்டு விட்டான்.

''மிஸ். நிர்மலா, உங்களை ஆரம்பம் முதல் ஒரு கேள்வி கேட்க நினைத்துதான் விரட்டிக் கொண்டு இருக்கிறேன்... நீங்கள் ஒப்புக் கொள்வீர்களா?''

''என்னிடமா? என்ன கேள்வி?''

சரவணன் நிதானமாய் அவளை உற்றுப் பார்த்து விட்டு பார்வையில் குறுகுறுப்பை கூட்டினான்.

''கொஞ்சம் யூகித்தால் அதை நீங்கள் எளிதில் கண்டு பிடித்து விடலாம்...'' என்றான் பீடிகையாய்.

நிர்மலாவினுள் பரபரப்பு கூடியது. அவன் தத்துபித்துவென எதையாவது கேட்டு வைக்கப் போகிறானா என்ற பயமும் வந்தது. கண்களை மேலும் அழகாக விரித்துப் பார்த்தாள்.

''என்னால் கண்டு பிடிக்க முடியவில்லையே...'' என்றாள்.

சரவணன் சிரித்தான், ''ரொம்பவும் சிம்பிள். நான் அட்வர்டைஸிங் கோ ஆர்டினேட்டர். நீங்கள் விளம்பர மாடல். இன்னுமா யூகிக்க முடியவில்லை...?''



அவன் சொன்னது புரியாமல் வேறு எதையோ எதிர் பார்த்தவள் போல் மலங்க மலங்க விழித்தவளுக்கு உள்ளுக்குள் அச்சமும்,

''புரியவில்லை. நீங்களே சொல்லிவிடுங்கள்...''

சரவணன் கொண்டிருந்த சிரிப்பை அதிகமாக்கியபடி, ''வேறென்ன? என்னுடைய விளம்பரப்படம் ஒன்றில் மாடல் ஆக நீங்கள் நடிக்க வேண்டும் என்பது எனது ஆசை. நீங்கள் நடிப்பீர்களா?'' என்றான்.

நிர்மலாவின் முகமோ சட்டென நிம்மதிக்கு வந்தது.

''இவ்வளவு தானா? இதைத்தானா சொல்ல வந்தீர்கள்?'' என்று கேட்டும் விட்டாள்.

''வேறு எதைச் சொல்வேன் என்று எதிர்பார்த்தீர்கள்?'' என அவனும் பதிலுக்கு கேட்டான்.

''ஒன்றுமில்லை...! ஒன்றுமில்லை...!'' என முகத்தை மாற்றியவள் அவன் கேட்கும் மாடல் விஷயத்தை நினைத்தும் அதிரவே செய்தாள்.

# 7

மறுவாரம் இரண்டு மூன்று நாள் உடல்நிலையில் ஒரு மாதிரியாக உணர்ந்தாள் நிர்மலா. சோர்வாகவும் ஜுரம் போல் தெரிந்ததனாலும் அன்று மாலையே டாக்டரைப் பார்க்கப் போனாள்.

டாக்டர் பரிசோதித்து விட்டு, 'இது டைபாய்டு ஜுரம். எப்படியும் பதினைந்து நாட்கள் ஓய்வு எடுக்க வேண்டும் என பிரிஸ்கிரிப்ஷனில் மாத்திரைகள் லிஸ்ட்டை எழுதிக் கொடுத்தார்.

நிர்மலா ஐயோ! இது வேறா? என திடுக்கிடவே செய்தாள். அவளுக்கு ஜுரத்தை விட இதைப் போய் இன்பசாகரனிடம் சொன்னால் அவன் என்ன வரத்து வருவானோ? என்கிற பயமே அதிகமாய் இருந்தது.

மறுநாள் உடல் சோர்வைப் பொருட்படுத்தாமல் ஸ்டூடியோ சென்று இன்பசாகரனிடம் சொன்ன போது அவள் நினைத்தது போலவே தாம்தீம்மென குதித்தான் அவன்.

''என்ன டைபாய்டா? பதினைந்து நாளா? ம்ஹூம்! அதெல்லாம் முடியாது. உன்னை மாடலாய் வைத்து இந்த வாரம் ஏகப்பட்ட ப்ராஜெக்ட்களை வைத்திருக்கிறேன். எதாவது மாத்திரைகளை போட்டுக் கொண்டு வந்து கேமிரா முன் நில்லு. இல்லையென்றால் தொலைத்து விடுவேன்...''

''அதில்லை... இன்பா... வந்து...''

அவள் சமாதானமாய் ஏதோ சொல்லப் போக அதை யும் இடைமறித்தான்.

''உஷ்ஷ்...! பேசாதே... கண்ட கண்ட சாப்பாட்டு அயிட்டங்களை மூக்குப் பிடிக்கத் தின்று உடம்பை கெடுத்துக் கொண்டு... நீயெல்லாம்... ஒரு மாடலா...? உன்னை வைத்து வேறு வழியில்லாமல் நானும் பிழைப்பு நடத்துகிறேன்... பார்... என்னைச் சொல்ல வேண்டும்... சே...! கிரேட்... ஷேம்...!''



வெறுப்போடு காறி உமிழாத குறையாய் பேசினான் இன்பசாகரன்.

அப்போதும் அவனுக்கு அவன் தொழில் பாதிப்பு பற்றிய கவலை, எரிச்சல் தவிர அவளது உடல்நிலை பற்றியோ வந்திருக்கும் ஜுரத்தால் அவள் படும் அவஸ்தை பற்றியோ கொஞ்சமும் அக்கறை இல்லாதது கண்டு நிர்மலா திகைக்கவே செய்தாள்.

அவன் அதே வேகத்தில் அவள் பக்கம் வந்து, ''இந்த ப்ராஜெக்ட் ரொம்பவும் முக்கியம் நிம்மி. விளையாட்டாய் நினைக்காதே. போ! போய் நாளை வந்து கேமிரா முன் நில்லு...! சொல்லிவிட்டு விறுவிறுவென சென்று விட்டான்.

நிர்மலாவும் சரி முக்கியமான ப்ராஜெக்ட் என்கிறானே... உடல் நோவை பொருட்படுத்தாமல் வந்து விடுவோம் என்ற நினைப்பில் தான் வீடு சென்றாள்.

ஆனால் மறுநாள் காலை அவளால் அசையக் கூட முடியவில்லை. பெட்டில் அடித்துப் போட்டாற் போல் தான் கிடந்தாள். நூற்று மூணு டிகிரி ஜுரம் என தர்மா மீட்டர் வைத்துப் பார்த்த தந்தை ராஜமாணிக்கம் பதறத்தான் செய்தார்.

அவரை சமாதானப்படுத்தி டாக்டர் சொன்ன விவரங் களை கூறி மாத்திரைகளை எடுத்து சாப்பிட்டாள். ஒரு மணி நேரத்தில் சூடு கொஞ்சம் தணிந்தது.

ஆனால் உடல் முழுக்க பயங்கர வலி. எழுந்து நடக் கவே சிரமமாயிருந்தது. இதில் எப்படி அலுவலகம் செல் வது? எப்படி கேமிரா முன் போய் நிற்பது?

ஆனால் இந்த இன்பசாகரன் புரிந்து கொள்ளமாட்டானே? தாம்தீம்மென குதிப்பானே?

அவள் பயத்துடன் நினைத்த மாதிரியே காலையில் இருந்து வரிசையாக. நாலைந்து போன் கால்கள்! எல்லாம் இன்பசாகரன் தான்.!

இன்னும் கிளம்பவில்லை...? இன்னும் கிளம்பவில்லை...? என துளைத்தெடுத்த மாதிரி கேள்விகள்.

அவள் தான் வர முடியாத சூழ்நிலையைச் சொல்லியும் அவன் கேட்கத் தயாரில்லை.

கத்து கத்துவென்று கத்தினான்.

அவளுக்கு கொஞ்சமும் பொறுப்பில்லை. தொழிலில் அக்கறையில்லை.... என வரிசையாய் குற்றம் சாட்டினான்.

அவனது அர்த்தமில்லாத வசவுகளை கேட்கப் பிடிக்காமல் அப்படியே ரிசீவரை கீழே வைத்து விட்டாள் நிர்மலா.

அதற்குப் பின் இன்பசாகரன் போன் செய்யவில்லை.

அன்று மாலை வீட்டிற்கு வந்து தன்னை அவன் பார்க்க வருவான் என அவள் நினைத்து எதிர்பார்த்து ஏமாந்து தான் போனாள்.

இன்பசாகரன் வரவில்லை. மறுநாள் காலை மட்டும் அவள் தந்தைக்கு போன் செய்து ''இன்று வருவாளா? மாட்டாளா? என்று மட்டும் கேட்டுச் சொல்லுங்கள்...!'' என்று சொல்ல தந்தை ராஜமாணிக்கம் அதிகமான டைபாய்டு ஜுரத்தால் அவள் இனி ஒரு வாரம் வர



முடியாத சூழ்நிலைய விளக்கி அவனுக்கு புரிய வைக்க முயல... பட்டென போனை வைத்து விட்டான் இன்பசாகரன்.

ராஜமாணிக்கத்தை அவள் ஆவலாய் பார்க்க... பெட்டில் சோர்வாய் படுத்திருந்த அவள் தலையை வாஞ்சையாய் நீவினார் அவர். ''இன்பசாகரனைப் பற்றித் தெரியாதா? சரியான கோபக்காரன் அவன். இரண்டு நாளில் கோபம் எல்லாம் இறங்கி இங்கு வந்து நிற்பான். அப்போது உன் நிலையைக் கண்டு எல்லாற்றையும் புரிந்து கொள்வான். டோண்ட் வொரி...!'' என்றார்.

ஆனால் இரண்டு நாட்கள் நாலு நாட்கள் ஆயிற்று. இன்பசாகரன் வரவும் இல்லை. போன் செய்யவும் இல்லை. அவள் பக்கம் எட்டிப் பார்க்கவும் இல்லை.

அவள் நிலையும் அப்படித்தான். ஜுரம் வருவதும் இறங்குவதுமாக தொடர்ந்து இருந்தது. ஆட்டோ பிடித்து தந்தையுடன் அன்று ஹாஸ்பிடல் சென்றாள். டாக்டர் பரிசோதித்து விட்டு ஊசிகளைப் போட்டார்.

''கண்டிப்பாக ஓய்வு தேவை. இன்னும் ஒரு வார காலம் ஆகும்...'' என நிலைமையை தெரிவிக்கும் நிர்மலா மேலும் சோர்வுறத்தான் செய்தாள்.

அவளுக்கு ஒரு பக்கம் உடல் நிலை கவலை. மறு பக்கம் இன்பசாகரன் கோபப்பட்டு பார்க்கக் கூட வராமல் இருக்கிறானே... என்ற வேதனை!

தந்தையை கைத்தாங்கலாய் பிடித்துக் கொண்டு தளர்வான நடையுடன் ஹாஸ்பிடலை விட்டு வெளி வந்தாள்.

பிளாட்பாரத்தில் நின்று ஆட்டோவைத் தேடிக் கொண்டிருந்த போது சரக்கென அவள் முன்னால் பிரேக்கிட்டு நின்றது அந்த பளபளப்புக்கார்!

உள்ளிருந்து பதட்டத்தோடு இறங்கினான் சரவணன்!

''என்னாயிற்று... நிர்மலா... உங்களுக்கு? எதனால் இப்படி? ஹாஸ்பிடலில் இருந்து வெளி வருகிறீர்கள்?'' நிஜமான பதற்றத்தோடு அக்கறை பொங்க அவன் கேட்டது அந்தச் சூழ்நிலையில் அவளை ரொம்பவும் ஆறுதல் படுத்தியது என்று தான் சொல்ல வேண்டும். சரவணன் அவள் மறுத்தும் பிடிவாதமாய் அவளை தன் காரில் கொண்டு போய் வீட்டினுள் விட்டான்.

ஒரு நிமிட பேச்சிற்குப் பின் சரவணன் கிளம்ப அவன் முன்பு கேட்ட மாடலிங் விஷயம் ஞாபகம் வந்தது நிர்மலாவுக்கு.

''என்ன யோசிக்கிறீர்கள்?'' என்றதும் உண்மையைச் சொல்ல மனமில்லாமல். சட்டென, ''இன்பாவின் ஜே.கே. அட்வர்டைஸிங்குடன் எனக்கு காண்ட்டிராக்ட் ஒப்பந்தம் உள்ளது. அது முடியும் வரை வேறு விளம்பரப் படங்களில் நான் நடிக்க முடியாது. ஸாரி...!'' என்றாள் முன்பு அவன் கேட்டதற்கு பதில் கூறுவது போல் சரவணனுக்கு ஏமாற்றம் தான்!

சட்டென களையிழந்த அவனது முகத்திலேயே அது தெரிந்தது. இருந்தும் அதை வெளிக்காட்டாதவனாய், ''புரிகிறது. அதனால் என்ன பரவாயில்லை...! உங்கள் நட்பு கிடைத்ததே... எனக்குப் பெரிய விஷயம் தான்.'' என்றான்.



பின் நிமிர்ந்து, ''இன்னொரு விஷயமும் இருக்கிறது...'' என்றான்.

''என்ன?'' என்றாள்.

''நீங்கள்... எனது அட்வர்டைஸிங் ஸ்டூடியோவிற்கு ஒரு நாள் வர வேண்டும். தங்கள் பொற்பாதங்கள் அங்கு பட வேண்டும்.'' என்றான்.

''அப்படியா? கண்டிப்பாய் வருகிறேன்...!'' என்றாள்.

பின் விடைபெற்று கிளம்பினான்.

மறுநாள் இன்பசாகரனின் ஸ்டூடியோவினுள் நுழைந்தவளுக்கு பெரும் அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது.

அன்று வழக்கம் போல் அவளை போட்டோ செஷனுக்கு உட்கார வைத்து ஆங்கிள் பார்த்தான் இன்பா.

பின் எரிச்சலாய் நிமிர்ந்து, ''நீ இந்த பிட்நெஸ் விளம்பரத்திற்கு சரி வர மாட்டாய். வேறு மாடலைத் தேடிக் கொள்ளப் போகிறேன். நீ கிளம்பலாம்...!'' என்றான் சர்வ சாதாரணமாக.

அவன் சொன்னதைக் கேட்டு அதிர்ந்துதான் போய் விட்டாள் நிர்மலா.

# 8

நிர்மலாவால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை!

இன்பசாகரன் தெள்ளத் தெளிவாய் சொல்லி விட்டான்.

''இனிமேல் உன்னால் முடியாது நிம்மி. உன் உடல் மெலிந்து... முகம் பொலிவிழந்து உன் அழகெல்லாம்... போயாயிற்று. இனி இந்த அட்வர்டைஸிங் விளம்பர உலகிற்கு நீ தேவைப்பட மாட்டாய். வேறு எதாவது வேலைக்கு நீ போகலாம்...!''

என்ன ஒரு வார்த்தை?

அவள் உடல் மெலிந்து விட்டதாம். அவள் அழகு போய் விட்டதாம். இனி தேவைப்பட மாட்டாளாம்!

''என்ன சொல்கிறீர்கள் இன்பா? நான்... நான்... உங்கள் அட்வர்டைஸிங்கில் மட்டுமல்ல... உங்கள் வாழ்க்கையிலும்... ''

அவள் முடிக்கவில்லை.

''இரண்டிற்கும்... நீ... தேவைப்பட மாட்டாய்...!'' என்றான் அவன் அழுத்தமாக.

அடுத்து அவன் பேசிய ஒவ்வொரு சொல்லும் அவளுள் இடியாய் இறங்கியது.

''இதோ பார் நிம்மி, முதலில் இருந்தே எனக்கு உன் மீது ஆசையோ... காதலோ என்று எதுவும் கிடையாது. எனது அட்வர்டைஸிங்கிற்கு ஒத்தாசையாய் சரியான மாடலாக நீ இருந்ததால் நீ என்னுடன் வாழ்வில் இணைய ஆசைப்பட்ட போது சரியென சம்மதித்தேன். ஆனால் இப்போது எல்லாம் மாறி விட்டது. மேலும் எனக்கு 'மாடல்' ஆக மேட்ச் ஆகாத உன்னால் என் வாழ்க்கையிலும் மேட்ச் ஆக முடியாது. அதனால் நான்



வேறு மாடலைத் தேடிக் கொள்கிறேன். நீ கிளம்பலாம்...!'' என்றான் அதே அசட்டையான குரலில். அவள் துடித்து தான் போனாள்.

''இன்பா...! இன்பா! என்னை... என்னையா சொல்கிறீர்கள்? நான்... நான்... உங்களுக்குத் தேவையில்லாமல் போய் விட்டேனா? என்னை வெறும் மாடலாகத் தான் நீங்கள் பார்த்தீர்களா? நிஜமாக என்னை... என்னை... ஒரு போதும் நீங்கள் விரும்பவில்லையா?''

ஏறக்குறைய நடுங்கும் குரலில் தான் அவள் கேட்டாள்.

''இல்லை...! இல்லை...! நீ... கேட்கும் எல்லா கேள்விகளுக்கும் என்னுடைய பதில் இல்லை தான்...! போதுமா?'' உரக்கவே சொல்லி முகத்தைத் திருப்பிக் கொண்டான் இன்பசாகரன்.

அவளுக்கு ஒரு கணம் என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அவளை நன்குத் தெரிந்த பணியாளர்கள் எல்லாம் அவளை இரக்கப் பார்வை பார்த்தபடி அகன்றனர்.

அவளிடம் அலட்டலாய் சொல்லி விட்டு உள் ரூமிற்குச் சென்ற இன்பசாகரன் சும்மா இருக்கவில்லை. படபடவென ஊழியர்களை விரட்டி போட்டோ செஷன் ஒன்றுக்கு தயாராகிக் கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள்.

அவளை வேண்டாம் என்று சொல்லி விட்டான். பின் யாரை வைத்து...?

யாராக இருக்கும்?

திகைத்தபடி அவள் சிந்திக்க அதற்கும் ஒன்றிரண்டு நிமிடங்களில் விடை கிடைத்தது.

சட்டென ஒரு மாருதி ஸென் வந்து அலுவலக முகப்பில் ஹாரன் ஒலியுடன் நின்றது. உள்ளிருந்து இறங்கினவள் நளினி!

நொடியில் நிர்மலாவுக்கு எல்லாம் புரிந்து விட்டது. நளினி அவளைப் போலவே அட்வர்டைஸிங் துறையில் இருக்கும் சக மாடல். ஒன்றிரண்டு விளம்பரங்களிலே வந்திருந்தாலும் யாரையும் சட்டை செய்யாத அவளது சுபாவத்தால் பெரிய அலட்டல்காரி... என்ற பெயர் எடுத்திருந்தாள்.

ஆக... அவளைத்தான் இந்த இன்பசாகரன் தனக்குப் பதில் ஒப்பந்தம் செய்திருக்க வேண்டும்.

அவள் இடத்தில் இந்த அலட்டல்காரி நளினியா? என்ன ஒரு அநியாயம்!

கொதிக்கத்தான் செய்தாள் நிர்மலா.

ஆனால் அதற்கு எண்ணெய் ஊற்றுவது போல் இன்பசாகரனும் நடந்து கொண்டான். உள்ளிருந்து காரின் ஹாரன் ஒலி கேட்டு எட்டிப் பார்த்தவன் ஓடோடி வந்து விட்டான்.

காணாததைக் கண்டது போல் தான் நளினியை நோக்கி அத்தனை பற்களையும் காட்டி இளித்தான். ''வாருங்கள்... வாருங்கள்... மிஸ் நளினி! உங்கள் வரவு... நல்வரவு வாருக...!'' என்று காலில் விழாத குறையாய் குனிந்தபடி வரவேற்றான்.



நிர்மலா உதட்டைக் கடிக்கத்தான் செய்தாள். ஒரு நாளாவது இந்த இளிப்பை அவளிடம் செய்திருக்கிறானா? பாதகன்! என்ன ஒரு பணிவு.... என்ன ஒரு குனிவு...! ஆனால் அவள் விஷயத்தில் இப்படியா எப்போதும் விரட்டி அவள் குனியக் குனிய குட்ட அல்லவா செய்திருக்கிறான்?

அதைவிட கொடுமை நளினியைப் பார்த்ததும் இன்பசாகரன் அவள் நிர்மலா அங்கு ஒரு உருவமாய் நின்று கொண்டிருப்பதை கொஞ்சம் கூட சட்டை செய்யாமல் அவளைத் தாண்டிப் போனான்.

பெரும் வரவேற்பு கொடுத்து அவளை உள்ளே அழைத்துச் சென்றான். நளினி தான் அவளை கடக்கும் போது நின்று நிதானித்து ஒரு இளக்காரப் பார்வையை வீசி விட்டு அகன்றாள்.

நிர்மலாவுக்கு பற்றிக் கொண்டு தான் வந்தது.

ஸ்டூடியோ ஆரம்பித்தது முதல் அதன் கதாநாயகி போல் அத்தனை விளம்பரப் படங்களிலும் நடித்து கோலோச்சிக் கொண்டிருந்தவளை தூக்கி எறிந்து விட்டானே!

இன்று அவள் இடத்தில் வேறு ஒரு பெண்! வேறு ஒரு மாடல்!

அவ்வளவு தானா? அவ்வளவு தானா இந்த இன்பசாகரன்?

உடல் நலமில்லாமல் அவள் உடம்பு மெலிந்ததைக் காட்டி, இனி தன் மாடலிங்கிற்கு அவள் சரிப்பட்டு வர மாட்டாள்... என அவனே முடிவு செய்து ஒரு கறிவேப்பிலையைப் போல் அவளை எறிந்து விட்டானே!

அதை விட அதிர்ச்சியான விஷயம் மாடலிங்கிற்கு தேவைப்படாமல் போய் விட்ட அவள் இனி அவன் வாழ்க்கைக்கும் தேவையில்லையாம்...!

காதலோ... கத்திரிக்காயோ... அவள் மீது கிடையாதாம்! உறவுப் பெண் என கட்டிக் கொள்ள நினைத்தானாம். இப்போது அது சரிப்பட்டு வராது எனத் தெரிந்ததும் முடிவை மாற்றிக் கொண்டானாம்!

அவளால் இன்பசாகரன் சொன்ன அந்த விஷயத்தைத் தான் நம்பவே முடியவில்லை. இது நாள் வரை அவனிடம் அப்படி ஒரு பேச்சு விளையாட்டுக்காக கூட வந்ததில்லையே?

இன்றோ என்னவெல்லாம் சொல்லி விட்டான்? என்றுமே அவள் மீது காதலோ அன்போ இருந்ததில்லையாம். உறவுப் பெண் தனது விளம்பர மாடல் என்ற காரணத்திற்காகத்தான் கட்டிக் கொள்ளக் கூட சம்மதம் தெரிவித்தானாம். இப்போது மாடலுக்கு அவள் ஒத்துவரவில்லை என்றதும் சுழற்றி விட்டு விட்டானாம். அவளை திருமணம் செய்து கொள்ளும் எண்ணத்தை எல்லாம் அழித்து விட்டானாம். என்ன ஒரு அடாவடித்தனம்?

ஒரு கணம் இன்பசாகரன் மீது அவளுக்கு கோபம் கோபமாய் வந்தது. உள்ளே போய் அவன் சட்டைக் காலரைப் பற்றி நாக்கைப் பிடுங்குகிற மாதிரி நாலைந்து கேள்விகள் கேட்க அவளது உதடுகள் துடித்தது.

ஆனால் அவளது உடல்நிலை...?

சும்மாவே நோயில் விழுந்து எழுந்த உடம்பு ஜீவனில்லாது போல் நின்று கொண்டிருக்க... இப்போதோ அவன் கொடுத்த அதிர்ச்சியைத் தாங்காது நடுக்கமாய்ப் போய் ஏறக்குறைய நடுங்கவே ஆரம்பித்து விட்டது.



இந்த நிலையில் உள்ளே போய் கோபப்படுவதோ அவன் மேல் ஆசைப்படுவதோ முடியாத காரியம்.

மெல்ல கால்களைப் பிரித்து அடி எடுத்து வைப்பது போல் நடக்க ஆரம்பித்தாள்.

அப்படி நடக்கையில் எதோ உள்ளுணர்வோடு திரும்பி ஸ்டூடியோவைப் பார்த்தாள்.

அங்கு... இன்பசாகரனைப் போலவே மாலினியைச் சுற்றி பணியாளர்கள் அனைவரும் போட்டோ செஷனுக்காக இயங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

என்ன... அவள் இல்லாவிட்டால் இன்னொரு மாடல்! அவர்களைப் பொறுத்தவரை அவ்வளவு தானே!

எரிச்சல் ததும்ப நடந்து பிரதான சாலைக்கு வந்தாள். சாலையில் நெரிசல்கள். வேகவேகமாய் செல்லும் வாகனங்கள்... பேசாமல் எதாவது ஒரு நல்ல வாகனமாய்ப் பார்த்து முன்னால் போய் விழுந்து விடுவோமா? இந்த உயிரை மாய்த்துக் கொள்ளுவோமா? எனக்கூட இருக்கிற மனநிலையில் சிந்தனை தோன்றியது.

'அப்படிப்பட்ட கோழைத்தனம் எனக்கில்லை...' என்பது போல் தனக்குத் தானே வீராப்பாய் சொல்லிக் கொண்டு நடையை எட்டிப் போட முயன்றாள். ஸ்டாண்டில் நிறுத்தியிருக்கும் தனது ஸ்கூட்டியை நெருங்க முயன்றாள்.

அதற்குள் பலமில்லாதது போல் அவள் கால்கள் தள்ளாடியது. கண்கள் இருண்டது. தலையைப் பிடித்தவள் தள்ளாடியபடி அப்படியே சாய்ந்தாள்.

அப்படி நினைவிழந்து பூக்குவியலாய் சாயப் போனவளை அவசர அவசரமாய் பின்னால் வந்த கரம் ஒன்று தாங்கிக் கொண்டது.

# 9

இரண்டு நாள் என்ன நடந்தது என்றே நிர்மலாவுக் குத் தெரியவில்லை. மூன்றாம் நாள் தான் மெல்ல கண் விழித்தாள்.

தான் மருத்துவமனை ஒன்றில் அட்மிட்டாகி ரூமில் இருப்பதையும் குளுக்கோஸ் டிரிப் கைகளில் ஏறிக் கொண்டிருப்பதையும் உணர்ந்தாள். எதிரில் கவலை பொங்கும் முகத்தோடு தந்தையும் சரவணனும்!

திகைப்பாய் பார்த்தாள்.

'என்ன... நடந்தது? நான் எப்படி இங்கு...?' என பதட்ட மாய் கேட்டவளை சாந்தப்படுத்தி சரவணன் விளக்கி னான்.

''அது ஒன்றுமில்லை நிர்மலா. அன்று டைபாய்டு ஜுர அசதியோடு நீங்கள் வெளியில் சென்று... பல வீனம் காரணமாக ரோட்டிலேயே நீங்கள் மயக்கம் கொண்டு... நல்லவேளை... உங்கள் பின்னால் வந்த இன்பசாகரன் உங்களைத் தாங்கிப் பிடித்திருக்கிறார்... உடனடியாய் உன் தந்தைக்கு தகவல் சொல்லி விட்டு இங்கு அட்மிட் செய்து விட்டார்...''

சரவணன் இன்பசாகரன் என்ற பெயர் சொன்னதுமே துள்ளியவள் போல் தான் நிமிர்ந்து நிமிர்ந்தாள்.



''என்ன... என்ன சொன்னீர்கள்? இன்பசாகரனா...? இன்பசாகரனா...? அவர்... அவர் தான் அன்று என்னை தாங்கிப் பிடித்து காப்பாற்றினாரா? அவர் தான் அக் கறையாய் என்னை ஹாஸ்பிடலில் சேர்த்து விட்டாரா?''

நம்ப முடியாமல் திரும்பத் திரும்ப கேட்டபடி தந்தை யும் மாறி மாறி பார்க்க அவரும் ஆமோதிப்பது போல் தலையசைத்தார்.

ஆயினும் நிர்மலாவுக்கு பெரும் ஆச்சரியமே!

அன்று நடந்தவைகளை மெல்ல நினைவுபடுத்திப் பார்த்தாள்.

தான் இன்பசாகரனின் ஸ்டுடியோவிற்குச் சென்றதை யும் அவன் அவள் மனம் நோகும்படி வார்த்தைகளைக் கொட்டி விரட்டியதையும், புது மாடலாய் நளினி நுழைந்து அவளை வைத்து போட்டோ செஷனுக்கு தயாரானதையும் நன்றாக அவள் கண்களால் கண்டாள் தானே!

பின் இப்படி இது நிகழ்ந்தது?

அவளை வாழ்க்கையில் இருந்தும் தூக்கி எறிந்து விட்டதாய் சொன்ன இன்பசாகரன் அவள் நடைப்பிண மாய் வெளியே நடந்து செல்வதைப் பார்த்து பின் தொடர்ந்திருக்கிறானா?

அவள் சட்டென மயங்கி விழப் போனதை பார்த்ததும் தாங்கிப் பிடித்திருக்கிறானா?

நினைத்துப் பார்த்தவள் உற்சாகத்தோடு தலையை ஆட்டிக் கொண்டாள்.

அப்படித்தான் நிகழ்ந்திருக்க வேண்டும்!

தன்னிடம் நெருப்பாய் வார்த்தைகளை வீசிய இன்பா... அதற்குப் பின் உணர்ந்திருக்க வேண்டும். வேலைக்கான டென்ஷனில் என்னவொரு வார்த்தை களை கொட்டி விட்டோம் என தவித்திருக்க வேண் டும்...

அந்த தவிப்போடு நம்மை சமாதானப்படுத்த பின் னால் ஓடி வர... அந்நேரம் பார்த்து பலமில்லாது நான் மயங்கி விழ... தாங்கிப் பிடித்திருக்கிறான் இந்த இன்பா...!

'என்னை மன்னித்து விடுங்கள் இன்பா.... உங்களை ஒரு கணம் எவ்வளவு தவறாக எவ்வளவு கேவலமாக நினைத்து விட்டேன்...!

நீங்கள் அப்படிப்பட்ட ஆள் இல்லை... நீங்கள் என் மீது அன்பு வைத்திருக்கிறீர்கள்...

நிஜமான காதல் வைத்திருக்கிறீர்கள். என்னுடன் வாழ்க்கையிலும் இணையப் போகிறீர்கள்... எல்லா வற்றையும் மறைத்து விட்டு... என்னை வேண்டு மென்றே சீண்டி விளையாடி இருக்கிறீர்கள்... நான் தான் புரியாமல் புரிந்து கொள்ளாமல் குழம்பி விட்டேன்....!

நீங்கள் சொல்வது போல் நான் மக்குதான். முட்டாள் தான் இன்பா...!

உங்களை தவறாக நினைத்ததற்கு என்னை மன் னித்து விடுங்கள் இன்பா...!'

தனக்குள்ளே அரற்றியபடி அவள் மனதுள் பேசிக் கொண்டிருக்க... இருவரும் அவளை உலுக்கினார்கள்.



''என்ன... என்னம்மா...? என்னாயிற்று?''

''ஒன்றுமில்லை...!'' என்றாள் அவள் அவசரமாக வரவழைத்துக் கொண்ட புன்முறுவலுடன். ''எல்லாம் சரியாயிற்று. இன்பா என்னை கொஞ்சமும் ஏமாற்ற வில்லை...!'' என்றாள் நெகிழ்ச்சியாக.

அவள் சொல்வதைக் கேட்டு சரவணனும் ராஜமாணிக் கமும் ஒருவரையொருவர் ஒரு பார்வை பார்த்துக் கொண்டனர்.

அவள் விழித்து விட்டதை நர்ஸ் கவனித்து தகவல் அனுப்ப டூட்டி டாக்டர் வந்து விட்டார்.

அவள் உடல்நிலையை கவனமாய் பரிசோதித்தார்.

''பலவீனம் தான். இன்னும் மூன்று நாள் ஓய்வுடன் குளுக்கோஸ் ட்ரிப் எடுத்து விட்டு டிஸ்சார்ஜ் ஆகி விடலாம்...'' என்று சொன்னதும்தான் எல்லோருக்கும் நிம்மதி!

அப்போது தான் சரவணன் அங்கு இருப்பதை நிர்மலா முழுமையாய் உணர்ந்தவள், ''நீங்கள் எப்படி இங்கு...?'' என வினவ... பதிலுக்கு சரவணன் நண்பன் ஒருவனை பார்க்க ஹாஸ்பிடல் வந்ததாகவும் வந்த இடத்தில் அவள் அட்மிட் ஆகி இருப்பதை பார்த்து வந்ததாகவும் தெரி வித்தான்.

கூடவே கொண்டு வந்திருந்த ஆரஞ்சுப் பழங்களை அவனே உரித்து சாறு பிழிந்து கிளாஸில் நீட்டிய போது அவளுக்கு சங்கடமாய்த்தான் இருந்தது.

''உங்களுக்கு எதற்கு வீண் சிரமம்? அப்பா கவனித் துக் கொள்வார்...'' என அவள் சொன்னதை புன்னகை

யோடு மறுதலித்து, ''ஏன்... நானும் உங்கள் நண்பன் தானே? நான் செய்யக் கூடாதா?'' என்றான் சரவணன்.

பதிலுக்கு புன்னகைத்தவளை திரும்பவும் இன்ப சாகரனின் நினைவு தொற்றிக் கொண்டது. ''ஆமாம்... இன்பா எங்கே... அவருக்கு தகவல் சொல்லி விடுங்கள்...'' என்றாள் ஞாபகம் வந்தவள் போல்.

சரவணன் அதற்கு வேகமான தலையசைப்புடன், ''ம்ம்... உடனே சொல்லி விடுகிறேன். ஆனால் பாருங்கள், இவ்வளவு நேரம் இங்குதான் உட்கார்ந்திருந்து விட்டு இப்போது தான் அவர் கிளம்பிப் போனார். நீங்கள் விழித்து விட்டீர்கள்...''

''அப்படியா...?'' என நிர்மலா அதிசயித்தவள் கூடவே, ''ஐயோ...! உடனே இன்பாவிடம் பேச வேண்டும் போலிருக்கிறதே... போனில் பேசட்டுமா...?'' என்றாள்.

சரவணன் திகைக்க ராஜமாணிக்கம் பக்கத்தில் வந்து அவள் கைகளை நீவினார். ''போன் எதற்கு? இன்னும் கொஞ்ச நேரத்தில் உன் இன்பா நேரிலே வந்து விடுவார். அதுவரை கொஞ்சம் ஓய்வு எடு...!'' என்றார்.

தந்தை சொல்வதும் அவளுக்கு சரியாகப் படவே தலையாட்டியபடி தோன்றிய அசதியில் மறுபடியும் கண்களை மூடிக்கொண்டாள் நிர்மலா.

அவர்களிடம் விடைபெற்றுக் கிளம்பினான் சரவணன்.

கிளம்பும் போது ஞாபகமாய் ராஜமாணிக்கத்திடம் நிர்மலா அறியாதவாறு ஒரு வித சைகை செய்து விட்டுப் போனான்.

# 10

மேலும் மூன்று நாட்கள் கழிந்தது.

அன்று நிர்மலாவின் உடம்பை பரிசோதித்த டாக்டர், ''வெரிகுட்! இன்று டிஸ்சார்ஜ் ஆகலாம்...!'' என்று சொல்லி விட்டார்.

நிர்மலா எல்லாவற்றையும் விட இன்பசாகரனைத்தான் தேடிக் கொண்டிருந்தாள். அவன் வருவதற்கு மாறாக ஒவ்வொரு நாளும் சரவணன் தான் வந்து கொண்டிருந்தான்.

''உங்களுக்கு எதற்கு வீண் சிரமம்... நான் நலமாகி வந்து விடுவேனே...?'' என அவள் சொன்னதற்கு, ''ஏன்... நண்பரை பார்க்க நான் வரக்கூடாதா?'' என அவன் எதிர்கேள்வி கேட்கவும் அவள் புன்னகைக்க வேண்டியதாயிற்று.

ஆனாலும் இன்பசாகரனின் நினைவிலே அவள் சுழல்வதைக் கண்டு, ''அட... நீங்கள் நன்றாக தூங்கிக் கொண்டிருந்தீர்கள். இப்போது தான் இன்பசாகரன் வந்து பார்த்து... விசாரித்து விட்டுப் போனார்...'' என்றான் ஒரு நாள் சரவணன் அவளிடம்.

அப்படியா...? நிஜமாகவா...? என அவள் வியந்து தந்தையைப் பார்த்த போது அவரும் அதை ஆமோதிப்பது போல் தலையை அசைத்தார்.

இன்பசாகரன் வந்து பார்க்க வந்தாரே அதுவே எனக்குப் போதும்...! ரொம்பவும் நெகிழ்ச்சியடைந்த வளாய் மனம் குளிர்ந்தாள் நிர்மலா.

அந்த மகிழ்ச்சியினாலோ... என்னவோ... அவள் உடல்நிலையும் வேகமாக முன்னேற்றம் அடைந்தது. மறுநாளே புத்துணர்ச்சி பெற்றவள் போல் ஆரோக்யமான தேகத்துடன் டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு கிளம்பி விட் டாள்.

அன்றும் சரவணன் தனது காரை கொண்டு வந்து அழைத்துச் சென்றான். வேண்டிய உதவிகளைச் செய் தான்.

''ஐயோ! சரவணன்! உங்களுக்கு ஒவ்வொருமுறை யும் நன்றி சொல்லி சொல்லியே... எனது வாய் வலித்து விடும் போலவே!'' எனச் சிரித்தாள் அவள்.

''அதற்காகவாவது இனி நன்றியைச் சொல்லாமல் இருங்கள்...'' என்றான் அவனும் விடாமல்.

ஆயினும் நிர்மலாவின் எண்ணம் முழுவதும் இன்ப சாகரனின் நினைப்பே இருந்ததால் வீட்டிற்கு வந்ததும் முதற் காரியமாய் இன்பசாகரனின் எண்ணுக்குத்தான் டயல் செய்தாள்.

அடுத்த நன்றி அவனுக்குத்தானே சொல்ல வேண் டும். அவனால் தானே ரோட்டில் விழாமல் காப்பாற்றப் பட்டு, இவ்வளவு விரைவாக குணமடைந்திருக்கிறாள்.

அவள் திரும்பத் திரும்ப டயல் செய்தது தான் மிச்சம். இன்பசாகரன் போனை எடுக்கவே இல்லை.



வேலையில் பிஸியாக இருக்கலாம் என தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டு மதியம் வரை காத் திருந்தாள்.

திரும்பவும் போன் செய்த போதும் அதே நிலை தான்! இன்பசாகரன் போனை எடுக்கவே இல்லை...!

சரி... ஒரு எட்டு அவன் அலுவலகத்திற்கே சென்று பார்த்து வருவோம்... என நினைத்த போது ராஜமாணிக் கம் தடுத்தார்.

''இன்று ஒரு நாள் ஓய்வு எடு. நாளை சென்று பார்க்க லாமே...'' என்ற போது தந்தையின் பேச்சை அவளால் தட்ட முடியவில்லை.

ஆனால் மறுநாள் அவள் நினைத்த மாதிரி இல்லை. கிளம்புவதற்கு முன் எதற்கும் போன் செய்து பார்ப் போமே என அவள் டயல் செய்து பார்க்க... மறுமுனை யில் இன்பசாகரனே எடுத்தான்.

இன்பாவின் 'ஹலோ...' குரலைக் கேட்டு உற்சாகமாக துள்ளித்தான் போய் விட்டாள் அவள்.

''ஹலோ... இன்பா...! நான் தான்...!'' என்றாள் குரல் முழுக்க உற்சாகத்துடன்.

ஆனால் மறுநிமிடமே அவள் உற்சாகம் தகர்ந்தது.

''நான் தானா...? யாரது?'' என்றான் இன்பசாகரன் குர லில் அந்நியத்தோடு.

''இன்பா... விளையாடாதீர்கள்! என்னை... என் குரலைத் தெரியவில்லை...?'' என்றாள் மறுபடியும்.

''தெரியவில்லை...'' என்றான் இன்பசாகரன் தனது உறுதியான குரலில்.

''இன்பா... நான் நிர்மலா... உங்கள்... நிம்மி...'' அவள் ஆவலாய்ச் சொல்ல மறுமுனையில் பதில் இல்லாமல் மௌனமே வெளிப்பட்டது.

ஆயினும் அவள் விடாமல் தொடர்ந்தாள்.

''இன்பா! நான் டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு வந்து விட்டேன். உங்களை உடனே பார்க்க வேண்டும் போல இருக்கிறது. நான் அங்கு வரட்டுமா? அல்லது நீங்கள் இங்கு வருகிறீர்களா?''

''எதற்கு பார்க்க வேண்டும்?'' என்றான் இன்பசாகரன் குரலில் கடுமை குறையாமல்.

''என்ன இன்பா இப்படிக் கேட்கிறீர்கள்? நீங்கள்... நீங்கள்... எனக்கு... எவ்வளவு உதவி செய்திருக்கிறீர்கள்... ரோட்டில் மயங்கி விழப் போன என்னை கைத்தாங்கலாய் பிடித்து ஹாஸ்பிடலில் அட்மிட் செய்து... என்னை கவனித்து...''

அவள் மேற்கொண்டு பேசுவதற்கு முன், ''என்ன உளறுகிறாய்? நீ சொல்வது ஒன்றும் புரியவில்லை...'' என்றான்.

பின் அவள் விடாமல் அதை விளக்க முயல, ''உன் உளறலை கேட்க எனக்கு நேரமில்லை. எனக்கு நிறைய வேலை இருக்கிறது'' என்றபடி ரிசீவரை வைத்து விட்டான்

திகைத்துப் போனாள் நிர்மலா.

'என்ன சொல்கிறான் உளறலா? அவன் ஹாஸ்பிடலில் அக்கறையாய் சேர்த்ததைச் சொன்னால் உளறல்



என்கிறான்... என்ன தான் சொல்ல வருகிறான்... குழப்பமாக இருக்கிறதே...'

நிஜமாகவே அவள் குழம்ப பக்கத்தில் வந்த ராஜமாணிக்கம் அவள் தோள்களை ஆதரவாய் தட்டிக் கொடுத்தவர்,

''உண்மையைச் சொல்லும் நேரம் வந்து விட்டது. சொல்லட்டுமா?'' என்றார்.

''உண்மையா...? என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் அவள் மேலும் அதிர்ச்சியாகி.

ராஜமாணிக்கம் கடகடவென அந்த ரகசியத்தை போட்டு உடைத்தார்.

பலமாய் அதிர்ந்து போனாள் அவள்!

மயங்கி ரோட்டில் விழப்போன அவளை காப்பாற்றி ஹாஸ்பிடலில் சேர்த்து கவனித்தது எல்லாம் சரவணன் தானாம்! விஷயத்தைச் சொல்லியும் இன்பசாகரன் அவளை சட்டை செய்யவில்லை. ஹாஸ்பிடல் பக்கம் எட்டி கூட பார்க்க வில்லையாம்!

நிர்மலாவால் நம்ப முடியவில்லை. அதிர்ச்சியை ஜீரணிக்க முடியவில்லை.

''பின் எதற்காக பொய் சொன்னீர்கள்?''

''எல்லாம் உனக்காகத்தான்...!'' என்றார்.

''எனக்காகவா?''

''ம்ம்... நீதான் மயக்கத்தில் கூட விடாது இன்பா... இன்பா... என பிதற்றிக் கொண்டிருந்தாய். அதைப் பார்த்த சரவணன்தான் உன் பலவீனமான உடல்நிலை

தேற பொய் சொல்வது அவசியம். அதனால் அவரும் உன்னிடம் பொய்களைச் சொல்லி... என்னையும் அப்படியே செய்யச் சொன்னார்...''

இப்போது அவளுக்கு எல்லாம் புரிந்து விட்டது.

அன்று கோபமாய் அவளைப் பேசி விரட்டிய இன்ப சாகரன் அத்தோடு அவளை கைகழுவியும் விட்டான். அந்த புது மாடல் நளினியை வைத்து அவனது வேலையை கவனிக்க ஆரம்பித்து விட்டான். அவள் தான் அது புரியாமல் அவனையே நினைத்துக் கொண்டு, இன்பா... இன்பா... என அவனது பெயரையே பிதற்றிக் கொண்டு குமுட்டை போல் இருந்திருக்கிறாள்!

என்ன ஒரு அவமானம்! என்ன ஒரு ஏமாற்றம்!

இன்பசாகரன் அவனது இன்பா அவளை ஒரேடியாக தூக்கியல்லவா எரிந்து விட்டான்.

ஹாஸ்பிடலில் அட்மிட் ஆகியிருக்கும் விஷயத்தை தந்தை சொல்லியும் அவளை எட்டி கூட பார்க்கவில்லையே...?

அப்படிப்பட்ட அவனைப் போய் இவ்வளவு காலமும் தனது வாழ்க்கைத் துணையாய் தனக்கு எல்லாமே அவன் போல் நினைத்துக் கொண்டு... எவ்வளவு ஏமாந்திருக்கிறாள்?

வெறுப்பாய் நினைத்தவளுக்கு சரவணனின் ஞாபகம் வந்தது.

உதவிகளைச் செய்து விட்டு... அதில் தான் பங்கு எதுவும் இல்லாதது போல் அல்லவா இந்த சரவணன் நடமாடி இருக்கிறார்?



சரவணன் எதற்கு நம் மீது பரிவு காட்ட வேண்டும்? அதீத அக்கறை காட்டி ஹாஸ்பிடலில் சேர்த்து உதவ வேண்டும்?

நினைத்துப் பார்த்த போது முன்பு, ''எனது விளம்பர படத்தில் நீங்கள் நடிப்பீர்களா?'' என அவன் கேட்ட கேள்வி ஞாபகத்திற்கு வந்தது.

# 11

நிர்மலாவுக்கு நடப்பதை நம்புவதற்கு ஜீரணிப்பதற்கு கஷ்டமாய்த்தான் இருந்தது. ஆனால் வேறு வழியில்லை! அவள் நம்பித்தான் ஆக வேண்டும். ஜீரணித்து தான் ஆக வேண்டும்!

அவள் பொறுக்கமாட்டாதவளாய் மறுநாள் ஸ்டூடியோ சென்று இன்பசாகரன் எதிரிலேயே போய் நின்ற போது அவன் கொஞ்சமும் அதிரவில்லை.

வெகு சாதாரணமாய் பக்கத்தில் தெரிந்த கண்ணாடியைக் காட்டினான்.

''உன் பிம்பத்தைப் பார்... உடல் மெலிந்து கன்னத்தில் டொக்கு கூட விழுந்து விட்டது. இனி டி.பி. காச நோய் விளம்பரத்திற்குத்தான் உன்னை பயன்படுத்த முடியும். இப்போதாவது புரிந்ததா?'' என்றான்.

அவளும் கண்ணாடியில் பார்த்தாள். ''ரொம்பவும் மோசமில்லை. உடல் நலமில்லாததால் சற்று மெலிந்து தோற்றத்தில் பொலிவு குறைந்திருக்கிறது. அவ்வளவு தானே? அதை சரி செய்து விடலாம் தானே?''

அதற்கும் விளக்கம் சொன்னான் இன்பசாகரன்.

''இது மட்டும் காரணமல்ல. இன்னொரு காரணமும் வைத்திருக்கிறேன்...'' என்றான் பீடிகையாய்.

''இன்னொன்றா?''

''ம்ம்... ஒன்று உன் உடல் நிலை. இன்னொன்று ஒரே மாடலாய் உன்னை வைத்தே நிறைய விளம்பரங்கள் செய்தாயிற்று. அதனால் மாற்றம் செய்ய சரியான தருணம் பார்த்துக் கொண்டிருந்த என் சூழ்நிலை. அதனாலே உனக்கு உடல் நோவு என்றதும் வேறு ஒரு மாடலை செலக்ட் பண்ணி விட்டேன். மிஸ் நளினி தான் அந்த மாடல். இனி அவளை வைத்துதான் விளம்பரங்கள் பண்ணப் போகிறேன்...''

''அப்படியானால் நான்...?''

''நீ... தேவையில்லை. உன்னை கைகழுவி விட்டேன்... என்று எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்...'' என்றான் சர்வசாதாரணமாய்.

அவனது இந்தப் பேச்சு அவள் கொஞ்சமும் எதிர்பாராதது. எப்படி எடுத்தெறிந்து பேசுகிறான்? இவனுக்கு என்ன பதில் கொடுப்பது?

ஒரு கணம் பேச வார்த்தைகளின்றி ஊமையாகத்தான் நின்றாள் அவள்.

அவன் விடவில்லை. மறுபடியும் அவள் முகத்துக்கு நேராக சொடுக்கிட்டான்.



''இன்னொன்றையும் தெரிந்து கொள். நளினி என் மாடல் மட்டுமல்ல. என் லைப் பார்ட்னராகவும் வர இருக்கிறாள். அதற்கு சம்மதமும் தெரிவித்து விட்டாள்...''

கூசாமல் சொன்னான் அவன்.

அதற்கு மேல் அவளால் அங்கு நிற்க முடியவில்லை. ஓடி வந்து விட்டாள்.

வந்தவள் தொப்பென படுக்கையில் குப்புற விழுந்து கொஞ்ச நேரம் அழுதாள். பின் அழுவது கோழைத்தனம் என நிமிர்ந்து எழுந்தவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

எதிரில் இருந்த பெட்ரூம் கண்ணாடியில் அவளது முகம் தெரிந்தது.

நன்றாக உற்றுப் பார்த்தாள்.

நோய்வாய்ப் பட்டதில் அவ்வளவு மாற்றம் ஏற்பட்டு விட்டதா?

மறுபடியும் அவளுள் உறுதி கூடியது.

இல்லையே! அப்படி ஒன்றும் மோசமாக தோற்றம் மாறவில்லையே...!

இருக்காது! இன்பசாகரனின் இந்த திடீர் மாற்றத்திற்கு இது மட்டும் காரணமாக இருக்க முடியாது. வேறு எதாவது ஒரு காரணம் கண்டிப்பாக இருந்திருக்க வேண்டும்.

என்ன அது? எப்படி அதை கண்டுபிடிப்பது?

யோசனையில் தவித்தவளுக்கு மறுநாள் சரவணன் மூலமாக அதற்கும் பதில் கிடைத்தது.

நளினிக்கு கோர்ட்டில் அதுவரை நடந்து வந்த பூர்விக சொத்து கேஸ் ஒன்று அவள் பக்கம் தீர்ப்பாகி அதனால் பல கோடி ரூபாய்களுக்கு அதிபதியாகி பெரும் பணக் காரி ஆகிவிட்டாளாம் நளினி!

இதுவெல்லாம் மூன்று மாதத்திற்கு முன்பு தான் நடந்திருக்கிறது. விஷயத்தை கேள்விப்பட்டு இன்ப சாகரன் தான் தேடிப்போய் நளினியிடம் வாழ்த்தைச் சொல்லியிருக்கிறான்.

அதற்குப் பின் இருவரும் அடிக்கடி சந்தித்து பேசி யிருக்கிறார்கள். பழகியிருக்கிறார்கள். நளினி பல கோடி ரூபாய் சொத்துக்கு அதிபதி என இன்பசாகரனுக்கு தெரிந் ததும் அவனுக்கு பொறுக்க முடியவில்லை. அவளை எப்படியாவது வளைத்து விட வேண்டும் என்கிற ஆசை வெறி வந்து விட்டது.

அதே சமயம் நிர்மலாவையும் கழற்றி விட்டாக வேண்டுமே... என சமயம் பார்த்திருக்கிறான். அதற்கு ஏற்றார் போல் நிர்மலாவும் டைபாய்டு காய்ச்சலில் படுக்க... இது தான் சமயம் என... 'உன் அழகு போய் விட்டது... நீ... மாடலிங்கிற்கு லாயக்கில்லை...' என தாம்தீம்மென குதித்து அவளை கழற்றியும் விட்டு விட்டான்...!

இது தான் நடந்திருக்கிறது... நடந்திருக்க வேண்டும்... என ஒருவாறு யூகித்து முடிவு செய்தாள் நிர்மலா.

ஆனால் லேசில் எதையும் நம்பாத உள்மனம் ஏற் படுத்திய தவிப்பில் மறுநாளும் இன்பசாகரனின் ஸ்டூ டியோ வரை சென்று அவளை சந்திக்க முயன்றாள்.



நாயை விரட்டுவது போல், ''வராதே... போ...!'' என விரட்டினான் அவன்.

ஆக... அவள் நினைத்தது எல்லாம் சரி. இன்பா ஒரேடியாக மாறிவிட்டான். அவனுக்கு பணக்காரியான நளினிப் பித்தம் பிடித்து விட்டது. அது அவ்வளவு லேசில் தெளியப் போவதில்லை. தெளியும் வரை அவள் காத்திருந்து தான் ஆக வேண்டும்.

என்ன செய்ய?

திகைப்பாய் தவித்து யோசித்தவளுக்கு தினம் தினம் வந்து ஸ்னேகமாய் பேசிச் சிரித்துச் செல்லும் சரவணனே பெரும் ஆறுதலாக இருந்தான்.

தினம் தன்னை நோகடிக்கும் மனநிலையை மாற்ற விரும்பியவளாய் சரவணனின் திட்டத்திற்கு சம்மதித் தாள். அவனிடம் விளம்பர மாடலாக வேலை செய்ய முடிவெடுத்தாள் அவள்!

# 12

அன்று தான் முதன் முறையாக சரவணின் விளம்பர ஸ்டூடியோவைப் பார்த்து அதிசயித்தாள் நிர்மலா.

சின்னதாக இருந்தாலும் தேவைப்படும் ஒவ்வொரு பிரி விற்கும் தனித்தனி அறைகளோடு மிக அழகாக இருந்தது.

''தங்களது பொற்பாதங்கள் பட்டமைக்கு... வந்தனம்... வந்தனம் இளவரசி!'' என்று அவன் விளித்துச் சொன்ன போது சிரித்து விட்டாள்.

''ஏழையின் குடிசை எப்படி இருக்கிறது?'' என்று சரவணன் வினவவும் செய்தான்.

''பிரமாதம்...!'' என்றவள், ''ஆனால்...'' என இழுத் தாள்.

''சொல்லுங்கள் இளவரசி...!''

''குடிசையே இப்படி என்றால்... மாளிகை ஒன்று கட்டினால் அது எவ்வளவு பிரமிப்பாய் இருக்கும்?''

''தங்களது ஒத்துழைப்பு... ஆசி... இருந்தால் அதுவும் நடக்கும். பெரிய மாளிகை போன்ற ஸ்டூடியோ ஒன்றை உருவாக்கலாம். அதைப் பார்த்து இன்பசாகரன் ஓடோடி உங்களைத் தேடி... வரலாம்... வரலாம்... என்ன... வரு வார்...!'' என முடித்தான் சரவணன்.

அவள் முகம் மாறிவிட்டது. அதை சரவணனும் அதி சயமாய் கவனித்தான்.

அவளுக்கும், 'இந்த சரவணன் எவ்வளவு இலகுவாய் நகைச்சுவையாய் பேசுகிறார்? இதே போல் இன்பசாகர னிடம் பேச முடியுமா?' என்ற நினைப்பே சலிப்பாய் ஓடியது.

அவள் மனநிலையை புரிந்தவன் போல் சரவணன் ஸ்டூடியோவைச் சுற்றிக் காட்டினான். பணியாளர்களை அறிமுகப்படுத்தி வைத்தான்.

அவன் இதுவரை செய்து கொடுத்த விளம்பரப் படங் களை எல்லாம் காட்டினான். அவற்றில் சில விளம்



பரங்கள் வாடிக்கையாளர்களிடம் பெரும் வரவேற்பை பெற்றிருந்ததையும் அவளால் யூகிக்க முடிந்தது.

எல்லாவற்றையும் பார்த்த நிர்மலா, திறமையிலும் சரி... வளர்ச்சியிலும் சரி... இன்பசாகரனின் கம்பெனிக்கு எவ்விதத்திலும் சரவணனின் கம்பெனி குறைந்த தில்லை... என்பதையும் உணர்ந்து கொண்டாள்.

அவனோடு பழகப் பழகத்தான் தொழில் மீது அவன் காட்டும் அக்கறை, ஆர்வம் எல்லாம் புரிந்தது. மேலும் சரவணன் அவளை வெறும் போஸ் கொடுக்கும் மாட லாக எண்ணாமல் அவளிடமும் வாடிக்கையாளர் சொன்ன விளம்பர விஷயங்களை விளக்கினான். அவளது அபிப் பிராயத்தையும் கேட்டான்.

இதே நிலையில் இன்பசாகரன் இருந்தால், ''உன் யோசனையை குப்பையில் கொண்டு போய் போடு. உடம்பைக் காட்டுவது தான் உன் வேலை...'' என முகத்தி லடித்தாற் போல் சொல்லி விடுவான்.

ஆனால் சரவணன் அவளது எண்ணங்களுக்கு, யோச னைகளுக்கு ரொம்பவும் ஆர்வம் காட்டியதும் உள்ளுக் குள் அவள் அது நாள் வரை அடக்கி வைத்திருந்த எண்ணங்கள் உயிர்பெற்று, இறக்கை கட்டிக் கொண்டு பறக்கத்தான் ஆரம்பித்தன.

அவளும் தினமும் வீடு வந்ததும் நோட் பேடை திறந்து வைத்துக் கொண்டு மணிக்கணக்கில் சிந்தித் தாள். இரவெல்லாம் நீண்ட நேரம் விழித்து யோசித்து நிறைய புதுப்புது ஐடியாக்களை கண்டுபிடித்து குறித்துக் கொண்டாள்.

மறுநாள் ஆவலாய் சரவணனிடம் சென்று காட்டும் போது. ''பிரமாதம்? பிரமாதம்! இந்த விளம்பரத்திற்கு இந்த ஐடியா... பெரிய வெற்றியைத் தேடித்தரும். கன்கிராட்ஸ்!'' என உச்சி குளிர அவளைப் பாராட்டு வான்.

அவள் அதில் மேலும் உற்சாகமாகி செயல் பட ஆரம் பித்தாள்.

அவர்கள் எதிர்பார்த்தது போலவே நிர்மலாவை வைத்து சரவணன் உருவாக்கிய விளம்பர படங்கள் க்ளையண்ட்டுகளிடையே நல்ல வரவேற்பை பெற்றது. மேலும் அது போன்ற படங்களை உருவாக்கித்தருமாறு ஆர்டரும் வர ஆரம்பித்தது.

அதைக் கண்ட சரவணன் ஒரு நாள் அவளை உட்கார வைத்து எதிர்கால திட்டங்களை விளக்கினான். அவள் நம்ப முடியாத ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள்.

''உங்களால் செய்ய முடியுமா?'' என்றாள் சந்தேகத் துடன்.

''செய்ய முடியும் என்றால் செய்வீர்களா? அவளைப் பார்த்தபடி கேட்டான் சரவணன்.

அவள் பலமான தலையசைப்புடன் 'உம்' கொட்டி னாள்.

''அப்படியானால் நீங்கள் இன்னும் பெரிய... புகழ் பெற்ற மாடலாக உருவாக வேண்டும்...''

''புகழ் பெற்ற மாடலா...?''

அவள் புரியாமல் விழித்தாள். அவன் புரியும்படி விளக்கி னான்.



''அதாவது... ஒரு திறமையான விளம்பரத்துறையில் துடிப்புமிக்க ஒரு கோஆர்டினேட்டரின் துணையோடு... நீங்கள் இன்னும் விதம் விதமாய் வெவ்வேறு பொருட் களுக்கு விளம்பர மாடலாய்த் தோன்ற வேண்டும். உங்கள் கம்பீரமான அழகும் கோஆர்டினேட்டரின் வித் யாசமான முயற்சிகளும் சரியான ஒன்று சேர்ந்து விட் டால் நீங்கள் எளிதில் ஒரு புகழ் பெற்ற மாடலாய் இந்த துறையில் வலம் வர முடியும்?''

அவன் மூச்சு விடாமல் பேசி முடித்த போது அவள் சலிப்புடன் பார்த்தாள்.

''கேட்பதற்கு எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் நடக்க வேண்டுமே?''

''ஏன் நடக்காது?''

''அப்படி ஒரு திறமையான துடிப்பான கோஆர்டினேட் டரை தேடிப் பிடிக்க வேண்டும்... பின் அவர் முழு முயற்சி எடுத்து என்னை பெரிய பிரபலமான மாடலாக்க மெனக்கிட வேண்டும். இதுவெல்லாம் நடக்கிற காரி யமா? அப்படியொரு கோஆர்டினேட்டர் தான் கிடைப் பாரா?''

''ஏன் கிடைக்கமாட்டார்...? நீங்கள் ஒன்றும் தேடிப் போக வேண்டாம். உங்களைத் தேடி அவரே வர லாமே?''

''என்னைத் தேடி அவர் வருவாரா? யாரது?'' அவள் விழிகளை அகல விரிக்க அவன் சிரித்தான்.

''இன்னுமா புரியவில்லை? இவ்வளவு நேரம் உங் களிடம் பொறுமையாய் எதிரில் நின்று பேசிக் கொண் டிருக்கிறாரே... அவர் தான்!''

''அட... நீங்களா?''

அதுவரை எதோ சிந்தனையில் பேசியவள் அவன் சொன்னதைக் கேட்டு அதிரவே செய்தாள்.

''உங்களால் முடியுமா?''

சட்டென அவளையறிமலே வார்த்தைகள் வந்து வெளிவந்தது.

சரவணன் கடகடவென சிரித்து விட்டு நிறுத்தியவன், ''என்னைப் பற்றி நானே பீற்றிக் கொள்ளக் கூடாது. இருந்தாலும் இப்போது வேறு வழியில்லாததால் சொல்கிறேன். ஆல் இந்தியா அட்வர்டைஸிங் பெடரேஷன் நடத்திய போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றிருக்கிறேன். கில்டர் அசோஷியேஷன் அமைப்பும் என்னை சிறந்த கோஆர்டினேட்டராக தேர்ந்தெடுத்து விருது கொடுத்துள்ளது. நிர்மலா மேடம் அவர்களை புகழ்பெற்ற ஒரு மாடலாக்க... சரவணான அடியேனுக்கு இந்தத் தகுதிகள் போதும் என்றும் நினைக்கிறேன்...''

அவன் பேச்சைக் கேட்டு குபுக்கென சிரித்து விட்டாள். ''ஐயோ...! நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை...'' என்றாள்.

அவன் பேசாது அவளையே பார்க்கவும், ''உங்கள் திறமை மீது நம்பிக்கை இருக்கிறது. ஆனால் என்னால் தான் முடியுமா? என்கிற கேள்வி எழுகிறது. மேலும் புகழான நம்பர் ஒன் மாடல் ஆகுவது சாதாரண விஷயமில்லை தானே?'' என்றாள் புரிந்து கொள்பவள் போல். அவனும் மறுக்காமல் தலையசைத்தான்.

''ஆனால் முயற்சிக்கலாமே...'' என்றான்.



மேலும் இரண்டு நாள் யோசித்து இருவரும் அந்த முடிவிற்கு வந்தார்கள். சரவணன் தான் அடிக்கடி அவளிடம், ''ஆனாலும் பாருங்கள் நீங்கள் நம்பர் ஒன் மாடலாகப் போகிறீர்கள். உங்கள் புகழைப் பார்த்து இன்பசாகரன் உண்மையை உணர்ந்தவராய் உங்களைத் தேடி வரத்தான் போகிறார்...'' என்றான்.

அதற்கு, ''எனக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை...'' என்றாள் அவள் சட்டென.

அவன் அதிர்ந்து திகைப்பாய் பார்க்க அவள் சிரிப்புடன் விளக்கினாள். ''இந்த நீங்கள், உங்கள், எல்லாம் வேண்டாம். என்னை நீ... வா என்றே சாதாரணமாக அழையுங்கள். அது தான் பிடிக்கும்!'' என்றாள்.

அவன் அதை ரஸிப்பது போல் சிரித்து விட்டு, ''ஒகே! நீங்கள்... இல்லை... நீ விரும்பியது போலவே அழைக்கிறேன். நாளையே எனது விளம்பர ஸ்டூடியோவிற்கு நீ வருகிறாய். நாம் இருவரும் கடும் முயற்சியுடன் நமது வேலையை ஆரம்பிப்போம் சரிதானா?''

பலமாய் தலையாட்டி மீண்டும் அழகாய் புன்னகைத்தாள் அவள்.

## 13

தினமும் சரவணனின் ஸ்டூடியோவிற்கு குதி போடாத குறையாய்த்தான் நிர்மலா கிளம்பி வர ஆரம்பித்தாள்.

அது என்னவோ இன்பசாகரன் போல் சிடுசிடுவென இல்லாமல் எப்போதும் சிரித்த முகத்துடன் நடமாடும் சரவணனுடன் வேலை பார்ப்பது சந்தோஷமாகவே இருந்தது.

அவளை மட்டுமில்லாமல் பணியாளர்களிடமும் இனிமையாய் பேசி உற்சாகம் கொடுத்து அவர்களை வேலை வாங்கிக் கொண்டிருந்தான் சரவணன். அது மட்டுமில்லாமல் ஒவ்வொருவரின் கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து அபிப்பிராயங்களை கேட்டான்.

யாரையும் அலட்சியமாய் எடுத்தெறிந்து இன்பசாகரனைப் போல் பேசாமல் ஒவ்வொன்றிலும் அக்கறை காட்டியது அவளை வியக்கவும் வைத்தது.

அன்று அப்படித்தான் அவன் சொல்லியபடி மஞ்சள் வண்ண சுடிதாரில் கேமிரா முன் மாடலிங்கிற்காக தோன்றினாள் அவள்.

குனிந்து கேமிராவின் லென்ஸ் போகஸ் செய்தவன் நிமிர்ந்து விழிகளை விரித்து பார்த்து, ''பியூட்டி ஃபூல்! உலகத்து அழகையெல்லாம் ஒட்டு மொத்தமாய் உன்னிடம் பார்த்தாற் போல் இருக்கிறது...'' என்று பாராட்ட கன்னம் சிவக்கத்தான் செய்தாள் அவள்.

இருந்தும் விடாமல் குறும்போடு, ''பார்த்து சரவணன் சார், நீங்கள் இப்படியே பேசிக் கொண்டிருந்தால் விரைவிலேயே இந்த ஸ்டூடியோவை மூடி விட்டு ஐஸ் பேக்டரி ஒன்று தான் தொடங்க வேண்டியிருக்கும்...'' என்றாள் சிரிப்பு மலர.



பதிலுக்கு சரவணனும் முகத்தை ஆட்டியபடி, ''ஆனாலும் உனக்கு ரொம்பவும் கஞ்சத்தனம் தான்...'' என்றான் பீடிகையோடு.

''கஞ்சத்தனமா...? என்ன சொல்கிறீர்கள்?'' அவள் திடுக்கிட்டு கேட்க சிரித்தவன். ''பின் என்ன? வண்டி வண்டியாய் புகழ்ந்தும் பதிலுக்கு... இப்படி நெடுநெடுவென வாட்ட சாட்டமாய் சிவப்பு தோலும்... சுருள் முடி பொதிந்த கம்பீரமுமாய் நிற்கும் இந்த ஆளைப் பற்றி ஒரு வார்த்தை புகழ்ந்து சொல்ல அந்த மனசு நினைக்காமல் கஞ்சத்தனமாய் அல்லவா பேசுகிறது?'' என்று சொல்ல சட்டென சிரித்து விட்டாள் அவள்.

சரவணனும் சொல்லியபடி அதே புன்னகையுடன் ரிவியூ மிரரை சரி செய்யச் செல்ல அவனை அகலமாய் விரித்து கண்களால் பார்த்து வியக்கவே செய்தாள்.

உண்மை தான்...! இந்த நெடு நெடு உயரம்... திட காத்திரமான உடல்வாகு... முகத்தில்... அந்த கம்பீரம்... நிஜமாகவே இவனிடம் எதோ கவர்ச்சி இருக்கத்தான் செய்தது... என்று மலைத்து தான் பார்த்தாள்.

அதை சட்டென யதேச்சையாய், திரும்பிய சரவணனும் கவனித்து விட ''அட மார்க் போடுகிற வேலை ஆரம்பமாயிற்றா? நல்லது...! இதோ... நின்று போஸ் கொடுக்கிறேன்... கொஞ்சம் கணித்து கவனித்து மார்க்கைப் போடுங்கள் டீச்சரம்மா...'' என சொல்லியதோடு நில்லாமல் நின்று கைகளை உயர்த்தி அபிநயித்து ஒரு போஸ் ஒன்றும் கொடுத்தான் அவன்.

கொல்லென சிரித்து அடக்க முடியாமல் குலுங்கி

சரவணனின் உழைப்பும் அயராது காட்டும் அவனது திறமையும், மற்றவர்களை அனுசரித்துப் போகும் அவனது குணமும் அவளை ரொம்பவும் ஆச்சரியப் படுத்தின.

இதே நிலையில் இன்பசாகரனை ஒரு கணம் நினைத்துப் பார்த்தாள். செட்டில் தாம்தீம்மென குதித்துக் கொண்டு... தன்னைத் தவிர மற்ற அனைவரும் முட்டாள்கள் போல் பாவித்துக் கொண்டு அவன் நடக்கும்... விதம்... எல்லாம் அவள் ஞாபகத்திற்கு வந்தது.

தன்னை மட்டுமில்லாமல் பணியாற்றும் ஊழியர்களிடமும் இனிமையாய் பேசி அவர்கள் சொல்லும் கருத்துக்களையும் காதில் வாங்கிக் கொண்டு செயல்பட்டான் சரவணன்.

சின்னதாய் அவள் செய்யும் விஷயங்களுக்கு கூட பெரிதாய் பாராட்டுரை கூறி அவளை உற்சாகப்படுத்தினான். அது அவளுக்கு ஆர்வமாய் வேலையில் ஈடுபட உதவியது.

தினம் வேலை முடிந்ததும் அவனது காரிலேயே அவள் வீடு வரை சென்று ட்ராப் செய்து விட்டு போவான் சரவணன். காரிலிருந்து இறங்கி அவனுக்கு 'பை' சொல்லி விட்டு நடந்தாலும் சட்டென, இனி நாளை தான் இவனைப் பார்க்க முடியும் பேச முடியும் என்ற ஒரு விதமான தவிப்பு உணர்வு அவளையறியாமல் அவளுள் எழுந்த போது திடுக்கிடவே செய்தாள் நிர்மலா.

வேலையின் போது அவன் விளம்பர படங்களை விவரித்து விளக்கும் போது அந்த அருகாமையில்



அவளையறியாமல் அவள் கண்கள் அவனையே உற்றுப் பார்க்கும்.

இன்பசாகரனை விட ஏாட்ட சாட்டமாய், கம்பீர முகத்துடன் மென்மை தவழும் சிரிப்புடன் நல்ல பர்ஸனாலிட்டி தான் இவனுக்கு என வியக்கவே செய்வாள்.

எல்லாவற்றையும் விட தன் மீது இவ்வளவு அக்கறை கொண்டு உதவுகிறானே... தன்னை ஒரு புகழ் பெற்ற மாடலாக உருவாக்குவதில் இவனுக்கு என்ன அக்கறை? என்ற கேள்வியெல்லாம் அடிக்கடி அவளுள் எழுந்து குடைந்தது.

ஒரு நாள் அடக்க முடியாதவள் போல் கேட்டே விட்டாள். சரவணன் தனது வழக்கமான சிரிப்புடன், ''அதற்கு இரண்டு காரணம்...'' என்றான். பின் அவனே தொடர்ந்து, ''ஒன்று ஒரு நல்ல நண்பனாய் உங்களுக்கு உதவப் போகிறேன். மற்றொன்று உங்களை பிரபல மாடலாக்குவதன் மூலம் எனது விளம்பரக் கம்பெனியும் பெரும் வளர்ச்சியடையும் தானே?'' என்றும் விளக்கினான்.

''அவ்வளவு தானா? வேறொன்றுமில்லையா?'' என அவள் திரும்பவும் ஒருவித ஆற்றாமையில் கேட்க, ''வேறு என்னவாக நினைத்தீர்கள்...?'' என அவன் மடக்கவும், தலையசைப்புடன் ''ஒன்றுமில்லை...'' என சமாளித்தாள் அவள்.

ஆனால் சரவணன் தான் அடிக்கடி இன்பசாகரன் பற்றி எதாவது செய்தியாய் சொல்லிக் கொண்டிருப்பான். அவன் நளினியை மாடலாய் வைத்து நிறைய கம்பெனிகளுக்கு விளம்பர காண்டிராக்ட்கள் உருவாக்க

முழு முயற்சியோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறானாம்.

இருவரும் நிறைய எதிர்காலத் திட்டங்கள் வைத்து செயல்படுவதாகவும், பேசிக் கொள்வதாகவும் தெரிவித்தான்.

முதலில் இதையெல்லாம் ஆர்வமாய் கேட்ட நிர்மலா... பின் இன்பசாகரன் பேச்சை எடுத்தாலே முகம் சுளிக்கும் அளவுக்குப் போய் விட்டாள். இனி அவனைப் பற்றி நினைப்பதோ... அவனுக்காக ஏங்குவதோ முட்டாள் தனம்...! என்ற முடிவிற்கே வந்து விட்டாள்.

ஆனால் சரவணன் தான் விடாமல் ''பார் நிர்மலா, எப்படியும் உங்களை பிரபல மாடலாக்கி அதன் மூலம் அந்த இன்பசாகரன் உங்களைத் தேடி வந்து மன்னிப்பு கேட்கும்படி செய்ய வைக்கிறேன்...' என சூளுரைத்துக் கொண்டிருந்தான்.

அப்போதும் நிர்மலா சிரித்தவாறே, ''சரவணன், இந்த மாப்பு மன்னிப்பு டயலாக் எல்லாம் சினிமாவிற்குத்தான் ஒத்து வரும். பேசாமல் நாம் நம் வேலையைப் பார்ப்போம்...'' என பேச்சை மாற்றுவாள்.

அவளுக்கு முன்பு போல் இன்பசாகரனிடம் எவ்வித ஈர்ப்பும் இல்லாமல் வெறுப்பே மிஞ்சுவதை சரவணனும் நன்கு கவனிக்கத்தான் செய்தான்.

மேலும் ஒரு வாரம் சென்றது. நிர்மலா வந்த நேரமோ என்னவோ சரவணனுக்கு அந்த மிகப் பெரிய விளம்பர காண்டிராக்ட் கிடைத்தது. பிராம்மாண்டமாய் ஒரு கோடி ரூபாய் பட்ஜெட்டில் எடுக்க வேண்டிய விளம்பரப் படம்!



துள்ளிக் குதிக்காத குறையாய் ஓடி வந்து அவளிடம் விஷயத்தைச் சொன்னான் சரவணன். நிர்மலாவிற்கும் ஒரே சந்தோஷம்தான்! இருவரும் உட்கார்ந்து அந்த விளம்பர படத்தை எப்படி வெற்றிகரமாக உருவாக்குவது என்பது பற்றி சிந்திக்க ஆரம்பித்து விட்டனர்.

# 14

நிர்மலாவும் சரவணனும் இரவு பகலாய் சிந்தித்தார்கள். அதே நினைப்பில் நடமாடினார்கள். பலமுறை சந்தித்து விவாதித்தார்கள். பின் கவனமாய் திட்டமிட்டு அந்த ஒரு கோடி ரூபாய் விளம்பரப் படத்தை உருவாக்கினார்கள்.

அது பிரபல ஜவுளி நிறுவனம் ஒன்றுக்கான விளம்பரப் படம்!

அதில் சங்க கால காட்சி ஒன்றை உருவகப்படுத்தி உருவாக்கி இருந்தார்கள். சங்க கால மன்னன் ஒருவனின் மகளான பட்டத்து இளவரசிக்கு படை வீரர்கள் மூலம் நகரில் தண்டரோ போட்டு அழகான வண்ணச் சேலைகள் நெய்து உருவாக்கி கொடுப்பவர்களுக்கு தங்கக் காசுகள் பரிசு என்பது போலவும்... அதனால் தூயமான நெசவு ஒன்றில் உருவாக்கப்பட்ட பட்டுச் சேலை ஒன்று இளவரசியால் தேர்ந்தெடுக்கப்பட்டு அவள் அணிந்து

கொள்வது போலவும் விளம்பரக் காட்சியை அமைத்திருந்தார்கள்.

அவர்களின் அந்த 'கான்செப்ட்' அந்த பிரபல துணி நிறுவனத்திற்கு பிடித்துப் போய் விட்டது. அதில் பட்டத்து இளவரசியாய் ஜொலிக்கும் ஒப்பனையுடன் நிர்மலாதான் நடித்திருந்தாள்.

அவளது அந்த இளவரசி தோற்றத்தையும் அதில் பளீரிடும் அவளது இயற்கையான அழகையும் வெகுவாய் ரஸித்த சரவணன் வாய்விட்டே பாராட்டினான்.

''கன்கிராட்ஸ் நிர்மலா! அச்சு அசப்பில் பாண்டிய நாட்டு இளவரசி போலவே ஆகிவிட்டீர்கள். அப்படியே தர்பார் ஒன்று அமைத்து பக்கத்து நாட்டு மன்னர்களை எல்லாம் வரச் செய்து சுயம்வரம் கூட நடத்தி விடலாம் போலிருக்கிறதே...!'' என கேலியில் முடிக்க... கலகல வென நகைத்தாள் நிர்மலா.

கூடவே, ''ஏதேது... சொல்வதைப் பார்த்தால்... சுயம்வரத்தில் கலந்து கொள்ள இங்கு ஒருவரும் மன்னர் வேஷம் போட்டு தயாராகிவிடுவார் போல் தெரிகிறதே...?'' என்கவும் சரவணன் விடாமல், ''இல்லை... இளவரசி இங்கு தளபதியார் மட்டும் தான் இருக்கிறார்கள். மன்னர் இன்பசாகரன் பக்கத்து மாளிகையில் தான் இருக்கிறார். நீங்கள் ஆணையிட்டால் உடனே கூட்டி வந்து விடுகிறேன்...!'' என சிரிப்புடன் முடிக்க... இன்பசாகரனின் பெயரைக் கேட்டதுமே நிர்மலாவின் முகம் கூம்பிப் போயிற்று.

அதை காட்டிக் கொள்ள விரும்பாதவளாய் பேச்சை உடனே மாற்றினாள் அவள்.



விளம்பரப் பின்னணியில் தோகை விரித்த டிசைனை வைத்து அவைகள் ஓடுவது போல் காட்சியை உருவாக்கினால் நன்றாக இருக்கும் என அவள் ஐடியா சொல்ல... சரவணனும் அவள் ஐடியாவைப் பாராட்டி அப்படியே செய்தான்.

படத்தை முடித்து எல்லோரிடமும் காட்டிய போதே, ''பிரமாதம்! ரொம்பவும் கவர்ந்திருக்கிறது...'' என்ற பாராட்டு மழை பொழிய ஆரம்பித்து விட்டது. அதனால் விளம்பரத்தை மார்க்கெட்டில் சந்தைப்படுத்திய பத்து நாட்களிலே பெரும் ஹிட்டாகி விளம்பர உலகில் ஒரு பரபரப்பை உண்டு பண்ணி விட்டது.

க்ளையண்ட் கம்பெனி சொன்னபடியே ஒரு கோடி ரூபாய்க்கான செக்கை கொடுத்து விட்டது. அதில் ஐம்பது லட்சத்தை உடனே நிர்மலாவின் பெயருக்கு செக்காக மாற்றி நீட்டினான் சரவணன்.

''ஐயோ! இதெல்லாம் எதற்கு? என் மாத சம்பளம் போதுமே...! என்றாள் புதிரான பதற்றத்துடன்.

''உன் உழைப்பினால் அழகினால் வந்த காசு. உனக்கு சரிபாதி தொகையை கொடுத்தாக வேண்டும்...!'' என பதிலுக்கு பிடிவாதமாய் சொல்லி விட்டான் அவன்.

நிர்மலா அவனது பணத்தாசை இல்லாத பெருந்தன்மையை எண்ணி வியந்தாள். இதோ இது இன்பசாகரனாய் இருந்தால் மொத்த பணத்தையும் லபக்கிக் கொண்டு அவளுக்கு 'நன்றி' என்ற ஒரே வார்த்தையுடன் அகன்று விடுவான் என்பதும் தோன்றிற்று.

அடுத்து வந்த வாரங்களில் மேலும் ஒரு சோப் விளம்பரம் அதற்கு அடுத்தாற் போல் அழகு க்ரீம் விளம்பரம்

என வாய்ப்பு வந்தது. நிர்மலா அவைகளுக்கு மாடல் செய்ய சரவணன் தனது முழு திறமையையும் அதில் காட்டி வித்தியாசமான கோணங்களில் நிர்மலாவையும் விளம்பரங்களையும் படமாக்கினான்.

அவர்கள் எதிர்பார்த்தது போலவே அந்த இரண்டு விளம்பரங்களும் பெரும் ஹிட் ஆகி விட... ஒரே மாதத்தில் நிர்மலா விளம்பர உலகில் 'டாப் ஸ்டார்' ஆகி விட்டாள். பத்திரிகைகள் எல்லாம் அவள் தான் நகரின் நம்பர் ஒன் மாடல் என போட்டி போட்டுக் கொண்டு எழுத ஆரம்பித்தன.

நிர்மலா மாடலிங் செய்த மற்றொரு நகையலங்கார விளம்பரம் ஒன்றும் மறுபடியும் பெரும் வரவேற்பை பெற நிர்மலா பிஸியான நம்பர் ஒன் மாடலாக நிஜ மாகவே ஆகி விட்டாள்.

நிர்மலாவுக்கு நடக்கும் வெற்றிகளைப் பார்த்து உள்ளூர சந்தோஷம் தான். குதூகலம் தான். ''தாங்க்ஸ் சரவணன்! உங்களால் தான் எல்லாம் சாத்தியமாயிற்று. உங்களுக்கு எப்படி நன்றிக்கடன் செலுத்தப் போகிறேன் என்றே தெரியவில்லை.

சரவணன் பதிலுக்கு சிரித்தவன், ''நிர்மலா உன்னை நம்பர் ஒன் மாடலாக்குவது மட்டும் என் கடமை அல்ல... எனக்கு இன்னொரு கடமையும் இருக்கிறது...'' என்றான் பொறுப்பான குரலில்.

''இன்னொரு கடமையா? என்ன அது?''

''மறந்துவிட்டாயா நிர்மலா? இன்பசாகரனுடன் உன்னை சேர்த்து நீ விரும்பிய வாழ்க்கையை உனக்கு ஏற்படுத் திக் கொடுப்பது... அதுவும் என் கடமை அல்லவா?''



இன்பசாகரனின் பெயரைக் கேட்டதுமே நிர்மலாவின் முகம் மாறியது. அதை கவனித்த சரவணனும் திகைக்க நிர்மலாவோ, ''அதை விடுங்கள். விளம்பர உலகில் நாம் செய்த சாதனை மகத்தானது. அதற்காக சந்தோஷப் படுவோம்..!'' என பேச்சை மாற்றி முடித்தாள்.

அடுத்து வந்த பத்து நாட்களில் சரவணனின் ஸ்டூடி யோவில் பிஸியாகத்தான் நடமாடினாள் நிர்மலா. வெறும் மாடலிங் செய்வதோடு நிறுத்தாமல் டிசைனிங், பிளானிங் என ஒவ்வொரு பிரிவுகளிலும் தன்னை ஈடு படுத்திக் கொண்டு அவனுக்கு பெரிதும் உதவினாள். அலுவலகமே கதி என்பது போல் மணிக்கணக்கில் கிடந்தாள். வேலை பார்த்தாள்.

சரவணனின் அருகாமையில் அவனது அன்பான நகைச் சுவை பேச்சுகளுடன் தினம் தினம் வேலை பார்ப்பதே அவளுக்கு பெரும் உற்சாகமாக இருந்தது.

அலுவலகம் முடிந்து வீட்டுக்குச் சென்றாலும் சரவண னின் நினைப்பே தொடர்ந்து தன்னுள் ஓடுவதை... உணர்ந்தவள் உள்ளூர திடுக்கிடவும் செய்தாள்.

மேலும் ஒரு இனம் புரியாத மனநிலையில் அவள் தொடர்ந்து கொண்டிருந்த போது தான், ஒரு நாள் சர வணன் இல்லாத சமயத்தில், அவள் சற்றும் எதிர்பாராத தருணத்தில் ஸ்டூடியோவிற்கே அவளைத் தேடிக் கொண்டு வந்து நின்றான் அவன்.

அவன் இன்பசாகரன்!

# 15

அவள் கண்கள் பொய்க்கவில்லை.

அங்கு நின்று கொண்டிருந்தது சாட்சாத் இன்பசாகரனே தான்!

மூன்று மாதங்களுக்கு முன்பு இருந்தது போல் அந்த பந்தா, மிடுக்கு இல்லை. களையிழந்து, பொலிவிழந்து, அவள் பக்கத்தில் போன போது அவன் அவளைக் கேலி செய்த 'கன்னத்து டொக்கு' கூட அவனுக்கு விழுந்திருந்தது.

இன்பசாகரனா இப்படி?

அவள் நம்ப முடியாமல் உறுத்துப் பார்க்க தலையைக் குனிந்தான் அவன்.

கொஞ்ச நிமிடங்கள் அவள் பேசாமலே இருந்தாள். வேறென்ன? உதறிப் போட்டவன் அவன் தானே? அவனாக பேசட்டும் என்ற ஆத்திரம் தான்!

''உன் இன்பா... வந்திருக்கேன் நிம்மி...'' முத்து உதிர்த்தான் அவன்.

''வாருங்கள் துன்பா...'' என்றாள் அவள் வேண்டுமென. அந்த 'துன்பா...' உச்சரிப்பில் அழுத்தம் கொடுத்தவாறு.



அவள் அனுபவித்த வருத்தங்கள், வேதனைகள் அப்படியாவது புரியட்டும் அவனுக்கு! என்ற நினைப் போடு!

''அந்த... அந்த... நளினி... என்னை ஏமாற்றி விட்டாள்... மோசம் போய் விட்டேன்...'' என்றான்.

அப்படியாவது... நான் தவறு.... செய்துவிட்டேன்... மன்னித்து விடு... என்றெல்லாம் பிதற்றி வருந்துவான் என எதிர்பார்த்தவளுக்கு அந்த நினைப்பும் பொய்யாயிற்று.

''நளினி ஏமாற்றி விட்டாள் என்று சொல்லுகிறீர்களே... நீங்கள் செய்தது மட்டும் என்னவாம்?'' எழுந்த கோபத்தில் வெடுக்கெனவே கேட்டாள்.

''அது... அது...'' குற்றவாளி போல் கைகளைக் கட்டிக் கொண்டு முதன் முறையாய் தடுமாறினான் இன்பசாகரன்.

''கையைக் கழுவுவது போல் என்னை ஒரேடியாய் தலைமுழுகிவிட்டு இப்போது எந்த முகத்தை வைத்துக் கொண்டு என்னைப் பார்க்க வந்திருக்கிறீர்கள்?''

அவன் பதில் சொல்லாமல் ஒரு கணம் விழித்தான்.

''பின் உனக்கு நடந்தது தெரியாது...'' என்றான்.

''என்ன நடந்தது?''

தெரிந்து கொள்ளும் ஆவலில் அவளும் கேட்டாள்.

''அந்த சனியன் நளினி என்னை நன்றாக ஏமாற்றி விட்டாள். 'என்னை கட்டிக் கொள். என்னை பெரிய மாடலாக்கு... நாம் இருவரும் சேர்ந்து ஒரு கோடி ரூபாய்

செலவில் பெரிய மாடலிங் ஸ்டுடியோ கட்டுவோம். பணம் தருகிறேன்...' என்றெல்லாம் ஆசை வார்த்தைகள் காட்டினாள். நானும் நம்பினேன். அவள் வார்த்தைகளுக்கு மயங்கி உன்னை சமயம் பார்த்து உனக்கு காய்ச்சல் வந்ததும் கழற்றியும் விட்டேன். அதற்கு... அதற்கு.... என்னை... மன்னித்து விடு...''

இழுத்து மூச்சு விட்டபடி அவன் நிறுத்த அவள் கொதித்து தான் போனாள்.

பாவி, அவள் சந்தேகப்பட்டது போல் தான் இவன் செய்திருக்கிறான்? சமயம் பார்த்திருக்கிறான்... காய்ச்சல் வந்ததும் உதறி விட்டிருக்கிறான். அதை... கூசாமல் அவளிடமே வாய் விட்டுச் சொல்கிறானே? என்ன ஒரு தைரியம்!

அவள் கொதிப்பு புரியாமல் இன்பசாகரன் தொடர்ந்தான். ''அந்த நளினிச் சனியனை மாடலாய் போட்டு மூன்று நான்கு விளம்பரங்கள் செய்தேன். எல்லாமே வேஸ்ட். சரியில்லை. பொருத்தமில்லை... என கம்பெனி வாடிக்கையாளர்கள் சொல்லி விட்டனர். சரி மாடலாய் இல்லாவிட்டாலும் பணக்காரியாய் இருக்கிறாள் கட்டிக் கொள்ளலாம் என்று பார்த்தால் அந்த நளினிக் குரங்கு அதற்குள், கிளை தாவி விட்டாள்...''

வாயை கோணலாய் வழித்துக் காட்டியபடி எரிச்சலுடன் நெட்டி முறித்தான் அவன்.

''என்ன கிளை தாவி விட்டாளா?''

''ம்ம்...'' என சோகமாக்கி முகத்தைக் கொண்டு போனவன், ''இன்பா, இந்த நான்கு மாதத்தில் அவளுக்கு



'பிரகாஷ்' என இன்னொரு சண்டாளனுடன் பழக்கம் ஏற்பட்டது. அந்த பிரகாஷ் பெரிய கோடீஸ்வரன். மாலினியை விட பணக்காரன். அதனாலே அவனது சினேகிதம் கிடைத்ததும் என்னைக் கழற்றி விட்டு அவன் பின்னால் போய் விட்டாள். சரியான சண்டாளி...''

மறுபடியும் முகத்தை அஷ்டகோணலாக்கி ஏசியபடி பற்களைக் கடித்தான் இன்பசாகரன்.

இம்முறை அவன் கோபத்தைப் பார்த்து நிர்மலாவால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. அதைப் பார்த்து நிமிர்ந்து திகைத்தான் அவன்.

''எதற்கு சிரிக்கிறாய் நீ?''

''நளினி உங்களுக்கு என்ன செய்தாலோ அதைத் தானே நீங்கள் எனக்குச் செய்தீர்கள். மறந்து விட்டீர்களா?

''அது... அது...'' என தடுமாறிய இன்பசாகரன்,'' அப்படியில்லை நிம்மி...'' என்றான் அழுத்தமாக.

''பின் எப்படியாம்? உங்கள் திருவாயால் நீங்களே சொல்லுங்கள்...!'' கேலி பொங்கத்தான் கேட்டாள் அவள்.

ஆனால் இன்பசாகரனோ அதை உணராமல் சீரியஸாகப் பேசினான்.

''நிம்மி, நான் துரதிர்ஷ்டவசமாக சூழ்நிலைக்காக உன்னை உதறினாலும் நீ எப்போதும் என் இதயத்தில் நெஞ்சத்தில் இருக்கிறாய். எவ்வளவு நாள், எத்தனை

வருடங்கள் பழகியவர்கள் நாம்? இந்தச் சின்ன ஊடலா நம்மை பிரித்து விடப் போகிறது. அதனால்... அதனால் நான் சொல்கிறபடி... செய்...'' என ஆணையிடுவது போல் சொல்ல வந்தவன் சட்டென குரலை மாற்றி, ''என்ன செய்கிறாயா நிம்மி...?'' என முடித்தான்.

''என்ன... அது? அதையும் சொல்லி விடுங்கள்!'' அசால்ட்டாய்த்தான் கேட்டாள் அவள்.

இன்பசாகரனோ மறுபடியும் முகத்தை கோணலாக்கி கொண்டு, ''நிம்மி இப்போது ஜோடி சேர்ந்திருக்கிறாயே... அந்த சரவணன்... அவன் வெறும் ஈயோட்டிப் பயல்..! மாடலிங் பற்றி ஒன்றும் தெரியாதவன்... ராசியில்லாதவன்...! அழகி போன்ற... உன்னுடனான சினேகிதம் கிடைத்ததும் உன்னை வைத்து காசு பண்ணலாம் என கணக்கு போட்டு பெரிய திட்டம் திட்டியிருக்கிறான். அதனால் அவனை நீ நம்பாதே. அப்படியே அவனை கழற்றி விட்டு என்னுடன் வா...! மீண்டும் நாம் இணைந்து... மாடலிங் துறையை கலக்குவோம்... என்ன...?'' என்றபடி இன்பசாகரன் அத்தோடு நிறுத்தாமல் இன்னுமொரு காரியத்தையும் செய்தான்.

அதுவரை நின்று கொண்டிருந்தவன் டபக்கென அவள் நின்ற திசையை நோக்கி சாஷ்டாங்கமாய் காலில் விழுந்து விட்டான்.

''என்னை மன்னித்து ஏற்றுக் கொள் நிம்மி...'' என கெஞ்சல் குரலில் அவன் கதறவும் அங்கு உள்ளே சரவணன் நுழையவும் சரியாயிருந்தது.



# 16

இன்பசாகரனின் செய்கையைக் கண்டு நிர்மலாவே அதிர்ந்து விட்டாள் தான் என்று சொல்ல வேண்டும்.

''காரியம் ஆக வேண்டுமானால்... காலைக் கூட பிடிக்கத் தயங்க மாட்டார்களாமே...'' என அவள் கேள்விப்பட்ட அயோக்கியர்களின் வரிசையில் இந்த இன்பசாகரனும் சேர்ந்து விட்டானே!

பாவி... அவளிடம் ஒரு வார்த்தை கூட சிரித்து இன்முகமாய் பேசாதவன், அவனையே நம்பிய அவளுக்கு மிகப் பெரிய துரோகத்தை பண்ணியவன் என்னமாய் நடிக்கிறான்?

இவனை நம்புவதாவது?

இவனை நாயை விரட்டுவது போல் அல்லவா விரட்ட வேண்டும்? உள்ளுக்குள் நினைத்தாலும் அதை எப்படி வெளிக்காட்ட என அவள் யோசித்துக் கொண்டிருக்க... டக்கென எழுந்த இன்பசாகரன் கெஞ்சலாய் அவள் கைகளை வேறு பிடித்துக் கொண்டான்.

''உன்... இன்பா... நீ ஆசைப்பட்ட இன்பா வந்திருக்கிறேன்... மறுத்து விடாதே... நிம்மி...! ப்ளீஸ்... என்னுடன் வந்து விடு...! மறுபடியும் நாம் இணைவோம்...

மாடலிங்கில் ஒரு பெரிய சகாப்தத்தை உண்டு பண்ணு வோம்...!''

கோபத்தில் வெடித்து வெளிவரத் துடித்த வார்த்தை களை சரவணன் தங்கள் இருவரையும் கதவருகே சாய்ந்த படி பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்து அடக்கிக் கொண்டாள், நிர்மலா.

தன் கைகளைப் பற்றியிருந்த அவன் கரங்களிலிருந்து மெல்ல விடுவித்துக் கொண்டு, ''நான் யோசித்துச் சொல்கிறேன். நீங்கள் கிளம்பலாம்.... இன்பா...'' என்றாள் எவ்வித உணர்ச்சியுமில்லாத குரலில்.

அப்போது தான் திரும்பி... சரவணன் வந்ததையும் அவன் நின்று கொண்டிருப்பதையும் உணர்ந்த இன்ப சாகரன் நிர்மலா அவன் சரவணன் முன்னால் சொல்லத் தயங்குகிறாள் என நினைத்துக் கொண்டு, ''ஓ.கே... புரிகிறது...! நிம்மி. டேக்யுவர் ஒன்டைம்...!'' என்றபடி கிளம்ப ஆரம்பித்தான்.

அவன் இன்பசாகரன் டக்கென அங்கிருந்து அகன்ற தும் நிர்மலாவும், சரவணனும் எதிர் எதிரே! அங்கு ஒரு பெரிய மௌனம் தான் நிலவியது.

நிர்மலாவுக்கு சட்டென என்ன பேசுவதென்றே தெரியவில்லை. 'சினிமா நடிகருக்கு இணையாய் காலில் விழுந்து கெஞ்சி இன்பசாகரன் அடித்த கூத்தைப் பார்த்தால் இந்த சரவணன் என்ன நினைப்பான்? அவ னுக்கு உண்மை புரியுமா?' என்ற நினைப்பே திகைப்பாய் ஓடியது.

அதனால் அவளுக்குப் பதில் சரவணனே வாயைத் திறந்தான்.



''என்னாலும் இதை நம்ப முடியவில்லை. ஆனால் ஆனால்... இன்பசாகரன் இவ்வளவு திருந்தி விட்டாரே...'' என்று தான் ஆரம்பித்தான்.

அதுவே நிர்மலாவுக்கு தூக்கி வாரிப் போடும் அதிர்ச் சியை உண்டு பண்ணியது.

அட... இந்த இன்பசாகரனின் நடிப்பை அப்படியே நம்பி விட்டானே சரவணன்? என வியப்பானாள்!

சரவணனோ தொடர்ந்து, ''இன்பசாகரன் நிஜமாகவே மாடலிங் துறையில் ஒரு திறமைசாலி... என்ன பணக்காரியான நளினி வந்ததும் கொஞ்சம் அவசரப் பட்டு விட்டார்.

அதனால்... அன்று உங்களை தூக்கி எறிந்ததற்கு நிஜமாகவே மனம் வருந்தி விட்டார். அவர் எவ்வளவு தூரம் தன் தவறை உணர்ந்து வருந்துகிறார் என்பது அவர் காலில் விழுவதில் இருந்தே புரிகிறது. அப்படிப்பட்ட வரை மன்னித்து ஏற்றுக்கொள்வது...'' சரவணன் இன்ப சாகரனைப் பற்றி புகழாரமாய் சொல்லிக் கொண்டு போக அவளுக்கு எரிச்சல் தான் அதிகமாகியது.

''மிஸ்டர் சரவணன், முதலில் உங்கள் பேச்சை நிறுத்து கிறீர்களா?'' என்றாள் நிர்மலா அதற்கு மேல் பொறுக்க முடியாதவளாய். நிறுத்தினான் சரவணன்!

''இப்படி என் பக்கம் வருகிறீர்களா?''

வந்தான்.

''என் முகத்தை கொஞ்சம் உற்றுப் பாருங்கள்...!''

பார்த்தான்.

''என்ன நிர்மலா?''

''நன்றாக உற்றுப் பாருங்கள். என் முகத்தைப் பார்த்தால் இன்னும் என்னை ஏமாற்றிவிட்டுப் போன அந்த இன்பசாகரனை நினைத்து ஏங்கும் முட்டாளாக... ஒரு இளிச்சவாய்த்தனமான குமுட்டையாகவா தெரிகிறது...? பதில் சொல்லுங்கள்...!'' என்றாள்.

அவள் கேட்க அவன் நம்ப முடியாமல் அதிர்ந்தான்.

''என்ன சொல்கிறாய் நிம்மி?''

சட்டென அவன் அழைத்த விதத்தில் குளிர்ந்தவள், ''என்ன... சொன்னீர்கள்? என்ன சொன்னீர்கள்?'' என்றாள் காதில் விழாதது போல்.

சரவணன் தடுமாறினான்.

''அது... அது... நிம்மி... ஸாரி... நிர்மலா...'' என சரவணன் திருத்தப் போனான்.

''நிம்மி என்றே கூப்பிடுங்கள். அதுதான் பிடித்திருக்கிறது...'' என்றாள். கூடவே, ''இப்போதாவது புரிந்ததா மிஸ்டர் சரவணன்? அந்த இன்பசாகரன் என்று என்னை தூக்கி எறிந்தாரோ... அன்றே நானும் அவரை மனதில் இருந்து எறிந்து விட்டேன். இப்போது என் மனதில் அழகான வேறொருவர் தான் இடம் பிடித்திருக்கிறார் என்ன... அவர் கொஞ்சம் கல்லூளி மங்கன். உணர்வுகள் எதையும் வெளிப்படுத்தாது... அடக்கி வைத்துக் கொண்டு... இடித்த புளி போல் அசையாமல்... நின்று கொண்டு... இதோ என் முன் நிற்பார்... நிற்கிறார்... போதுமா..?'' என்று சொல்லியபடி நிர்மலா சிரிக்க ஆரம்பித்தாள்.



''ஹேய்... ஹேய்... நீ... நீ... யாரைச் சொல்கிறாய்? யாரைச் சொல்கிறாய்...?'' என்றபடி இன்பமாய் திடுக்கிட்டு சரவணன் அவளைப் பார்க்க,

''இன்னுமா புரியவில்லை?'' என்றபடி நிர்மலா அவன் மார்பினில் சாய்ந்தாள். கரங்களை மாலையாய் அவன் கழுத்தில் கோர்த்து தொங்கத்தான் செய்தாள்.

அவள் தான் அவன் மேல் விழுந்து குமைந்தாள்.

சரவணன் எந்த உணர்வும் இல்லாத சிலை போல் தான் நின்று கொண்டிருந்தான்.

திடுக்கிட்டு அவனைப் பிடித்தாள்.

''ஹேய்... மிஸ்டர்...!'' என நிஜமாகவே அவனை உலுக்க,

''அதிர்ச்சி! இன்ப அதிர்ச்சி!'' என்றபடி அவளைத் தன்னோடு சேர்த்து வேகமாய் அணைத்தான் அவன்.

பின் அவளை சட்டென விடுவித்து. ''நம்ப முடியவில்லை...'' என்றான்.

''எதை நம்பமுடியவில்லை...''

அவளும் ஆவலாகவே கேட்டாள்.

''அதான்... நிம்மி...'' எனத் தொடங்கி நிறுத்தியவன், ''போதுமா? நிம்மி என அழைத்து விட்டேன்...'' என சிரிப்புடன் தொடர்ந்து, ''நீ ஒரேடியாய் அந்த இன்பாவை தலைமுழுகி விடுவாய்.... என்பதை நான் எதிர்பார்க்கவில்லை. இன்பா பைத்தியம் பிடித்தது போல் அல்லவா இருந்தாய்?'' என்றான் குறும்பைத் தொடர்ந்தவாறு.

அவளும் சட்டென சிரித்து. ''இன்பா பைத்தியம்...! நல்ல வார்த்தைகள் தான்! ஆனால் அதிலே காரணமும் பதிலும் இருக்கிறதே...'' என்றாள் விடாமல்.

''புரியவில்லையே...'' என அவன் நெற்றியைச் சுருக்க அவள் விளக்கினாள்.

''ம்ம்... பைத்தியம் போல் ஒன்று பிடித்திருந்ததனால் தான் அந்த 'இன்பாவை' விரும்பியிருக்கிறேன். இப்போது பைத்தியம் தெளிந்து உண்மை நிலை புரிந்து விட்டதால் அவரை தூக்கியெறிந்து விட்டேன். நிஜமான இன்பமானவரை கண்டு கொண்டேன்...''

அவள் முடித்ததும் தெரியாதது போல், ''யாரது?'' என்றான்.

அதற்கும் அவள் நேரிடையாய் பதில் சொல்லாமல் கண்ணசைப்பு செய்து, ''அது ரகசியம்...'' என்றாள்.

அவன் சரவணன் தலையை சிலுப்பிக் கொண்டே, ''ஆனாலும் உன்னிடம் நிறைய ரகசியங்கள் கேட்க வேண்டிருக்கிறது. நிம்மிக் கண்மணி...'' என்றான்.

''கேளுங்கள் ராஜாவே...'' என்றாள் அவள் பதிலுக்கு.

''அதாவது கண்மணி உனக்கு நிஜமாக என் மீது எப்போது ஈடுபாடு, விருப்பம், ஆசை... அது... அது...'' என்றபடி அவன் சொல்லத் தயங்க, ''அட... காதல் என்று சொல்லி விட்டுப் போங்களேன். எதற்கு சுற்றி வளைத்து...?'' என முத்துப்பல் சிரிப்போடு கேட்டவள் விளக்கவும் செய்தாள்.



''முதன் முதலில் உங்களது போன்... ரெஸ்ட்டா ரண்டில் உங்களுடன் சாப்பிட்டது.

உங்களது பேச்சு... பழகும் தன்மை எல்லாம் என்னை வெகுவாய் கவர்ந்து விட்டது தான். ஆனால் என்ன... அப்போது குதிரைக்கு லாடை அடித்தது போல் இன்பா திசையிலேயே நான் அலைந்து கொண்டிருந்ததால்.... வேறு எந்தவொரு எண்ணமும் தீவிரமாய் என்னுள் எழ வில்லை. ஆனால்... எப்போது இன்பசாகரன் என்னைத் தூக்கியெறிந்து நான் உடல் நோயுற்று ரொம்பவும் தவித்தேனோ அப்போது நீங்கள் காட்டிய ஆதரவு அந்த அன்பான ஸ்னேகம் எல்லாம் என்னுள் பெரும் மாற் றத்தை ஏற்படுத்தி உங்களை விரும்ப வைத்து விட் டது...''

''பின் என்ன... வெளிப்படையாய் சொல்லி விட வேண்டியது தானே?''

அவன் கேட்டதற்கு வில்லான புருவங்களை உயர்த்தி மைவிழிகளில் படபடப்பு காட்டினாள் அவள்.

''எப்படி முடியும் அது? நீங்கள் தான் வார்த்தைக்கு வார்த்தை... இன்பா... உன்னைத் தேடி வருவார்... நீங்கள் இருவரும் மீண்டும் இணையப் போகிறீர்கள்... எப்படி யும் அதை நான் நடக்க வைப்பேன்... என அதை உங் களது பெரிய லட்சியம் போல் சொல்லிக் கொண்டு முயற்சிகளை எடுத்துக் கொண்டு... இருந்தீர்கள்... அதனாலே... நீங்களும் மனதுள் என்ன நினைக்கிறீர் களோ... என் மீது உங்களுக்கு எவ்வித ஈர்ப்பும் ஏற்பட வில்லையோ... என்ற சந்தேகமும் குழப்பமாய் உண்

டாயிற்று...'' அவள் சொல்லி முடிக்க சரவணன் கடகட வென சிரித்தான்.

''ஐயோ! என்ன சிரிக்கிறீர்கள்? நான் சொன்னதை நீங்கள் நம்பவில்லையா?'' என்றாள் பதற்றத்துடன்.

அவளின் பதற்றத்தை தணிக்கும் விதமாய் மேலும் அணைத்துப் பிடித்தவன், ''நான் நம்புகிறேன் கண்மணி. ஆனால் நான் அப்படி அடிக்கடி சொன்னதற்கான காரணம் இன்னும் நீ இன்பசாகரனை நினைக்கிறாயா... இல்லையா? என்பதைத் தெரிந்து கொள்ளத்தான். ஆனால் நீயும் என்னைப் போல் இந்த விஷயத்தில் ஒன்றும் பேசாமல் கல்லூளி மங்கினியாகத்தானே இருந்து விட் டாய் தானே?'' எனவும் ஆமோதிப்பது போல் அவள் தலை யசைக்கவே செய்தாள்.

பின் அவள் தன் அழகான தலையை திருப்பி நேராய் பார்த்தாள். ''இப்போது உங்கள் முறை சொல்லுங்கள்!'' என்றாள்.

''எதைச் சொல்ல கண்மணி?''

''அதான்... என் மீதான பொல்லாத காதல் அது உங் களுக்கு எப்போது வந்தது?'' என்றாள் ஆவலாய்.

பதிலுக்கு, சரவணன் குறும்பாய் கண் சிமிட்டியவன், ''சொல்கிறேன். உன்னை முதன் முதலாய் அந்த ஷாம்பூ விளம்பரம் ஒன்றில் மாடலாய் பார்த்ததுமே மனதில் ஒரு இனம்புரியா படபடப்பு தோன்றி விட்டது. உன்னை சந்திக்க வேண்டும்... பேச வேண்டும் என்ற பதட்டமான ஆசையும் அத்தோடு தொற்றிக் கொள்ள... உடனே



போன் செய்தேன் உன்னை சந்திக்க முயற்சி செய்து ரெஸ்ட்டாரண்டில் பிடித்தேன். ஆனால் உன்னைப் பார்த்துப் பேசிய அந்தக் கணமே உள்ளுக்குள் நான்... 'தொபுக்கடீர்...' தான்... தெரியுமா?'' என்றான்.

''அது... என்ன தொபுக்கடீர்?'' அவள் கண்கள் மறுபடி விரிந்தது.

''வேறு... என்ன...? மன்மதனின் காதல் கடலில் அப்படியே விழுந்து மூழ்கியே போய் விட்டேன். உனது முதல் பார்வை அந்த அபாரவீச்சு என்னை அந்தப்பாடு படுத்தி விட்டது...''

''அப்படியா...?'' உள்ளுக்குள் ரஸித்தாலும் நம்ப முடியாதவள் போல்தான் கேட்டாள் அவள்.

''அதில் என்ன சந்தேகம் கண்மணி? ஆனால் என்ன... நீ இன்பா பைத்தியமாய் இருந்ததால் எனது உணர்வு களை உள்ளுக்குள்ளே பூட்டி வைத்துக் கொண்டு நடமாடினேன். ஒரு நல்ல நண்பனாய் நீ விரும்பிய வாழ்க்கையையே உனக்கு அமைத்துக் கொடுக்க விரும்பினேன். ஆனால்... ஆனால்... இன்பமான உனது மனமாற்றம்... எல்லாவற்றையும் எனக்கு புரிய வைத்து விட்டது. உடனடியாக உன்னை விரும்ப ஆரம்பித்து விட்டேன்...''

அவன் பேசி முடித்து விட்டு இறுக்கமாய் ஒரு அணைப்பு செய்து தன் அன்பு முழுவதையும் அவனுக் குக் காட்டினான்.

அவள் நிர்மலாவும் நெகிழ்ந்தவளாய் அவன் கழுத்தை மாலையாய் சுற்றியிருந்த தனது மலர்க் கரங்களால்

இருக்கினாள். ''நானும் உங்களை எப்போதோ விரும்பத் தொடங்கி விட்டேன். என் காதலை ஏற்றுக் கொள்ளுங் கள் மகாராஜா...!'' என குறுஞ்சிரிப்பு பொங்க அவன் நெஞ்சினில் பொதிந்தாள்.

அவன் சரவணனும், தன் மீது அப்படிச் சாய்ந்தவளை அணைத்துப் பிடித்துக் கொண்டு, ''மகாராணியாரின் வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் ஒரு நிபந்தனையுடன்...'' என்றபடி அவள் இதழ்களை நோக்கி குனிந்தான்.

அவன் நோக்கம் புரிந்தவளாய் குங்குமமாய் சிவக்க ஆரம்பித்தாள் அவள்!



# பூவினும் மெல்லிய பூங்கொடி

## 1



அடுத்து என்ன செய்ய? என இருவரும் யோசிக் கையில் சின்னக்கா எழுந்து போய் சமையலறையில் உள்ள சின்ன புளி டப்பாவை உருட்டினாள். அவள் எப் போதும் அதில் தனக்கு கிடைக்கும் காசுகளை மிச்சம் பிடித்து சேமித்து வைப்பது வழக்கம்.

அதை கீழே கொட்டி சில்லரைகளை எண்ணினாள். பின் பிரகாசமாய் நிமிர்ந்து, ''ஒரு கிலோ ரவை வாங்கி விடலாம்!'' என்றாள்.

''ஹப்பா... பிழைத்தோம்! இன்று உப்புமாவைக் கிளறி எப்படியும் வயிற்றை நிரப்பி விடலாம்!'' குட்டித் தங்கை சசிரேகா மகிழ்ச்சி பொங்க கத்திய போது, 'பாவம் அவளும் இவ்வளவு நேரம் வயிற்றுப் பசியை அடக்கிக் கொண்டிருந்தாள்' என்பது எல்லோருக்கும் புரிந்தது.

வாணி முன் வந்து அவள் தலையை வருடினாள். அவள் சொல்வது உண்மை தான்! அவள் வாய் திறந்து சொல்லி விட்டாள். மற்றவர்களால் சொல்ல முடிய வில்லை. பின் காலையில் இருந்து எதுவும் சாப்பிடாமல் இருந்து கொண்டு எவ்வளவு நேரம் தான் மண்பானைத் தண்ணீரை மோண்டு குடித்துக் கொண்டிருப்பது?

சே! நம் நிலைமை அவ்வளவு கேவலமாய் உண்ப தற்கே உணவில்லாத அளவுக்கு போய் விட்டதா? கொலைப் பட்டினி என்று சொல்வார்களே... அது இதுதானோ?

என்ன ஆனாலும் சரி... எந்தச் செலவு வந்தாலும் சரி... இனி மாதக்கடைசியில் கையிருப்பு பணம் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். சேமித்து வைத்து விட வேண்டும். மேலும் நாளை சம்பளம் வாங்கியதும் முதல் வேலையாய் ரேஷனில் இருபது கிலோ அரிசியை வாங்கிப் போட்டு விட வேண்டும். வறுமை இருக்க லாம். ஆனால் இந்தப் பசி பட்டினி என்ற வார்த்தைகள் இந்த வீட்டில் அறவே இருக்கக் கூடாது.

வாணி முடிவெடுத்தவள் போல் நிமிர்ந்து கொண் டாள். சசிரேகா லட்சுமி அக்காவிடம் காசுகளை வாங்கிக் கொண்டு போய் பக்கத்து பெட்டிக் கடையில் ரவை வாங்கினாள்.



அரை மணி நேரத்தில் பெரியக்காவின் கை வண் ணத்தில் சுடச்சுட மணத்துடன் உப்புமா ரெடியா யிருந்தது.

அம்மா வரிசையாய் உட்கார வைத்து பரிமாறினாள்.

கொண்டிருந்த பசியினால் எல்லோரும் ஒரு பிடி பிடித்தனர் என்று சொல்ல வேண்டும். ஆனால் வாணி தான் அரை வயிற்றோடு போதும் என நிறுத்திக் கொண் டாள்.

அதற்கு மேல் அவள் விரும்பினாலும் உணவு இறங்க மறுத்தது. வீட்டின் கஷ்டத்தை நன்கு உணர்ந்தவள் அவள். ஆனால் இன்று இப்படி எல்லோரும் பட்டினி கிடக்குமளவுக்கு விட்டு விட்டாளே?

வீட்டில் சம்பாதிக்கிற, சம்பாதிக்க முடிகிற ஒரே பெண் அவள் தான். மற்றவர்களுக்கெல்லாம் போதிய படிப் பில்லை. பாதியோடு நிறுத்தியவர்கள். அவள் ஒருத்தி குடும்ப கஷ்ட சூழ்நிலையிலும் தக்கி முக்கி டிகிரி முடித்து பி.எட்டும் படித்து விட்டாள்.

பி.எட்.முடித்ததும் அவள் நினைத்தது போல் அரசாங்க வேலை கிடைக்காமல் தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளி வேலையே கிடைத்தது. சம்பளம் மூவாயிரம் மட்டுமே.

அந்த மூவாயிரத்தில் வீட்டு வாடகை எழுநூறு போக மிச்ச பணத்தில் அந்த குடும்பத்தின் ஐந்து ஜீவன்களும் பிழைத்தாக வேண்டும். வேறு வரும்படி எதுவும் கிடையாது.

மூன்று வருடங்களுக்கு முன்பு தந்தை திடீரென மறைந்த போது மொத்த குடும்பமும் ஸ்தம்பிக்கத்தான்

செய்தது. தந்தைக்கு காய்கறி மார்க்கெட்டில் நவதானிய புரோக்கர் உத்யோகம்.

சொல்லிக் கொள்ளும்படி வருமானம் இல்லா விட்டாலும் இரண்டு நாளுக்கு ஒரு முறை அடித்துப் பிடித்தாவது குடும்பம் நடத்த பணம் எதாவது கொண்டு வந்து விடுவார்.

மனைவியும் மகளும் சுவரோரமாய் சாய்ந்தபடி பானைக் கஞ்சியை குடிப்பதைப் பார்த்து அவருக்கு கண்கலங்கும். நான்கு பெண் பிள்ளைகளை பெற்றால் அரசனும் ஆண்டியாகிவிடுவான். நான் எந்த மூலைக்கு? என மருகுவார்.

அவளுக்கு அவர் பேச்சைக் கேட்டு வாணி ஒருத்தி தான் நன்கு படித்ததினாலோ என்னவோ அவளைத்தான் அவருக்கு ரொம்பவும் பிடிக்கும். வாணியை கூப்பிட்டு பக்கத்தில் உட்கார வைத்து அவள் தலையை வாஞ்சை யாய் வருடி, ''கண்ணு, நீ ஒருத்தி தான் சமர்த்து, நன்கு படித்தவள். நீ தான் எனக்குப் பின் மொத்த குடும் பத்தையும் காப்பாற்ற வேண்டும். செய்வாயா?'' என் பார்.

வாணிக்கு அப்போது அவர் சொல்வது ஒன்றும் புரியாது. மலங்க மலங்கத்தான் விழிப்பாள். ஆனால் டிகிரி முடித்த பி.எட். படிப்பு சேர்ந்த முதல் மாதத்தி லேயே ஒரு நாள் இரவு நெஞ்சைப் பிடித்தபடி தந்தை மறைந்த போது தந்தை சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் புரிந்தது.

உடனே படிப்பை நிறுத்தி விட்டு... டிகிரி படிப்பை வைத்துக் கொண்டு கிடைக்கிற வேலைக்குப் போய் விடலாம் என்று தான் எண்ணினாள்.



ஆனால் தாய் கற்பகம்தான் பிடிவாதமாய் ''நீ பி.எட் படிப்பை முடி. நல்ல வேலை கிடைக்கும். வீட்டுச் செலவிற்கு பேங்கில் கொஞ்சம் பணம் இருக்கிறது. நானும் எதாவது வேலைக்குப் போகிறேன்...'' என பக்கத்து பீடிக் கம்பெனியில் தினக்கூலி வேலைக்கு உடனே கிளம்பி விட்டாள்.

அம்மாவுக்கு நொடிசலான தேகம். அதற்கேற்றார் போல் காச நோய், தலை சுற்று, முதுகுப் பிடிப்பு என அவ்வப்போது எதாவது வந்து பாடாய் படுத்தும். கயிற்றுக் கட்டிலிலேயே கிடக்கும்படி முடங்கி வைக்கும்.

ஆனால் எல்லாவற்றையும் சமாளித்து அம்மா வேலைக்குப் போனாள். ஒரு வருடம் தாக்குப் பிடித்து வாணியை படிக்க வைத்தாள்.

வாணியும் படிப்பில் கவனம் செலுத்தி கல்லூரியின் முதல் மாணவியாய் முதல் இடத்திலேயே தேர்ச்சி பெற் றாள். கை நிறைய மார்க் வைத்திருந்தும் அவள் தேடிய வேலை கிடைக்கவில்லை. வந்த மூவாயிர... ரூபா சம்பள வேலையை ஏற்றுக் கொண்டாள்.

முதல் காரியமாய் அம்மாவை கூலி வேலைக்குப் போவதை நிறுத்தி வீட்டில் உட்கார வைத்தாள். பெரியக் காவையும் சின்னக்காவையும் அவர்கள் ஆசைப்பட்ட படி தையல் பயிற்சி வகுப்பில் சேர்த்து விட்டாள். குட்டித் தங்கை சசிரேகா ''எனக்கு எதற்கு படிப்பு? நானும் ஏதாவது வேலைக்குப் போகிறேனே?'' என்றவளை கடிந்து நல்வழிப் படுத்தி பள்ளிக்கு அனுப்பி வைத் தாள்.

ஒருவாறு ஓரளவு பாரம் நீங்கியது போல் மொத்த குடும்பமும் மூச்சு விட்டது. ஆனால் என்ன...? நாளுக்கு நாள் எகிறிக் கொண்டு போகும் விலைவாசியில் அந்த மூவாயிர ரூபாய் வருமானமும் தட்டுப் பாடாகி, மாதக் கடைசியில் செலவுக்கு பணமில்லாத வகையில் அவர்களை திண்டாட வைத்தது.

இப்போதும் அப்படியொரு திண்டாட்ட சூழ்நிலை தான் உருவாகி... அன்று முழுவதும் பட்டினி கிடக்கு மளவுக்கு அபாயத்தை ஏற்படுத்தியிருந்தது.

வாணி தனது சம்பளத்தின் ஒவ்வொரு நயா பைசா வையும் கணக்குப் பார்த்து செலவழிக்கிறவள் தான். அனாவசியமாய் செலவு என்பதே அவளது அகராதியில் கிடையாது.

ஆனாலும் திடீரென ஏற்படும் அம்மாவின் உடல் நலக் குறைவுக்கான மருத்துவச் செலவு, தங்கை சசி ரேகாவின் நாலு முறை கிழிந்து விட்ட ஸ்கூல் யூனி பார்மிற்கு இம்முறை புதிய துணி மணி வாங்க வேண்டிய கட்டாயம் என எல்லாமே குடும்ப பட்ஜெட்டை மீறி ஐநூறு ரூபாய்க்கு செலவு வைத்து விட... மாதக் கடைசி யான இருபத்தியெட்டாம் தேதி வீட்டின் மொத்த கஜானாவும் காலி. கையில் நயா பைசா கிடையாது.

அன்று ஞாயிற்றுக் கிழமை வேறு ஆனதால் வாணி யும் வீட்டில்தான் இருந்தாள். வேலைக்குச் சென் றிருந்தால் கூட இரண்டொரு நாளில் சம்பளம் வாங் கியதும் தருகிறேன்... என யாரிடமாவது 'கைமாத்து' வாங்கலாம்.



இப்போது அதற்கும் வழியில்லை. சரி... ஒரு நாள் விரதம் போல் பட்டினி கிடப்போம் என மொத்த குடும் பமும் முடிவு செய்தது. பானைத் தண்ணீரை மோண்டு குடித்து வயிற்றை நிரப்பிக் கொண்டது... கடைசியில் லட்சுமி அக்காவின் சின்ன புளி டப்பா சேமிப்பில் இருந்து பணம் கிடைத்து விட உப்புமாவும் தயாராகி... எல் லோரும் நிம்மதியாய் சாப்பிட்டனர்.

இதோ இன்று இப்படி நடந்ததை நினைத்து, எல்லா வற்றுக்கும் தான் தானே காரணம் என வாணி வெட்கி நிலைப்படி அருகே கையூன்றியபடி தெருவையே வெறித் துக் கொண்டிருந்தாள். அவள் தோளை யாரோ இழுக்க திரும்பினாள்.

தங்கை சசிரேகா அவளை அழைத்தபடி கூடத்தைக் காட்டினாள்.

கூடத் தரையில் கட்டங்கள் இட்டு 'தாயக் கட்ட' விளையாட்டுக்குத் தயாராய் மற்ற சகோதரிகள். வறண்ட சிரிப்பை உதிர விட்டவாறு அவர்களை நோக்கி வாணி நடந்தாள்.

அந்த வீட்டில் நடக்கும். வினோதமான விசித்திரமான பழக்கம் இது! மணிக்கணக்காய் சோவிகள் குலுங்க நடக்கும் தாயக் கட்ட விளையாட்டு.

அம்மாதான் இப்படி விளையாடுவதை ஆரம்பித்து வைத்தாள். முதன் முதலில் ஒரு நாள் எல்லோரையும் உட்காரவைத்து சாக்பீசால் தாயக் கட்டங்கள் வரைந்த போது, ''விளையாட்டா...? விளையாடும் நிலையிலா... நாம் இருக்கிறோம்?'' என அதிர்ந்து கேட்டவள் தான் வாணி.

ஆனால் அம்மா அதற்கு சொன்ன பதில் அவளுக்கு அந்தப் பெரிய உண்மையை புரிய வைத்தது. ''வாணி இந்த விளையாட்டு விளையாட்டுக்காக நாம் விளை யாடப் போவதில்லை. சும்மா ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தால்... நம் நிலையை நினைத்து கவலையும் குழப்பமும்தான் மிஞ்சும். இது... போன்ற சூழ்நிலையில் இப்படி ஒரு விளையாட்டு விளையாடி னால் மனம் வேறு விஷயத்தில் லயிப்பாகி... கவலைகள் மறந்து போகும். மேலும் நம் கஷ்ட சூழ்நிலைக்காக, மேலும் மேலும் கவலைப்பட்டு ஒன்றும் ஆகிவிடப் போவதில்லை. ஒரு முறை விளையாடிப் பார்.... நான் சொல்ல வருவது உனக்குப் புரிந்து விடும்...''

அன்று வாணி விளையாடிப் பார்த்தாள். அம்மா சொன் னது அவளுக்கு மட்டுமல்ல. மொத்த உடன் பிறப்பு களுக்கும் புரிந்தது.

முதலில் சுவாரஸ்யமில்லாமல் எல்லோரும் போகப் போக ஆட்டத்தில் லயித்து தங்களையே மறந்து போயினர். சோகம் பொதுமும் பேச்சொலிகள் மாறி, தாயம் ஒண்ணு தாயம் இரண்டு, வெட்டுக்காய், உனக் குப் பழம்... உனக்கு காய்... என உற்சாக பேச்சொலிகள் எழுந்தன. விளையாடி முடிந்ததும், அந்த ஒரு மணி நேர மும் எந்தக் கவலையுமில்லாமல் மனதை மாற்ற முடிந் ததை எல்லோரும் உணர்ந்திருந்தனர்.

அது முதல் கவலைகள் பொங்கும் வறுமைச் சூழ் நிலையில் இப்படி தாயக்கட்ட விளையாட்டு விளை யாடுவது அவர்களுக்கு வழக்கமாயிற்று.

அன்றும் அப்படியே விளையாடினர். அப்படி அவர்கள் சுவாரஸ்யமாய் விளையாடிக் கொண்டிருந்த போது



வாசலில் நிழலாடியது. பொன்னுசாமி புரோக்கர் நின்று கொண்டிருந்தார்.

# 2

பொன்னுசாமி புரோக்கரைப் பார்த்ததும் வாணியின் முகம் மாறியது. ஒரு வித எரிச்சலுக்குப் போனது.

அம்மாதான் எழுந்து ஆவலாய் வரவேற்று கூடத்தில் உட்கார்த்தி வைத்தாள். தேவியின் எரிச்சலுக்கு காரணமு மிருந்தது. பொன்னுசாமி புரோக்கர் எப்போதும் பெரியக் காவிற்கு ஏற்ற வரன், சின்னக்காவிற்கு எந்த வரன் என எப்போதும் ஒரு மாப்பிள்ளை பட்டியலை கொண்டு வருவார்.

ஆனால் பணம் நகை என்று பார்க்கும் போது எந்த வரனும் அவர்களது நிலைக்குப் பொருந்தாது. இப்படி ரொம்ப நாள் நடந்த வரன் தேடும் கூத்தில் நொந்து போய் தான் ஒரு நாள் பெரியக்கா, 'எனக்கு கல்யாணமே வேண்டாம். நான் கல்யாணம் பண்ணப் போவதில்லை. அம்மாவுடன், அம்மாவுக்கு துணையாக கடைசி வரை இருந்து விட்டுப் விடப் போகிறேன்...' என திடமாய் உறுதியுடன் சொல்லி விட்டாள்.

எவ்வளவு வற்புறுத்தியும் அவள் தன் பிடிவாதத்தை தளர்த்தாததால் வேறு வழியில்லாமல் சின்னக்கா

லட்சுமிக்கு வரன் தேடும்படி சொல்ல வேண்டிய தாயிற்று.

ஆனாலும் பொன்னுசாமி புரோக்கர் நல்ல மனிதர். அவர்கள் அப்பா காலத்தில் இருந்தே அவர்கள் குடும்பத்தில் நல்ல பழக்கமும் பரிச்சயமும் உண்டு. அதனாலே அப்பாவின் மறைவுக்குப் பின் அவர்களது கஷ்டத்தை உணர்ந்து தன்னால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும் என்று ஆர்வம் காட்டினார். 'உங்கள் எல்லோருக்கும் ஏதாவது நல்வழியைக் காட்டி உங்கள் வாழ்க்கையை மேன்படுத்த வேண்டும். அது என் கடமையம்மா...' என அடிக்கடி சொல்வார்.

இப்போதும் அதே போல் கூடத்தில் உட்கார்ந்து கொண்டு வந்திருந்த மஞ்சள் பையை பிரித்து வரன்கள் அடங்கிய ஜாதகக் குவியல்களை எடுத்தார். தனது பெரிய மூக்கு கண்ணாடியை இறுக்கியபடி பார்வையை ஓட்ட ஆரம்பித்தார்.

அம்மா கற்பகம் ஆவலாய் அவரது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். சின்னக்கா லட்சுமியக்கா அவர்கள் பேசுவது எதுவும் காதில் விழுந்து விடக் கூடாது என்பது போல் உள்ளிருக்கும் சிறிய அடுக்களையில் போய் ஒளிந்து கொண்டாள். என்ன... புரோக்கர் வரன் சொல்லப் போவது அவளுக்குத்தானே...!

எல்லோரும் அப்படித்தான் நினைத்திருந்தார்கள். ஆனால் இம்முறை அதில் பெரிய மாற்றமிருந்தது.

பொன்னுசாமி தன் அத்தனை பற்களையும் காட்டிச் சிரித்தவர், ''இம்முறை சின்னக்கா லட்சுமிக்கு பொருத்தமான வரன் ஒன்று கொண்டு வந்திருக்கேம்மா. உங்களுக்கு பிடித்து விட்டால் கல்யாணத்தை வரும் முகூர்த்தத்தில் நடத்தி விடலாம்...'' என்றார்.



''என்ன நிஜமாகவா?'' என்றாள் அம்மா.

''ஆமாம்... சின்னக்கா லட்சுமிக்கு.... யோகம் தான்'' சொல்லியபடி பலமாய் தலையாட்டினார் பொன்னுசாமி.

அசட்டையாய் நிலையோர கதவுப்புறம் நின்றபடி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த வாணி இம்முறை ஆச்சரியமானாள்.

அவர் எதிரிலேயே கால் மடித்து உட்கார்ந்தபடி விஷயத்தை கேட்க ஆரம்பித்து விட்டாள் அவள். எல்லாவற்றையும் விளக்கினார் பொன்னுசாமி.

சின்னக்கா லட்சுமியின் முப்பத்திரண்டு வயசுக்கு ஏற்றார் போல் நாற்பது வயது வரன் ஒன்று இருக்கிறதாம். வசதியான குடும்பம் நல்ல சம்பந்தமாம். வரதட்சணை என ஒன்றும் எதிர்பார்க்கவில்லையாம். கட்டிய சேலையோடு அனுப்பினால் போதுமாம்! கல்யாண செலவு கூட அவர்களதுவாம்! அவர்கள் சொல்லியதும் பொன்னுசாமி புரோக்கருக்கு உடனே லட்சுமியக்கா ஞாபகம் தான் வந்ததாம். உட்னே ஓடி வந்து விட்டாராம்!

'மேலும் பணம் நகை நட்டு என பெரிசாய் அவர்கள் எதுவும் எதிர் பார்க்கவில்லை. இருக்கிற கலியுகத்தில் இப்படி கேட்பவர்கள் எவ்வளவு நல்லவர்கள்? அதனால் சின்னக்காவை நீங்கள் கொடுக்கலாம்!' என புரோக்கர் விளக்கிய போது ஆனந்தமே அவர்களுக்கு மிஞ்சியது.

# 3

பொன்னுசாமி புரோக்கர் சென்று விட்டார். எல்லோரும் கல்யாணம் நடந்து விட்டால் சின்னக்காவை பிரிந்து விடுவோம் என்ற கவலையிலும் தீவிர சிந்தனையிலும் இருந்தனர்.

எல்லோருக்கும் ஒரு மணி நேரம் கழித்து சுயநினைவு பெற்ற போது சின்னக்கா லட்சுமி வந்து வாணியின் கைகளைப் பிடித்தாள். ''எதற்கு வாணி இதுவெல்லாம்...? பேசாமல் நாம் எல்லோரும் இப்படியே இருந்து விடுவோமே?'' என்றாள்.

புரிந்தாலும் புரியாதது போல், ''இப்படியே... என்றால்... எதை நீங்கள் சொல்ல வருகிறீர்கள் அக்கா?'' என்றாள் வாணி.

''வேறென்ன...? நம் பெரியக்கா காயத்ரியைப் போல் நாமும் கல்யாணம் செய்யாமல் இருந்து விட்டால் என்ன? இதே வீட்டில் அம்மாவுடன் இதே போல் இனிமையாய் எவ்வித கவலையுமில்லாமல் பொழுதைக் கழிக்கலாமே? என்ன... தையல் படித்துக் கொண்டிருக்கிற நாங்கள் இருவரும் பயிற்சி முடிந்து தைக்க ஆரம்பித்து விட்டால் ஆர்டர் எடுத்து சம்பாதிக்கவும் செய்து விடுவோம். பிறகு பணத்திற்கும் பிரச்சினை வராது. கொஞ்



சம் யோசித்துப்பார்! அப்படியே வாழ்க்கை முழுவதும் நாம் ஒருவருடன் ஒருவர் இப்படியே இருந்து கொண்டு பிரியாமல் கழிந்தால்... நன்றாகத்தானே இருக்கும்...? அதை விட்டு.... விட்டு... யாரோ ஒருவனுக்கு கழுத்தை நீட்டிக் கொண்டு.... அவன் பின்னால் ஓடி... அவன் சொல்வதற்கெல்லாம் தலையாட்டிக் கொண்டு... ம்... ஹூம்...! என்ன... அது வாழ்க்கை...?'' என அலுத்தவள் அதே களைப்புக் குரலில், ''அப்படி ஒரு வாழ்க்கை நமக்குத் தேவையா?'' என்றும் முடித்தாள்.

வாணி அவள் சொல்வதை பொறுமையாய் கேட்டு விட்டு ரஸித்தபடி சிரிக்கவே செய்தாள்.

அவளும் தங்களது வறுமைச் சூழ்நிலையை போதுமான நகை, நட்டு இல்லாத சூழ்நிலையை அறிந்து எத்தனையோ முறை இப்படி சிந்தித்தவள் தானே! கல்யாணமே வேண்டாம் என அறிவித்து விட்டால் நல்லது தானே! என்று முடிவெடுப்பது பற்றி எவ்வளவு தீவிரமாய் சிந்தித்திருக்கிறாள். ஆனால் கடைசியில்... சே...! என்ன ஒரு கோழைத்தனம் அது...! எவ்வித முயற்சியும் செய்யாமல் கிடைக்கிற வாழ்க்கையை... எல்லாம் நம் தலை விதி... என ஏற்றுக் கொள்வது சரியான பேடித்தனம் தானே? எல்லோரையும் போல் வாழ நினைக்காமல் சூழ்நிலைக்காக பயந்து ஒடுங்கிப் போவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் முட்டாள் தனம் தானே? என வேகமாய் சிந்தித்து முன்பே அந்த எண்ணங்களை மனதில் இருந்து விலக்கியும் விட்டாள்.

அதனாலே சிரிப்புடன் சின்னக்காவைப் பார்த்தவள், ''அக்கா நீ சொல்வது போல் பிரச்சினைக்காகவும், பிரிய

வேண்டியதற்காகவும் கல்யாணம் வேண்டாம் என்று முடிவெடுத்தால் இந்த உலகில் யாருமே கல்யாணம் செய்து கொள்ள முடியாது தான். மேலும் எந்த ஒரு முடிவும் தெளிவாய் சிந்தித்து எடுக்க வேண்டுமே தவிர, பிரச்சினைகளுக்காக அவைகளை எதிர்கொள்ள பயந்து எடுக்கக் கூடாது'' என்றவள் தொடர்ந்து ''நான் உனக்கு புரியும்படி தெளிவாய் ஒன்று சொல்லட்டுமா?'' என்றாள்.

''ம்ம்... சொல்லு...'' என்றாள் லட்சுமி முகம் வெட்டிய ஆச்சரியத்துடன்.

''இப்படி வாழ்வோமா? என்று நினைப்பதற்குப் பதில் ஊர் உலகத்தைப் போல் நாமும் வாழுவோமே... என்று நினைத்துப் பார்... எல்லாம் இலகுவாகப் புரியும்...!''

லட்சுமிக்கு அவள் சொன்னது புரிந்ததோ என்னவோ... தலையை மட்டும் ஆட்டினாள்.

எல்லாவற்றையும் பக்கத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந்த பெரியக்கா பேச்சில் சேர்ந்து கொண்டாள்.

''வாணி, சொல்வது ரொம்பவும் சரி. நான் ஒருத்தி போதாதா அம்மாவை கடைசி வரை கவனித்துக் கொள்வேன். நீங்கள் உங்களுக்கென்று ஒரு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்...'' என்றாள்.... தன் பேச்சை உறுதிப்படுத்த விரும்புபவள் போல் உட்கார்ந்து கொண்டிருந்த கற்பகத்தைப் பார்த்தாள்.

''நீங்களே சொல்லுங்கள் அம்மா. நான் சொல்வது எல்லாம் சரிதானே?'' என்றாள்.

கற்பகம் மெல்ல வறண்ட புன்னகையை உதடுகளில் ஓடவிட்டவள் அதே கவலையோடு அவர்களைப் பார்த்



தாள். பின் மெல்ல எழுந்து அவர்கள் பக்கம் வந்தாள்.

கற்பகத்தின் முகத்திலும் பெரும் சிந்தனையொன்று தோன்றி மறைந்தது. ''கண்ணுகளா, உங்கள் மாதிரியெல்லாம் எனக்கு பெரிதாக பேசத் தெரியாது. பட்டென்று புரிந்து கொள்ளும் வண்ணம் ஒன்றைச் சொல்லட்டுமா?'' என்றாள்.

''சொல்லுங்கள் அம்மா...''

''நான் மட்டும் அப்படி அந்த வயதில் கல்யாணமே வேண்டாம் என்று நினைத்திருந்தால் நீங்கள் எல்லாம் பிறந்திருக்க முடியுமா? யோசித்துப் பாருங்கள்!''

எல்லோரும் மௌனமாக குட்டித்தங்கை மட்டும், ''என்ன... நீங்கள் கல்யாணம் செய்யாவிட்டால் வேறு வீட்டில் பிறந்திருப்போம்... என்ன என் பெயர்... சசிரேகாவிற்குப் பதில் எதோ... குப்பம்மாவாகக் கூட இருக்கலாம்...'' என அபிநயத்து முடிக்க எல்லோரும் கொல்லென சிரித்து விட்டனர்.

பின் திரும்பவும் மதியம் அந்த பேச்சு வந்த போது தரகர் சொல்லிய மற்ற விஷயங்களையும் கற்பகம் விளக்கினாள்.

''மணப்பெண் லட்சுமிக்கு ஒரு செயின் கழுத்தில் இருந்தால் போதும். வேறு ஒன்றும் பெரிதாய் அவர்கள் எதிர்பார்க்கவில்லை. கல்யாணத்தை அவர்கள் நடத்தி முழுச் செலவையும் அவர்களே ஏற்றுக் கொள்வதாக தெரிவித்து விட்டனர்!''

- என விவரித்த கற்பகம், ''வாணிம்மா? யோசித்துப் பார். இது நல்ல இடமாக, மாப்பிள்ளை வீட்டார்கள்

ரொம்பவும் நல்லவர்களாக தெரியவில்லை? மேலும் வயதாகிக் கொண்டிருக்கிற சின்னக்காவிற்கு திருமணம் உடனே செய்வது அவசியமும் கூட. அதனால் உன் அபிப்பிராயம் என்ன? நீ என்ன நினைக்கிறாய்?'' என்ற போது வாணி சம்மதத்தின் அறிகுறியாய் தலையாட்டத் தான் செய்தாள்.

# 4

வாணி வீட்டார் சம்மதம் சொன்னதும் தான் தாமதம் எல்லாமே விரைந்து நடந்தன.

ஒரு நாள் வாடகை டாக்ஸி ஒன்றில் மாப்பிள்ளை வீட்டார்கள் வந்தார்கள். பேசினார்கள். ''எல்லாம் பிடித்திருக்கிறது. இனி முகூர்த்தம் தான்!'' என ஒரே வரியில் சொல்லி விட மறுவாரமே நாளும் குறிக்கப்பட்டது.

எல்லாமே மாப்பிள்ளை வீட்டுச் செலவு என்றாகி விட்டபடியால் வாணியின் குடும்பத்திற்கு எவ்வித பிரச்சினையுமில்லை. ஆனாலும் அம்மா தனது சேமிப்பு பணத்திலிருந்து பத்தாயிரத்தை எடுத்து வாணி கையில் கொடுத்து. ''நல்ல துணிமணிகளை வாங்கிக் கொள்ளுங்கள்...'' என்றாள்.

வாணி அன்றே ஜவுளிக்கடைக்குச் சென்று எல்லோருக்குமாக துணிகளை வாங்கி வந்து பரிசளித்தாள்.



இதில் பெரியக்காவிற்கும் குட்டித் தங்கைக்கும் சின்னக்காவை பிரியப் போகிறோம் என்ற கவலை வேறு.

சின்னக்காவை அடிக்கடி கட்டிப் பிடித்தபடி அவர்கள் அழுவதைப் பார்த்த வாணி அதட்டவே செய்தாள். ''அவள் என்ன வெளிநாட்டிற்கா செல்லப் போகிறாள்? பக்கத்தில் உள்ள பாளையம் பட்டி! பஸ்ஸில் ஏறினாள் ஒரு மணி நேரப் பயணம். நாம் உடனே பார்த்து விடலாம். அடிக்கடி அவளும் வந்து போக மாட்டாள்?'' என்றவள் தொடர்ந்து தலையசைப்புடன், ''ஆனால் பாருங்கள் இந்த இரு திருமணங்கள் மூலம்... நம் எல்லா பிரச்சினைகளும் தீர்ந்து விடும். சின்னக்காவிற்கு வாழ்வு கிடைக்கிறது. பெரியக்காவிற்கு சரியான ஒரு வேலை. குட்டித் தங்கைக்கான படிப்புச் செலவு என எல்லாமே. சுமுகமாய் கிடைத்து விடும். நாமும் தலைநிமிர்ந்து நிற்கலாம்...'' என முடித்தாள்.

சொல்லப்போனால் வாணி அதே நினைப்பில் கல்யாணம் நெருங்கும் வரை இருந்தாள். சின்னக்காவின் குறை தெரிந்தும் அவளை அப்படியே ஏற்றுக் கொள்கிறார்கள். தாங்கள் பெண் எடுத்த குடும்பத்திற்கும் உதவி செய்ய நினைக்கிறார்கள். நிச்சயம் நல்ல மனது உடையவர்கள் தான் என்ற நினைப்பு ஓடியது.

மேலும் சின்னக்காவிற்கு காலில் உள்ள சிறிய குறை பாட்டினால் அவள் விந்தி விந்தி நடப்பதைக் கூட அவர்கள் பொருட்படுத்தவில்லையே...!

புரோக்கர் சொன்ன விஷயமும் அவள் ஞாபகத்திற்கு வந்தது. பார்த்திருக்கும் மாப்பிள்ளை பையனும் அப்பிராணியாம். பயந்த சுபாவத்துடன் சூது வாது தெரியாத

வராம். பள்ளிப் படிப்புடனே படிப்பை நிறுத்தி விட்டு சகோதரரின் பிஸினஸில் துணையாக இருக்கிறாராம். பணத்துக்கு எவ்வித பிரச்சினையுமில்லையாம்...'' என்ற புரோக்கர் கூடவே, ''ஆனால் ஒன்று வாணியம்மா... இதை விட்டால் நம் சின்னக்காவின் நிலைமைக்கு வேறு மாப்பிள்ளை கிடைப்பது கஷ்டம்..'' என்று முடிந்திருந்தார்.

அந்த பத்து நாட்களும் வேகமாய் ஓடி கல்யாண நாள் நாளை நெருங்கியது.

இதோ... நாளை விடிந்தால் கல்யாணம். வாணி தன் குடும்பத்துடன் இருக்கும் ஒன்றிரண்டு சுற்றத்தாருடன் பெண் அழைப்பின் போதே மண்டபத்திற்கு வந்து விட்டாள்.

நகரின் பிரதான சிவன் கோவிலை ஒட்டிய திருமண மண்டபம். சிறியதாக இருந்தாலும் அவர்களுக்கு, வரும் சொந்த பந்தங்களுக்கு போதும் எனவே வாணி நினைத்தாள்.

சின்னக்காவை அலங்கரித்து மண்டபத்தினுள் கூட்டி வரும் போது அவளாலே நடப்பதை நம்ப முடியாமல் கண் கலங்கியது. எங்கே திருமணம் என்ற ஒன்று நம் வாழ்க்கையில் வரவே போவதில்லை என்று நினைத்தவள் அல்லவா அவள்?

வாணிக்கும் நடக்கும் மங்கள விஷயங்களை நினைத்து நெகிழ்ச்சியாய் இருந்தது. அவள் வீட்டில் நடக்கப் போகும் முதல் திருமணம். சுபகாரியம் ''அப்பாவின் மறைவிற்குப் பின் குடும்பத்தின் ஏழ்மையை உணர்ந்து அதைப்



பற்றியெல்லாம் யோசிக்க நேரமில்லாமல் தானே அவள் அலைந்தாள்?

என்ன... பொன்னுசாமி புரோக்கரின் தீவிர தேடுதல் மூலம் இப்படியொரு நல்ல இடம். அவர்களிடம் எந்த பணமோ பொருளோ எதிர்பார்க்காமல், கட்டிய சேலையுடன் மணமகள் வந்தால் போதும் எனக் கூறும் நல்ல இடம் அமைந்திருக்குமா?

கல்யாணம் முடிந்ததும் அவருக்குத்தான் முதலில் நன்றி சொல்லி பாராட்ட வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் வாணி.

அதே யோசனையில் மண்டபத்தின் குறுக்கும் நெடுக்குமாய் சிரிப்புடன் நடந்து கொண்டிருந்தவளை சிறுவன் ஒருவன் வந்து யாரோ அவளை அழைப்பதாகக் கூறி மொட்டை மாடிப்பக்கம் கூட்டிச் சென்றான்.

வாணி திகைப்பாகவே, 'அப்படி யார் நம்மை கூப்பிட்டு தனியே பேசுமளவுக்கு இருக்கிறார்கள்?' என்ற நினைப்புடன் அந்தச் சிறுவனை பின் தொடர்ந்தாள்.

மொட்டை மாடியில் வாணிக்கு திகைப்பு அதிகமாகியது.

அங்கு வாட்ட சாட்டமான உயரத்துடன் கம்பீரமாய் ஒருவன் கைமடித்து நின்று கொண்டிருந்தான்.

அவள் வருவதைப் பார்த்ததும் கையிலிருந்த சிகரெட்டை சுண்டிவிட்டுத் திரும்பினான்.

''பொன்னுசாமி புரோக்கர் சொன்ன பெண்... சம்பந்தம் எல்லாம் பேசிய பெண் நீதானே...?'' என்றான்.

வாணி பலமாய் தலையசைத்தாள்.

அவனது அடுத்த கேள்வி அவளுக்கு திகைப்பாய் அதிர்ச்சியைக் கொடுத்தது. ''அப்படியானால்... பேசிய படி பணத்தை கொண்டு வந்திருக்கிறாயா? இப்போதே கொடுத்து விடுகிறாயா?'' என்றான்.

அவன் பேச அவள் பேந்தப் பேந்த விழித்து விட்டு, ''பணமா...? என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள்.

''என்ன விழிக்கிறாய்? ஐம்பதினாயிரம் ரூபாய், வர தட்சணைப் பணம். கல்யாணத்திற்கு முந்தைய நாளே கொடுத்து விடுவதாகத்தானே பேச்சு... கொடுங்கள்... பணத்தை....!'' என்றான்.

அவள் பயங்கரமாய்த்தான் அதிர்ந்தாள்.

''என்ன... என்ன... சொன்னீ... ர்கள்? வரதட்சணைப் பணமா... அதுவும் ஐம்பதாயிரம்? அப்படி... யாரும்? எங்களிடம் எதுவும் சொல்லவில்லையே...?'' என்றாள், அப்பாவியான முகத்துடன்.

அவனோ அதை நம்பாதது போல் முகத்தை மாற்றி னான்.

''ஏய்.... பெண்ணே... உன் பெயர்... என்ன? புரோக் கர் சொன்னாரே ஆங்... ஞாபகம் வந்துவிட்டது. வாணி...! வா... ணி...! நீ விளையாடியது போதும். உடனே போய் பணத்தை எடுத்துக் கொண்டு வா...! பணம் மட்டும் இல்லையென்றால் உடனே கல்யாணத்தை நிறுத்தி விடுவேன்!'' என்றான் உறுதியான கணீர்க் குரலில்.



# 5

வாணியால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

ஆனால் அவன் திட்டவட்டமாய் சொல்லி விட் டான்.

''ஸார்... ஸார்... என்ன... என்ன... சொன்னீர்கள்?'' என்றாள் அதிர்ந்தவளாய்.

''என் பெயர் ஸார் இல்லை... திவாகரன்...!'' அழுத் தந்திருத்தமாய் உச்சரித்தவனை அப்போது தான் நிமிர்ந்து உற்று நோக்கினாள். நெடு நெடு உயரத்துடன் திடகாத் திரமாய் சுருள் முடியும் அடர்ந்த மீசையுமாய் அவன் தெரிந் தான். வேகமாய் சுழன்ற கண்கள் சட்டென தெளித்தாற் போல் வெளி வரும் பேச்சு எல்லாமே ஒரு வித கம் பீரத்தை அவனுக்கு கொடுத்தன.

''சொல்லுங்கள் திவாகரன் சார்? இங்கு என்ன தான் நடக்கிறது?'' அவள் தன் கோபத்தை எல்லாம் அடக்கிக் கொண்டு பணிவுடன் கேட்டாள்.

அதற்கு அவனும் அவளைப் போன்றே பணிவுக் குரலில், ''வேறொன்றுமில்லையம்மா. இந்த கல்யாணம் நடைபெறாது. உன் சின்னக்காவின் கல்யாணத்தை நிறுத்தப் போகிறார்கள்...!'' என்றான் போலி பவ்ய மாய்.

''நிறுத்தப் போகிறார்களா? யார்... யார்... சார்... அது...?''

அவள் தவிப்பாய் கேட்க அவனிடமிருந்து நிதான மாய், ''நான் தான்...!'' என்ற பதில் வந்தது.

''என்ன நீங்களா?''

''ம்ம்... நான் தான் நிறுத்தப் போகிறேன்...'' என்றான் தலையசைப்புடன்.

அவளுள் கொதிப்பு கூடியது.

''காரணம்...?'' என்றாள் முறைப்புடன்.

''வரதட்சணை...'' என்றான் ஒற்றை வார்த்தையில்.

''வரதட்சணையா...? தரகர் எதுவும் எதிர்பார்க்க வில்லை... கட்டிய சேலை போதும்... என்று சொன் னாரே...'' அவன் கடகடவென சிரித்து அவளை எரிச்சல் படுத்தி விட்டு, ''கட்டிய சேலை போதுமென்றால் மாற் றுச் சேலைக்கு எங்கே போவது?'' என்றான். அப்பாவி யாய் அவன் விளையாடுவதை உணர்ந்து அவளுள் கோபம் எகிறியது.

''ஹலோ... மிஸ்டர்...'' என குரலை உயர்த்தினாள்.

''ம்ஹூம்...! எத்தனை முறை சொல்வது...? என் பெயர் திவாகரன் என்று...''

''ம்ம்... என்னவோ ஒரு கரனாக இருந்து விட்டுப் போங்கள். இதையெல்லாம்... திடீரென சொல்கிறீர் களே... யார்... நீங்கள்? முதலில் அதைச் சொல்லுங்கள்!'' என்றாள் கறாரான குரலோடு.

''அப்படிக் கேள். சொல்கிறேன்...'' என்று அசராமல் சொன்ன அவன் நிதானமாய் மூச்சிழுத்து விட்டு, ''நான்



கல்யாண மாப்பிள்ளையின் சகோதரன். சொந்தமாய் பிசினஸ் செய்கிறேன். எனது செலவில் தான் இந்த கல்யாணமே நடக்கிறது. உனக்கு சந்தேகமிருந்தால் பொன்னுசாமி புரோக்கரையே கேட்டுக்கொள்...'' என்றான்.

''அப்படியானால் நீங்களே உங்களது சகோதரரது கல்யாணத்தை நிறுத்தத் துடிக்கிறீர்களா...?!''

''அப்படியும் வைத்துக் கொள்ளலாம். எனக்கு வர தட்சணைப் பணம். நான் கேட்ட ஐம்பதாயிரம் பணம் முக்கியம்...''

''என்ன ஐம்பதினாயிரமா?'' திகைத்து ஸ்தம்பித்த வளை அப்படியே உற்றுப் பார்த்தவன், ''இதற்கே இப்படி வாயைப் பிளந்தால் எப்படி? ம்ம்... முதலில் உன் வாயை மூடு... குருவி எதாவது கூடு என நினைத்து உள்ளே போய் விடப்போகிறது...'' என்றான் பெரும் ஹாஸ்யச் சிரிப்புடன்.

என்ன திமிர் இவனுக்கு! அவள் தவிப்பது இவ்வளவு கேலியாய் போயிற்றா... இவன் சரியான அழுத்தக்கார னாய் இருப்பான் போலவே.

அதே யோசனையோடு, ''கண்டிப்பாக ஐம்பதினா யிரம் வேண்டுமா?''

''ம்ம்... ஒரு நயா பைசா குறையக்கூடாது. கல்யாணம் நின்று விடும்...'' என்றான் அவன் கறாராய் திரும்பத் திரும்ப அவன் கல்யாணத்தை நின்று விடும் நடக்காது என்றெல்லாம் அபசகுணமாய் பேசுவது அவளை மிக வும் எரிச்சல் படுத்தியது.

''ஏன் மிஸ்டர் திவாகரன் உங்கள் வாயில் இருந்து வேறு நல்ல வார்த்தையே வராதா?'' என்றாள்.

அதற்கும் அலுங்காமல் சிரித்தான் அவன்.

''ம்ம்... வருமே... சொல்லட்டுமா?'' என்றவன் அதே குரலில், ''நீ ரொம்ப அழகாக இருக்கிறாய்... ஐம்பதாயிரம் பணத்தை கொடுத்தால் இன்னும் அழகாகி விடுவாய்!'' எனச் சொல்லி முடித்தான்.

அவள் திரும்பவும் கோபமாய் உதடு துடிக்க எதோ சொல்ல ஆரம்பிப்பதற்குள் பொன்னுசாமி புரோக்கரே அங்கு வந்து விட்டார். வாணி கோபமாய் அவரை நோக்கித் திரும்பினாள்.

''மாமா... என்ன இது...? இந்த ஆள் திடீரென என்னென்னமோ சொல்கிறார்? நீங்கள் சொல்லுங்கள்! ஐம்பதாயிரப் பணம் வரதட்சணையாய் கேட்டார்களா?''

அவள் கேட்டதற்கு பொன்னுசாமி ஒரு விதமாய் தலையசைத்தவர், ''அதுதான் எனக்கும் குழப்பமாய் இருக்கிறது அம்மா... முதலில் முடிந்தால் அந்தப் பணத்தை கொடுக்கட்டும்... என்றவர்கள் இப்போது கறாராய் வேண்டும் என்று சொல்கிறார்கள்...'' என்றார் குரலில் கவலை பொங்க.

சொல்லியபடி தலையை குனிந்த அவரைப் பார்க்க வாணிக்கே சங்கடமாயிருந்தது. தங்களுக்காக பிரயாசைப் பட்டு தேடி இந்த இடத்தைப் பிடித்திருக்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாய் அப்பாவின் பழைய நண்பர் குடும்பத்திற்கு வேண்டியவர். அவர் பொய் சொல்லப் போவதில்லை. இந்த மாப்பிள்ளை கூட்டம் தான் ஏதோ



குழப்பம் உண்டாக்கி... கல்யாணத்தை நிறுத்தப் பார்க்கிறது.

ஆயினும்... சின்னக்காவின் கல்யாணம் ஒரு போதும் நின்று விடக்கூடாது. அவள் மன மொடிந்து விடுவாள். பின் ஜென்மத்திலும் தனக்கு கல்யாணமே வேண்டாம் என்று அடுப்பங்கரையினுள் முடங்கிக் கொள்வாள்.

அவள் நினைத்துக் கொண்டிருக்கும் போதே பொன்னுசாமி புரோக்கர் அவள் பக்கத்தில் வந்து கிசுகிசுப்பாய், ''இதோ நிற்கிறாரே... திவாகரன்... இவரை எப்படியாவது சமாதானப்படுத்தி விடு. கல்யாணம் நடந்து விடும்...!'' சொல்லி விட்டு மெல்ல அகன்றார்.

திகைத்துப் போனாள் வாணி. சமாதானப்படுத்துவதா? எப்படி? அப்படி ஐம்பதினாயிரம் வரதட்சணை கொடுக்கும் நிலையிலா அவர்கள் இருக்கிறார்கள்?

இருந்தும் நம்பிக்கை இழக்காமல் அவன் பக்கம் திரும்பினாள்.

''திவாகரன் சார்...''

''ம்ம்...'' என்றான் அவன்.

''ஒன்று செய்வோம்... இப்போது கல்யாணம் நடக்கட்டும். உங்களுக்கு கொடுக்க வேண்டிய ஐம்பதாயிரம் பணத்தை நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக...''

அவள் முடிப்பதற்குள் அவன், ''எப்படி? இந்த தவணை முறையில் மிக்ஸி, கிரைண்டர் வாங்குவார்களே... அப்படியா?'' என்றான் கிண்டலாய்.

வாணிக்கு மறுபடியும் கோபம் எகிறிற்று. அவள் எவ்வளவு சீரியஸாய் சொல்லிக் கொண்டிருக்கிறாள். இவன்

என்னடாவென்றால் சர்வசாதாரணமாய் கிண்டலடித்துக் கொண்டு... என எரிச்சலானவள் ''எங்களிடம் கொடுப்ப தற்கு பணம் எதுவும் இப்போது இல்லை. அதைத் தெரிந்து கொள்ளுங்கள்...'' என்றாள் குரலை உயர்த்திக் கொண்டு.

''அப்படியானால் எனக்கும் வேறு வழி இல்லை. கல்யாணத்தை நிறுத்தப் போகிறேன்...'' என்றான் அவனும் குரல் உயர.

அவன் சொன்ன விதம் உறுதியான தொனி எல்லாமே வாணியை கலங்க வைத்து விட்டது. பாவி, நிஜமாகவே கல்யாணத்தை நிறுத்தி விடுவானா? அவள் ஆசை ஆசையாய் நடத்திப் பார்க்க முயன்ற சின்னக்காவின் கல்யாணம் இப்படி ஊர் சிரிக்க அவமானத்துடன் நின்று விடுமா?

மறுபடியும் திகைத்து ஸ்தம்பித்து பேதலித்துப் போனவள் போல் அவள் நிற்க அவன் அவளையே உற்றுப் பார்த்தவாறு அவள் முகத்தருகே சொடுக்கிட்டான்.

''கல்யாணம் நடைபெற ஒரே ஒரு வழி மட்டும் இருக்கிறது...'' என்றான்.

தண்ணீரில் காட்டு வெள்ளத்தில் தத்தளிப்பவளுக்கு தப்பிக்க துடுப்பு கிடைத்தாற் போல் இருக்க... அவள் ஆவலாய் ஆர்வம் பொங்க நிமிர்ந்தாள்.

''வழி இருக்கிறதா? என்ன... என்ன... வழி...? சொல்லுங்கள்...!'' என்றாள் பரபரப்புடன்.

அவன் நீளமாய் மூச்சிழுத்தவன், ''உன்னைப் பார்த்தால் அதற்கு லேசில் ஒத்துக் கொள்கிற ஆளாய்த்



தெரியவில்லை... அதனால் தான் யோசிக்கிறேன்...'' என்றான் சிந்திப்பது போன்ற பாவனையுடன்.

''எதுவானாலும் சொல்லுங்கள் கண்டிப்பாக செய்கிறேன். என் சின்னக்காவின் கல்யாணம் நிற்கக் கூடாது. எப்படியும் அது நடந்தாக வேண்டும்...!''

அவள் ஆர்வமாய் கேட்க அவன் நிதானமாய் அழுத்தந்திருத்தமாய் வார்த்தைகளை உச்சரித்தான்.

''அப்படியானால் நீ என்னை... மணந்து கொள்ள வேண்டும்...!''

# 6

''என்ன... என்ன...? என்ன... சொன்னீர்கள்?'' அவள் காதுகளை நம்ப முடியாமல் வாணி கேட்டதற்கு மறுபடியும் அதை தெளிவாய் உச்சரித்தான்.

வெகுண்டவள், ''முட்டாள்தனமாய் பேசாதீர்கள்...!'' என்றாள் கோபமூச்சு வாங்க.

''உன்னை மணந்து கொள்வது முட்டாள் தனமான காரியமா? பேஷ்! நன்றாகத்தான் பேசுகிறாய்!'' அவன் சிரிக்க ஆரம்பிக்க அவள் கோபம் வெடித்தது.

''மிஸ்டர் திவாகரன் விளையாடாதீர்கள்...''

''இது... புட்பால் கிரவுண்டா... நாம் இருவரும் விளையாட?'' கைகளை விசிறி எதிர்கேள்வி கேட்டான் அவன்.

''பின் எதற்காக இப்படிச் சொல்கிறீர்கள்?''

''உண்மையை, கல்யாணம் நிற்காமல் நடக்க... எதோ உன்னால் முடிந்த ஒரே ஒரு வழியைச் சொல்கிறேன்...''

''நீங்கள் கேட்பது தலைவலிக்கு கொள்ளிக் கட்டையை எடுத்து சொரிந்து கொள்வது போல் இருக்கிறது...''

''உன்னைக் கட்டிக் கொள்வது அவ்வளவு பெரிய தலைவலியா? இல்லை பாவமா?''

''ரெண்டும்தான்! ஆனால் என்னையல்ல... உங்களை கட்டிக் கொள்வது! அப்படிப்பட்ட ஒரு பரிதாபப் பெண்ணாய் நான் இருக்க விரும்பவில்லை...''

''ஓஹோ! அவ்வளவு பெரிய கொடூரனா நான்? அப்படியா உனக்கு நான் தெரிகிறேன்?''

''பின் நிச்சயிக்கப்பட்ட கல்யாணத்தை அதுவும் சொந்தச் சகோதரனது கல்யாணத்தை ஈவு இரக்கமில்லாமல் நிறுத்தப் பார்க்கும் உங்களை எப்படிச் சொல்வது?''

''அப்படிப் பார்த்தால் பேசிய ஐம்பதாயிர ரூபாய் வரதட்சணையை கொடுக்காமல் ஏமாற்றப் பார்க்கும் உங்களை என்னவென்று சொல்வது...?''

அவள் மேற்கொண்டு எதோ பேச வருவதற்குள் கையை உயர்த்தினான் அவன்.

''இதோ பார், உன்னிடம் விரிவாக பேசி வம்பளக்க நான் தயாரில்லை. நான் சொல்ல வந்ததை, என் கருத்தை தெளிவாகச் சொல்லி விடுகிறேன்...'' என்றபடி ஆரம்பித்தான் அவன்.



''நான் ஐம்பதாயிர ரூபாய் வரதட்சணை பணத்தை உறுதியாக கேட்டிருந்தேன். தரகர் உங்களிடம் அதை சொல்லாதது அவரது தப்பு. ஐம்பதினாயிரம் இல்லாமல் இந்த சம்பந்தம் வேண்டாம். நிறுத்தி விட வேண்டும் என்று தான் பார்த்தேன். ஆனால் மணப்பெண்ணின் தங்கையான உன்னை உன் அழகைப் பார்த்ததும் என் மனம் மாறி விட்டது. நீ என்னை கட்டிக் கொள்ள சம்மதித்து விட்டால் ஐம்பதினாயிரப் பணமும் வேண்டாம் என்று தோன்றி விட்டது. இப்போது புரிகிறதா? இது தான் எனது ஆஃபர்... ஏற்றுக் கொள்வதும் மறுப்பதும் உன் இஷ்டம்! நீயே முடிவெடு...! ஆனால் ஒன்று. நீ மட்டும் மறுத்தால் உன் பிரியமான சின்னக்காவை நீ சொன்னாயே கட்டிய சேலை.... அதோடு அப்படியே உன் வீட்டுக்கு கூட்டிக் கொண்டு போக வேண்டியது தான்... அதையும் புரிந்து கொள்!''

அவன் பேசி முடித்தான்.

''இப்படிப் பேச உங்களுக்கு வெட்கமாய் இல்லை...?''

கொதிப்பாய் அவள் கேட்க, ''இல்லை... இல்லவே... இல்லை..'' என்றான் சிரிப்பாய் பற்களைக் காட்டியவாறு.

அவளுக்கு சட்டென அவன் சொன்ன வார்த்தை ஞாபகத்திற்கு வர சந்தேகம் பொங்க நிமிர்ந்தாள்.

''ஆமாம்... என்னை... என்னை... அப்படி திடீரென கட்டிக்கொள்ள... என்ன அவசரம்? எதற்காக இந்த முடிவு?''

அவன் தோள்களை குலுக்கினான்.

''அதான் சொல்லிவிட்டேனே... நீ... அழகி... என்று...!'' அந்த புகழ்ச்சிக்கு மயங்காமல் கோபமாய் ''ஓஹோ...!'' என்றபடி உதடு சுழித்தாள் அவள்.

''ஒரு அழகன்... ஒரு அழகியை எதிர்பார்ப்பது... மனைவியாய் வர விரும்புவது... இயற்கை தானே?'' என அதற்கு விளக்கமும் கொடுக்க மீண்டும் பற்களை கடித்தாள் அவள்.

''மண்ணாங்கட்டி...!''

''ஆனால் பார்...! இந்த மண்ணாங்கட்டிதான் நீ சம்மதிக்காவிட்டால் இந்த கல்யாணத்தை நிறுத்தப் போகிறது...''

''நான் ஒரு போதும்... உங்கள் விருப்பத்தை ஏற்கப் போவதில்லை...''

''அது... உன் இஷ்டம்! ஆனால்...'' என இழுத்தான்.

''ஆனால் என்ன?'' மிடுக்காய் கேட்டாள் அவள்.

''பாவம்... உன் சின்னக்கா! உன் பிடிவாதத்திற்கு வீணாக பலியாகப் போகிறாள். கிடைக்க இருக்கும் நல்ல வாழ்க்கையை இழக்கப் போகிறாள்...''

''அடடா... நன்றாகத்தான் கண்ணீர் வடிக்கிறீர்கள்... நீலிக் கண்ணீர்!'' அவள் கத்தினாள்.

''எனது கண்ணீர் நீலிக் கண்ணீர்தான்! ஆனால் நிஜமாகவே கண்ணீர் வடிக்கப் போவது நீயும் உன் சின்னக்காவும் தான்...'' என்றவன் கூடவே, ''பார், உனக்கு யோசிக்க இன்னும் மூன்று மணி நேரம் டயம் தருகிறேன். அதற்குள் யோசி. யோசித்து நல்ல பதிலைச் சொல். இல்லையென்றால் நாளை காலை கல்யாணம் நடக்காது. நின்று விடும்...!'' தெள்ளத் தெளிவாய் சொல்லிவிட்டு அத்தோடு பேச்சை முடிப்பவன் போல் அகன்றான் அவன்.



நிஜமாகவே திகைப்பில் ஒடுங்கிப் போய் விட்டாள் வாணி.

பாவி, என்ன ஒரு மிரட்டல்?

சின்னக்கா கல்யாணம் நடக்க வேண்டுமென்றால் அவள் அவனை கட்டிக் கொள்ள வேண்டுமாமே?

என்ன ஒரு அநியாயம்?

குழப்பம் நீங்காமல் வீட்டாரை தேடிப் போனாள். அவர்கள் எல்லோரும் மண்டபத்தின் ஒரு அறையில் குலுங்கக் குலுங்க சிரித்துப் பேசியபடி அவர்களுக்கு நடுவில் சின்னக்கா!

சின்னக்கா முகத்தில் அப்படியொரு களை. மணப் பெண்ணாகப் போகிறோம் என்கிற குஷி! இதுவரை இப்படியொரு மகிழ்ச்சியை வாணி அவளிடம் கண்டதில்லை!

எவ்வளவு நாட்களுக்குப் பிறகு அவள் குடும்பமே குதூகலமாய் சந்தோஷமாய் இருக்கிறது. அவள் மட்டும் போய் விஷயத்தைச் சொன்னால்... என்ன ஆகும்?

அப்படியே இடிந்து போய் விடுவார்களே!

சின்னக்காவும், ''இதுவெல்லாம் நமக்கு சரிப்பட்டு வராது. எனக்கு கல்யாணமே வேண்டாம்!'' என எழுந்து விடுவாளே!

என்ன செய்வது?

மறுபடியும் தீவிர யோசனை தாக்க அங்கிருந்து பின் வாங்கினாள் வாணி.

இரண்டடி எடுத்து வைத்திருப்பாள்.

பின்னால் கனைப்புச் சத்தம். பார்த்தால் பொன்னுசாமி புரோக்கர்.

அவரும் கவலையோடு வாணியை நெருங்கினார்.

''நீங்களே சொல்லுங்கள் ஐயா... என்ன ஒரு அநியாயம்...'' என்றபடி திவாகரன் சொன்ன விஷயங்களை ஆரம்பித்தாள் வாணி.

பொறுமையாய் கேட்ட அவரும் திகைப்பாய் நெற்றியைச் சுருக்கினார். ''என்ன... நீ அவரை மணந்து கொள்ள வேண்டுமா? புதுமையாய் இருக்கிறதே!'' வியந்தவர் அதே யோசனையோடு, நீ என்னம்மா முடிவெடுத்திருக்கிறாய்?'' என்றார்.

வாணி உதடுகளைப் பிதுக்கினாள். ''ஒன்றும் எடுக்க முடியவில்லை. சின்னக்காவின் கல்யாணம் நின்று போய் விடுமோ... என்று பயமாய் இருக்கிறது...'' என்றாள் கவலையோடு.

பொன்னுசாமி ஓரிரு நிமிடங்கள் அமைதியாய் சிந்தனை வயப்பட்டவர் தெளிந்தவர் போல் நிமிர்ந்தார்.

''ஆனால் ஒன்று... வாணிம்மா... அந்த திவாகரனையும் சிறு வயது முதல் எனக்குத் தெரியும்... நல்ல மனிதர். கடும் உழைப்பாளி. சுயமாய் தொழில் தொடங்கி தனது குடும்பத்தை ஒரு நல்ல நிலைமைக்கு கொண்டு வர முயற்சிக்கிறவர்... இன்னும்...''

வாணி குறுக்கிட்டாள். ''ஆனால் பெரும் பணத்தாசை பிடித்தவராய் இருக்கிறாரே...?''

பொன்னுசாமி மறுப்பாய் தலையசைத்தார்.



''அதை விடும்மா...! பணம் அவர்களுக்கு எதற்காகவாவது அவசரமாய் தேவைப்பட்டிருக்கலாம். ஆனால் அவரே பணம் இல்லாவிட்டால் இன்னொரு வழி என ஒன்றைச் சொல்லியிருக்காரே...?'' என்றார்.

''பணம் இல்லாவிட்டால் நான் அவருக்கு கழுத்தை நீட்ட வேண்டுமாம். அவரது மனைவியாக வேண்டுமாம். என்ன ஒரு திமிர்? என்ன... ஒரு... ஆசை?'' வாணி பற்களைக் கடிக்க... பொன்னுசாமி சிரித்தார்.

''நீ... மனைவியானால்தான் என்ன?'' என்றார்.

வாணி திடுக்கிட்டுப் பார்த்தாள்.

''என்ன சொல்கிறீர்கள் ஐயா?''

''உண்மையைத்தான் சொல்கிறேன். நீ அவரை கட்டிக் கொண்டால்தான் என்ன?'' என்றார்.

''ஐயோ... அவரையா...? எவ்வளவு மோசமானவர்... கல்யாணத்தை இரக்கமில்லாமல் நிறுத்தப் பார்க்கும்... கொடியவர்... எல்லாவற்றுக்கும் மேல்... என்னை மிரட்டியே பணிய வைக்கப் பார்க்கும் சுயநலம் பிடித்தவர்...''

அவள் சொல்லச் சொல்ல பொன்னுசாமி மறுபடி சிரித்தார். ''நீ நினைப்பது முழுவதும் தவறு அம்மா. அந்த திவாகரனும் உன்னைப் போலவே குடும்பப் பொறுப்புள்ள பாசக்காரர்தான். அவரை எனக்கு நன்கு தெரியும். தைரியமாக நீ அவரைக் கட்டிக் கொள்ளலாம்...'' என்றபடி அவர் விவரித்துச் சொல்ல சொல்ல வாணியால் எதுவும் பேச முடியவில்லை.

மேலும், ''சின்னக்காவுக்கு சரியான மாப்பிள்ளை அந்த சரவணன்தான். அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை

கிடைக்கப் போகிறது. கூடவே நீயும் அவளுக்கு துணையாய் ஒரே வீட்டிற்கு மருமகளாக போகப் போகிறாய். அதிர்ஷ்டம் தானே?'' என்றார்.

என்னென்னவோ பொன்னுசாமி எடுத்துச் சொன்னார். அவர்களது குடும்பச் சூழ்நிலையை, நிலைமையை புரிய வைத்தார்.

கடைசியில் பலியாடு போல் வேறு வழியில்லாமல் தலையசைத்தாள் வாணி.

# 7

வாணி கல்யாணத்திற்கு சம்மதித்ததுதான் தாமதம் மின்னல் வேகத்தில் காரியங்கள் நடைபெற ஆரம்பித்தன. மண்டபத்தில் மணமேடை பக்கத்திலே இன்னொரு மேடை வாணிக்காக உருவானது.

ஏற்கனவே தரகர் சொன்னபடியே திவாகரன் சிறுவயதிலேயே பெற்றோரை இழந்தவன். தூரத்து மாமா அரவணைப்பில் படித்து தானே ஒரு தொழிலை கற்று உருவாக்கி சம்பாதிக்க ஆரம்பித்தவன். உலகம் அறியா அப்பிராணியாய் வளரும் அண்ணனை வேலைக்கு எங்கும் அனுப்பாமல் தன்னுடனே பாசமாய் வைத்து கவனித்து வருபவன்.



வாணிக்கு திவாகரன் தாலி கட்டுவதற்கு முன் இவ்வளவு விஷயங்களே அவனைப் பற்றி தெரிந்திருந்தன. அவள் அரை மனதுடனே கல்யாணத்திற்கும் சம்மதித்திருந்தாள்.

அவளைத் தவிர பெரியக்கா, அம்மா, குட்டித் தங்கை என எல்லோருக்கும் சந்தோஷம்! சின்னக்கா அவளும் தன்னுடன் ஒரே வீட்டிற்கு மருமகளாய் வருவதையறிந்து குதி போத குஷியாகி விட்டாள்.

''நம்ப முடியவில்லையே... எப்படி... எப்படியக்கா? என வாய் பிளக்கத்தான் செய்தாள்.

அதற்குள் அவளும் திவாகரனின் அண்ணனான மாப்பிள்ளை சுந்தரத்தை மண்டபத்தில் பார்க்க நேர... அவளுக்கும் பிடித்துப் போயிற்றாம்,

வாணிக்குத்தான் உள்ளூர கலக்கமாகவே இருந்தது.

அதிலும் கல்யாணச் சடங்குகளில் எதுவுமே நடக்காதது போல் திவாகரன் பல்லை இளித்துக் கொண்டு நடமாட அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது.

''அவளைப் பார்த்தானாம். பிடித்துப் போயிற்றாம். கட்டிக் கொள்ள நினைத்தானாம். அதையே தனது நிபந்தனையாகவும் ஆக்கி விட்டானாம்....!''

கூசாமல் கடைசியாய் அவன் அவளைப் பார்த்துச் சொன்ன வார்த்தைகள் அவள் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

பாவி. கடைசியில் சின்னக்காவின் கல்யாணத்தை நிறுத்தி விடுவேன் என மிரட்டியே அவளை சம்மதிக்க வைத்து விட்டானே?

எப்படிப்பட்ட அயோக்கியனாய் இவன் இருக்கக் கூடும். இவனுடன் எப்படி வாழ்க்கை நடத்துவது?

மனம் நடக்கும் சடங்குகள் எதிலும் லயிப்பில்லாமல் கேள்விகளை எழுப்பி திணறடித்துக் கொண்டிருந்தது.

குனிந்தாள். நிமிர்ந்தாள். யார் யாரோ கூட்டத்தில் சொன்னபடியெல்லாம் கேட்டாள். மாலை மாற்றினாள். மங்கல ஒலி ஒலிக்க திவாகரன் அவள் கழுத்தில் தாலி கட்டி மூன்று முடிச்சு போட்ட போது தான் முழு உணர்வும் அவளுக்கு வந்தது.

தாலி கட்டிய கையோடு குறும்பு பொங்க திவாகரன் மெல்ல விரல்களால் அவள் இடுப்பை யாருமறியாமல் கிள்ளிய போது அவள் முறைக்கவே செய்தாள்.

அந்த முறைப்பும் உள்ளுக்குள் கொதிப்பான மன நிலையுமாகவே சடங்குகள் முடியும் வரை இருந்தாள். அவ்வளவு கொதிப்பிலும் அவளுக்கு ஆறுதலைத் தந்தது சின்னக்கா லட்சுமியின் சிரிப்பு தான்!

அப்படியொரு புன்னகையை இது வரை அவள் அவளிடமிருந்து வெளிப்பட்டு பார்த்ததில்லை. ஆனந்தச் சிரிப்பு என்று கூட சொல்லலாம். தனது மணக்கோலத்தையும் பக்கத்தில் நிற்கும் மாப்பிள்ளையும் நொடிக்கொருதரம் நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டு அவள் வெளியிடும் அந்த நெகிழ்ச்சியான சிரிப்பு... அந்த ஒன்றுக்காகவே எந்த ஒரு இடியையும் பாதிப்பையும் தாங்கிக் கொள்ளலாம் என நினைத்தாள் வாணி.

இதன் மூலமாக வெள்ளேந்தியான அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை கிடைத்தால் சரி... என நிம்மதியும் கொண்டாள்.



ஆனால் திவாகரன் அவனது நண்பர்கள் வரும் போதும் சரி மற்ற நேரங்களிலும் சரி, ''எல்லோரும் உன்னைப் பார்க்கிறார்கள். ஏன் இறுக்கமாய் இருக்கிறாய்? புன்னகையோடு இரு!'' என்று கிசுகிசுத்தது எரிச்சலைக் கிளப்பினாலும் அடக்கிக் கொண்டு மற்றவர்களுக்காக செயற்கைப் புன்னகையை புரிந்தாள்.

ஒருவாறாக சடங்குகள் எல்லாம் முடிந்து இரவு வந்தது. முதலிரவு!

சின்னக்கா லட்சுமி பால் சொம்புடன் வெட்கமும் ஆயிரத்தெட்டு நெளிப்புகளுமாய் எதிர் ரூமினுள் நுழைந்தாள்.

அவளுக்கு நேர் எதிர் ரூம் வாணிக்கு!

அவள் எவ்வித உணர்வுமின்றி ரூமில் அதே போல பால்சொம்புடன் நுழைந்த போது படுக்கை மெத்தையில் உட்கார்ந்தபடி திவாகரன் காத்திருந்தான்.

''பால் குடிக்கவெல்லாம் நேரமில்லை. உன்னிடம் நிறைய பேச வேண்டும்...'' என்றான் எடுத்த எடுப்பில்.

அவள் அலட்சியமாய் முகம் வெட்டினாள். ''பேச என்ன இருக்கிறது? வெற்றிகரமா பிளான் போட்டு உங்கள் மிரட்டல் திட்டத்தை நிறைவேற்றி விட்டீர்கள் தானே...?'' என்றவள் விடாது, ''அதான் பார்த்தேனே... மாப்பிள்ளை கோலத்தில்... முகம் வெடித்து விடும் இளிப்புடன் பல்லைக் காட்டிக் கொண்டு இருந்தீர்களே... இப்போது உங்களுக்கு திருப்திதானா?'' என்றாள்.

திவாகரன் மெல்ல கட்டிலை விட்டு எழுந்து நடந்தான். கைகளை கட்டிக் கொண்டான். ''என் நிலையையும் கொஞ்சம் புரிந்து கொள் வாணி...'' என்றான்.

''அப்படி என்ன உங்கள் நிலை?''

''நானும் இப்படியே இருந்து விட முடியுமா? எனக்கும் வயது ஏறிக் கொண்டு தானே இருக்கிறது?''

''அதற்காக?''

''நடந்ததை அப்படியே சொல்லட்டுமா?''

''நீங்கள் என்ன சொன்னாலும் காது கொடுத்து கேட்கத்தானே மூன்று முடிச்சு போட்டு கூட்டி வந்திருக்கிறீர்கள்? சொல்லுங்கள்! கேட்டுத் தொலைக்கிறேன்!'' என்றாள் வெறுப்பாய்.

அவளது எரிச்சலை புரிந்து கொண்டாலும் புரியாதது போல் அவன் விளக்க ஆரம்பித்தான்.

''வாணி, முதலில் எனக்கு திருமணத்தில் இப்போது என்ன அவசரம்? என்று நாட்டமில்லாமல்தான் இருந்தது. ஆனால் அன்று என் சகோதரனுக்காக திருமணப் பேச்சுகள் நடந்த போது தான் தற்செயலாய் உன்னை பார்த்து விட்டேன். உனது அபார அழகு... அந்த நான் என மனதுள் நினைத்து கனவு கொண்டிருந்த ஒரு வித 'தேவதை' த் தனம் உன்னிடம் ஒளிருவதைக் கண்டேன். நீ தான் நான் தேடிய தேவதை. எனக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை... என அப்போதே முடிவு செய்து விட்டேன்...''

சொல்லியவன் அவளிடம் எந்த சலனமும் இல்லாதது கண்டு, ''என்ன கேட்கிறாயா? என்றதும், ''என்ன நீங்கள் சொல்லும் ஒவ்வொரு வார்த்தைக்கும் 'உம்' கொட்டி தொலைக்க வேண்டுமாக்கும்? சொல்லுங்கள்?!'' என்றாள் பொறுமை இழப்பது போல்.

அவன் ஏதோ சொல்ல, மறுபடியும் முகம் வெட்டினாள் வாணி.



''ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். என்னை நிறுத்தி விடுவேன் என மிரட்டி மணந்தவர் நீங்கள். விதியே என கழுத்தை நீட்டியவள் நான். எனக்கு உங்களிடம் எந்த பற்றோ விருப்பமோ கிடையாது. இல்லாத ஒன்றை திடீரென என்னுள் வரவழைக்கவும் எனக்குத் தெரியாது. அதனால் என்னால் உங்களுக்கு மனைவியாய் ஆகிவிட முடியாது... ஏன் அப்படி நடிக்கக் கூட என்னால் முடியாது...'' என்றாள் வெறுப்பாய்.

பதிலுக்கு அவனோ, ''கொஞ்சம் நன்றாக யோசி வாணி. எது எப்படியோ நாம் இன்று கணவன் மனைவியாக ஆகிவிட்டோம். இனி பழைய விஷயங்களை மறந்து புதியதாய் ஒரு வாழ்க்கை தொடங்குவோம்...'' என அவன் சொல்லி முடிப்பதற்குள்.

''எனது வாழ்க்கை முடிந்து விட்டது...'' என்றாள்.

''வாணி, நீ வீணாக பிடிவாதம் பிடிக்கிறாய். நீ நினைப்பது போல் நான் ஒன்றும் கொடூரனோ கொடுமைக்காரனோ அல்ல...''

''பின் யாராம்? ஒரு பெண்ணை மிரட்டி உருட்டி பலவந்தப் படுத்தாத குறையாய் தாலி கட்டிக் கொள்வதற்குப் பெயர் எதுவாம்? பெரிய வள்ளல் பரம்பரையா... இல்லை பரோபகாரியா...?''

''நான் சராசரி... மனுஷன்... உன் மேல் அதீதமாய் ஆசைப்பட்டவன்... அதைத் தவிர நான் வேறு எதுவும் தவறு செய்யவில்லை...''

அவன் திரும்பத் திரும்ப அதையே சொல்ல எரிச்சல் மூண்டவளாய், ''என் மீது ஆசைப்பட நீங்கள் யார்?'' என்றாள்.

அவனோ சட்டென சிரித்தபடி, ''பார்த்தால் தெரிய வில்லை? ஓர் ஆண்மகன்.... அந்தத் தகுதி போதாதா?'' என்றவன் அவள் தன்னையே முறைப்பாய்ப் பார்த்து, ''நீயும் நன்றாகத் தான் பாரேன்... எப்படி வாட்ட சாட்ட மாய்... திடகாத்திர உருவத்துடன்... ஏன் என் முகத்தில் ஒரு கம்பீரம் கூட லேசாய்... ஒரு இத்தனூண்டு சதவீத மாவது எட்டிப் பார்க்கவில்லை?'' என்றான் வேண்டு மென்றே சீரியஸாய் முகத்தை வைப்பது போல்.

அவளுக்கு சட்டென சிரிப்புதான் வந்தது. ஆனாலும் அவன் முன் சிரித்துவிடக் கூடாது என உதடுகளை இறுக்கிக் கொண்டாள்.

அதை குனிந்து உற்றுக் கவனித்தவன், '' வாய் விட்டு சிரிப்பதற்கு கூட கஞ்சத்தனமா? சிரித்து விடு! இல்லா விட்டால் நான் பிறகு நிறைய ஜோக்குகளை அடிக்க ஆரம்பித்து விடுவேன்..'' என்றான் மிரட்டுவது போல்.

''ஜோக்... அடிப்பீர்களா...? பதிலுக்கு நானும் அடிக் கிறேன்...'' என்றாள் கைகளை தூக்கியவாறு.

''ஆஹா...! இது தான் சரியான ஜோக்! உடம்பே குலுங்குகிறது...!''

பெரிய ஹாஸ்யத்தை கண்டது போல் கடகடவென சிரிக்க ஆரம்பித்தான் அவன்.

''என்னவும் போங்கள்! எனக்கு தூக்கம் வருகிறது...'' என்றபடி விரிப் பொன்றை எடுத்து கீழே தரையில் விரித் தாள். தலையணையை எடுத்து போட்டுக் கொண்டு படுக்கப் போன போது,

''நீ மெத்தையில் படுத்துக் கொள். நான் அங்கு படுக் கிறேன்...'' என்றான்.



''இந்தக் கரிசனம் ஒன்றும் என்னிடம் வேண்டாம். பேசாமல் தூங்குங்கள்!'' என்றபடி மேற் பேச்சுக்கு இடம் வைக்காமல் கண்களை இறுக மூடிக் கொண்டு எதிர் புறமாய் திரும்பிப் படுத்துக் கொண்டாள் அவள்.

# 8

மறுநாளும் அதே போல் ஒரு சம்பவம் வாணிக்கு நடந்தது. அன்று படுக்க வந்தவன் பார்வையிலே அவன் ஒரு வித திட்டத்துடன் இருப்பது வாணிக்கு புரிந்து விட்டது.

எப்படியும் அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்பது போல் நடமாடினாள்.

மாலையைத் தாண்டி இரவை நெருங்குகையிலே அவன் தேவையில்லாமல் அவளைப் பார்த்து இளிப் பதை உணர்ந்து உடன் புரிந்து கொண்டாள் அவள்.

கூடவே தெளிந்தும் கொண்டாள். என்ன ஆனாலும் சரி. உடன்படக் கூடாது! அவள் மட்டும் உடன்பட்டு விட்டால் பின் காலம் முழுவதும் அடிமை போல் அவன் காலடியில்தான் கிடக்க வேண்டும். பின் வேறு வழியே இருக்காது என்ற பயம்தான் கிலியாய்த் தோன்றி அவளைப் பிடித்து ஆட்டியது.

அதனாலே வேலைகளை முடித்து பால் தம்பளருடன் ரூமிற்குள் நுழைந்தவள் அவன் முகம் பாராமலே, பாலை நீட்டினாள். கட்டிலில் அவனுக்கு சில அடி தூரமாகவே உட்கார்ந்தாள். வேண்டுமென்றே முகத்தை இறுக்கமாக்கி உம்மொன்றும் வைத்துக் கொண்டாள்.

அவன் திவாகரன் மட்டும் லேசுப்பட்ட ஆளா? யம காதகனாயிற்றே!

அவள் செய்கையிலே அவளின் மன ஓட்டத்தை யூகித்து விட்டவன் அவள் எதிர்பார்க்காத கேள்விகளை வீசி அவளை அதிர வைக்க ஆரம்பித்தான்.

''என்ன... ஒரே... அசதி... இன்று தூக்கமாய் வர ஆரம்பித்திருக்குமே...?'' என்று ஆரம்பித்தான்.

சட்டென தன் நினைப்பை அவன் படித்தது கண்டு திடுக்கிடவே செய்தாள்.

''அது... இல்லை... இல்லை...'' என கொஞ்சம் தடுமாறி வாய்குளறியவள், பின் இவனிடம் என்ன பயம்? எதற்கு மறைக்க வேண்டும்? என்ற வேகத்தில், ''கொஞ்சம் தூக்கமும் வருகிறது. தூங்க வேண்டும்...'' என்றே முடித்தாள்.

''தாராளமாய்த் தூங்கு...'' சட்டென சொல்லியபடி கைகளை நீட்டி படுக்கையை விசிறிக் காட்டினான் அவன்.

''உங்களுக்கொன்றும் இல்லையே...?''

''இல்லைதான்...'' என இழுத்தவன், ''என்ன உன்னிடம் ஒரு விஷயம் பற்றி பேசிக் கொண்டு இருக்கலாம் என்று பார்த்தேன்...'' என்றான் பீடிகையாய்.



''என்ன விஷயம்?'' என்றாள் அவள் சிறிதான ஆவல் தோன்ற.

''சொன்னால் உனக்கு ஆச்சரியமாய் இருக்கும்... நானா இப்படியெல்லாம பேசுகிறேன்... என்று வியப்படைவாய்...!'' என்றான் மறுபடியும் ஒரு பீடிகை போட்டான்.

''ம்ம்... சொல்லுங்கள்...'' என மறுபடியும் அவள் ஆவலாய் கண்கள் விரிய கேட்ட போது அவனும் அவனது கண்களை முழுமையாய் விரித்து மேலிருந்து கீழ் வரை அவளை ஒரு பார்த்தான்.

''உன் அழகைப் பற்றி...! உனது அழகை நான் ரஸிப்பது.... பற்றி...! எனது மதிப்பீடு பற்றி...!''

அவன் அவளை - லேசான வெட்கச் சிரிப்புடன் சொல்லியபடி அவள் கருவிழிகளை ஊடுருவது போல் உற்றுப் பார்த்தான்.

அவளுக்கோ ஆவல் அதிகரித்து. இவ்வளவு வாய் கிழிய மற்ற விஷயங்களைப் பேசுகிறவன் எல்லோரும் புகழும் அவளது அழகு பற்றி என்னதான் நினைப்பான்? நினைத்திருக்கிறான்? இல்லை... அதற்கும் வேதாந்தம் போல் ஒரு கருத்தைச் சொல்லி நியாயப்படுத்துவானா? என்னதான் சொல்கிறான்? பார்ப்போமே!

ஆர்வமாய், ''சொல்லுங்கள்...! சொல்லுங்கள்!'' என்றாள் அவள்.

''உனக்கு தூக்கம் வருகிறது என்று சொன்னாயே...?'' என அவன் மறுபடியம் இழுத்து பல்லவி பாட அவனும்

விடாமல், "அதெல்லாம் வரும் போது வரட்டும் சொல் லுங்கள்...!" என்றாள்.

அவன் தொண்டையை செருமி சரி செய்வது போல் வைத்து விட்டு பேச்சை ஆரம்பித்தான், "நான் முதலில் ரஸித்தது, உன்னிடம் எனக்கு மிகவும் பிடித்தது எது தெரியுமா?" என கேள்வி போல் கேட்டு விட்டு அவனே தொடர்ந்து, "உனது மருண்ட மான் விழியான அழகுக் கண்கள்...!" என்றான்.

"அதை பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் இப்போது இந்த நிமிடம் வரை தோன்றுகின்றது தெரி யுமா? அதற்குப் பின் அந்த உதட்டோர பளீர் மச்சம்.... நீ... புன்னகைக்கும் போது தெரிகிற அழகான முத்துப்பல் வரிசை... நெற்றியோரமாக ஸ்டைலாய் முன் வந்து புரள்கிற அந்த ஸ்ப்ரிங் முடி... செதுக்கி வைத்தாற் போலான உனது உடல் வாகு.... இன்னும்..."

இவன் ஏதோ ஒரு திட்டத்துடன் இப்படியெல்லாம் பேசி ஐஸ் வைக்கிறானோ... என்று சந்தேகமாய் அவ ளுக்குத் தோன்றினாலும், அவன் நேருக்கு நேராய் அப்படி புகழும் போது அவள் சிந்தை தடுமாறத்தான் செய்தது. அந்த பயத்திலே கன்னங்கள் சிவந்து குபீரென வெட்கம் வந்த போதும், கைகளை தூக்கி "போதும்! போதும்!" என்றாள்.

அவன் நிறுத்தினான்.

"என்ன சொல்ல வேண்டாமா? சொல்வதற்கு நிறைய இன்னும் வைத்திருக்கிறேன்..." என்றான் அவன் பீடிகைத் தூண்டிலை இன்னும் பலமாய் போட்ட வாறு.



"வேண்டாம், எனக்கு தூக்கம் வருகிறது..."

அவள் உள்ளூர ஆர்வம் கொண்டிருந்தாலும் பிடி வாதமாய் தலையை மறுப்புடன் அசைத்து படுக்கப் போனாள்.

மெத்தையில் அவனுக்கு பக்கமாய் ஒரு புறத்தில் படுத்து கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

அவன் அதையும் உற்றுப் பார்த்து விட்டு, "இப்படி கண்களை இறுக மூடி நீ தூங்கும் விதம் கூட அருமை யாய் அழகான குழந்தைத்தனத்துடன் இருக்கிறது.." என்றான்.

அவளால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை, கண் திறந்து சட்டென கலகலவென சிரித்தவள் மறுபடியும் இறுக்கமாகி கண்களை மூடிக் கொண்டாள்.

கண்களை அப்படி இறுக மூடி இருந்தாலும் அவன் இன்னும் தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப் பதை அவளால் உணர முடிந்தது.

'இனி என்ன திட்டம் வைத்திருக்கிறான்? இன்று என்ன திட்டம் போட்டாலும் சரி, அந்த 'முதலிரவு' பாச்சா அவளிடம் பலிக்காது, பலிக்கவே... பலிக்காது! நேற்று வரை எப்படி உருட்டி மிரட்டிப் பேசி நோகடித் தான், இன்று மட்டும் பல்லை இளித்துக் கொண்டு வந்தால் எல்லாம் சரியாகி விடுமா? கூடவே கூடாது...!'

அவள் இறுமாப்பாய் மனத்துக்குள் நினைத்த வேளையில் தான் அவன் சட்டென அதைச் செய்தான். மெல்ல அவள் பக்கம் வந்து தனது முகத்தை அவள் நெஞ்சுப் பகுதியில் பதிய வைத்துக் கொண்டான்.

திடுக்கிட்டுப் போன அவளிடம், ''கொஞ்சம் இப்படி முகம் வைத்து தூங்குகிறேன்... ப்ளீஸ்...'' என்றான் கெஞ்சலாய்.

அவள் முறைத்துப் பார்க்கவும், ''ஒரு குழந்தை நெஞ்சில் இன்னொரு குழந்தை தூங்குவதாக நினைத்துக் கொள்...'' என்று பெரும் அப்பாவி போல் முகத்தை வைத்துக் கொண்டு அவன் சொல்ல அவள் எழுந்த சிரிப்பை கட்டுப்படுத்த ரொம்பவே சிரமப்பட்டாள்.

அவள் பதிலுக்கு காத்திராமல் அவனும் அப்படியே அவளது நெஞ்சினில் முகத்தை வைத்து கண்களை மூடிக் கொண்டான்.

இது என்ன புது வகைக் கூத்து? என அவள் ஸ்தம்பித்துத்தான் போனாள். 'நெஞ்சினில் மன்மதன் போல அவன் படுத்துக் கொண்டு... அதனால் தவிப்பாய் தன்னுள் எழும் உணர்ச்சிகள்... ஐயோ... நம் திட்டம் எல்லாம் தவிடு பொடியாகி விடுமோ?' என முதல் முறையாய் அவள் பயந்தாள்.

ஆனால் நிமிடங்கள் கரைந்த போது அவனிடம் எந்த வித சலனமுமில்லாமல் ஏறக்குறைய அவன் தூங்குவது போலவே ஆகி விட்டான். அவள் தான் குபீரென எழுந்து ஆட்டம் போடமுயற்சித்த அத்தனை உணர்ச்சிகளையும் அடக்கி கட்டுப் படுத்தினாள்.

மேலும் ஐந்து நிமிடம் சென்றிருக்கும் அவன் தூங்கியே விட்டான். அவள் இப்போது நன்கு கண்களைத் திறந்து அவனை உற்றுப் பார்த்தாள்.



அவன் சொன்னது போலவே அவன் நிஜமாகவே ஆழ்ந்த உறக்கத்தில் குழந்தைத்தனம் பொங்க தூங்கிக் கொண்டிருந்தான். அவனது சுருள் முடி கலைந்து நெற்றியை மறைத்து நீள புருவங்களை தொட்டுக் கொண்டிருந்தது. இறுக்கமாய் செதுக்கப்பட்டது போன்ற உதடுகளில் அழுத்தம் தெரிந்தது. 'இவனும் நிஜமான அழகுதான்' என வியந்தவள், காதல் கொண்ட மனைவி என்றால் இந்நேரம் இப்படி நெஞ்சில் கவிழ்ந்திருப்பவனை அப்படியே கட்டிப் பிடித்து முத்தமாரி பொழிந்திருப்பாள். ஆனால்... ஆனால்... இப்போது... அவள் தன்னிலையை விட்டுக் கொடுக்கக் கூடாது. இந்தப் பிடிவாதக்காரனை மாற்ற வேண்டும்! அவனுக்கு அவள் பக்க நியாயங்களையும், அவன் சொன்ன சொல்லுக்கு அச்சுப் பிசகாமல் நடக்கும் அடிமை அல்ல என்பதை புரிய வைக்க வேண்டும்!

ஏதேதோ மனதில் நினைத்தவள் திரும்பவும் ஆழ்ந்து தூங்கும் அவனைப் பார்த்து இரக்கம் கொண்டாள். என்னதான் குரங்குத்தனம் பண்ணினாலும் நம் மீது அன்பு வைத்திருக்கத்தான் செய்கிறான்... என நினைத்தாள்.

இவன் நினைத்தால் கட்டியவள் தானே என முரட்டுத்தனம் காட்டியிருக்கலாம்... அவளும் அவனது வலுவான திடகாத்திரத்தின் முன் ஒடுங்கிப் போயிருப்பாள். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லையே...! அந்த வகையில் அவன் மென்மையானவன்தான்...! என அவனுக்காக நினைத்து பரிதாபப்பட்டவள் அதே பரிவுடன் தனது நெஞ்சினில் சாய்ந்திருந்தவனை கீழே விழுந்து விடாதபடி அவனது தோள்களை அணைத்துப் பிடித்தாள்.

அவள் தனது கரங்களால் அப்படி அவன் தோள்களை அணைத்துப் பிடித்ததுதான் தாமதம்... அது வரை தூங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்த அவன் குபீரென கண்களைத் திறந்தான். திறந்து... அவளை வேகமாய் அணைக்க ஆரம்பித்தான். ''இதற்காகத்தான் இவ்வளவு நேரம் காத்திருந்தேன் செல்லம்!'' என அவள் காதுகளில் அவன் முணுமுணுத்த போது, 'அடப்பாவி!' என அதிர்ந்து விட்டாள் அவள்.

# 9

**தி**வாகரன் அப்படி வாணி மேல் பாய்ந்து அணைக்க முடிந்தது எல்லாம் ஒரு கணம் தான். மறுகணமே ச்சீ... என்பது போல் அவனை உதறித் தள்ள நினைத்தாள்.

ஆனால் அவன் அணைத்தவன் அவள் அப்படி உதறித் தள்ளுவதற்குள் பிடியை தளர்த்தி அவளை விடுவிக்கவும் செய்தான்.

திகைப்பும் வெட்கமுமாய் அதிர்ந்தவளைப் பார்த்து,

''பயப்படாதே நான் ஒன்றும் அவசரப்படும் காமுகன் இல்லை. உன்னை பரிசோதிக்க ஒரு சின்ன சோதனை செய்தேன்...'' என்றான்.

''சோதனையா...?''



அவள் கேள்விக்கு வெகுவாய் தலையாட்டியவன், ''உனக்கு என் மீது ஒரு சின்ன இத்தனூண்டு துளி அன்பாவது இருக்குமா... என்று அறிந்து கொள்ள விரும்பினேன்... அதற்காகவே இந்த சின்ன டெஸ்ட்...'' என்றவன் தொடர்ந்து,

''கண்டு பிடித்து விட்டேன். உனக்கு என் மீது அன்பு இருக்கத்தான் செய்கிறது...'' என முடித்தான்.

'எல்லாவற்றையும் கண்டுபிடித்து விட்டானே..' என வெட்கத்தோடு குப்பென சிவந்த முகத்தை குனிந்து மறைத்தவள், ''நல்ல ஆராய்ச்சிதான்...!'' என்றாள் இகழ்ச்சியான குரலில்.

அவன் அவளையே விடாமல் ஒரு குறும்புப் பார்வை பார்ப்பது கண்டு எரிச்சலானவள், ''இது போன்று சின்னத்தனமான முயற்சிகளை இத்தோடு நிறுத்தி விடுங்கள்...'' என்றாள் கோபமாய்.

''உத்தரவு... மகாராணி...!''

போலியாய் கை கூப்பி சிரித்தான் அவன்.

அவளும் அதே கோபத்துடன் கட்டில் மெத்தை மேல் கிடந்த விரிப்பை எடுத்து தரையில் விரித்தாள். ஒரு தலையணையை எடுத்து போட்டபடி படுத்துக் கொண்டாள்.

தூங்குவது போல் கண்களை இறுக மூடிய போது அவன், ''இன்னொரு விஷயம்...'' என்றான்.

அவள் பேசாமல் இருக்கவும், ''உன்னிடம்தான் சொல்கிறேன்...'' என்றான்.

''காதைத் திறந்து தான் வைத்திருக்கிறேன். சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்...!'' என்றாள் சீற்றம் குறையாமல்.

ஒரு கணம் தன் உணர்ச்சிகளுடன் விளையாடி தன் நிலையை கண்டு பிடித்து விட்டானே என்று ஆத்திரம் மறுபுறம் தானும் பாவப்பட்டு அணைத்து பிடிப்பது போல செய்து விட்டோமே என்ற அசட்டுத்தனம் அவளை எரிச்சலாய் குடைநதது.

''உன் சின்னக்காவும் அண்ணன் சுந்தரமும் மகிழ்ச்சியாய் வாழ்க்கையைத் தொடங்கி விட்டார்கள் தெரியுமா?'' என்றான்.

''தெரியும்! அதற்கென்ன?'' என்றாள் அதே அழுத்தத்தோடு.

''உன் ஆசை அதுதானே...? அது தான் நிறைவேறி விட்டதே...''

''ஆசை நிறைவேறி விட்டது. ஆனால் ஆத்திரம் அடங்கவில்லை...'' என்றாள் மூச்சு வாங்க!

''ஓஹோ...!'' என்றவன், ''அந்த ஆத்திரம் எப்போது தான் அடங்கும்?'' என்றான் விடாப்பிடியாய்.

''சூரியன் என்று மேற்கில் உதிக்கிறதோ அன்று அடங்கும்...'' என்றாள் அவள் பதிலுக்கு.

''அவ்வளவு ஆத்திரமா என் மேல்...?''

''ம்ம்...'' என தலையசைத்தவள் அகே கோபத்தில் கைகளை விரித்துக் காட்டி, ''விட்டால் கொலை கூட



செய்து விடுவேன். சட்டத்திற்காக பயப்படுகிறேன்...'' என்றாள் தன் பேச்சை உணராமலே.

திவாகரன் அதிர்ந்து போனவனாய் அவளைப் பார்த்தவன், ''அப்படி கொலை செய்யும் அளவுக்கா தவறைச் செய்து விட்டேன்...?'' என்றவன் தொடர்ந்து ''ஆனாலும் வாணி நீ கோபத்தில் இப்படியெல்லாம் பேசக்கூடாது. கொஞ்சம் இனிமையாய் பேச வேண்டும்...'' என முடித்தான்.

ஆத்திரத்தில் பேசிய தன் தவறை உணர்ந்தாலும் உணராதவள் போல், ''நான் இப்படித்தான் பேசுவேன். ஒரு பெண்ணை மிரட்டி உருட்டி கட்டாயமாக மணந்து அவளது எதிர்காலத்தை இருளடிக்க நினைப்பவர்களிடம் இப்படித்தான் பேச முடியும்...'' என்றாள்.

''என்ன உன் எதிர்காலத்தை நான்... நான் இருளடிப்பேனா...? என்ன சொல்கிறாய் நீ?'' என அவன் கேட்டதற்கு அலட்சியமாய் தோள்களை குலுக்கினாள்.

''என் கனவுகளை எல்லாம் சிதைத்து விட்டீர்கள்...'' என்றாள் சுருக்கமாய்.

''என்ன கனவு வைத்திருந்தாய்?''

''கனவுகள் கலைந்த பின் கலைத்தவனிடமே போய் சொல்லி என்ன லாபம்?'' என எதிர்கேள்வி கேட்டவள் அவன் மீண்டும் எதோ பேச்சை ஆரம்பிப்பதற்குள்,

''எனக்கு தூக்கம் வருகிறது. தூங்கப் போகிறேன்'' என திரும்பிக் கொண்டாள். போர்வையை இழுத்து முகம் வரை மூடியும் கொண்டாள்.

வாணியின் நிலைதான் திவாகருடன் இப்படி எதிரும் புதிருமாய் மோதலுடன் தொடர்ந்து கொண்டிருந்தது. அதற்கு நேர்மாறாய் சின்னக்கா லட்சுமி தனது கணவன் சுந்தரத்திடம் நெருக்கம் கொண்டிருந்தாள்.

முதலிரவு முடிந்த மறுதினமே வாணியிடம் வந்து வெட்கமில்லாமல், ''நேற்று ரொம்ப நேரம் விடிய விடிய பேசிக் கொண்டிருந்தோம். அவர் ரொம்ப நல்லவர் வாணி. அவருக்கு என்னை ரொம்பவும் பிடித்திருக்கிறதாம்...'' என்றவள் முகம் முழுவதும் சிவப்பேறியவளாய், ''கடைசியில் என்னை அவர் என்ன தெரியுமா?'' என கேள்வியில் முடித்தாள்.

''என்ன செய்தார்?'' என்றாள் வாணி எவ்வித உணர்வுமின்றி.

''என்னை இறுக கட்டிப் பிடித்துக் கொண்டார்...'' என்று சொல்லியபடி குடுகுடுவென ஓடினாள் அவள்.

இதுவரை சின்னக்காவிடம் பார்த்திராத மகிழ்ச்சியையும் துள்ளலையும் கண்ட வாணி சந்தோஷமே கொண்டாள். எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்த அவளுக்கு கடவுளின் அருளினால் இப்போதாவது ஒரு நல்லது அமைந்தது எண்ணி நிம்மதியும் கொண்டாள்.

மேலும் அவள் பார்த்த வகையில் சுந்தரமும் ஒரு அதிர்ந்து பேசத் தெரியாத அப்பிராணி. அவளிடம் ரெண்டு வார்த்தை நேருக்கு நேர் பார்த்துப் பேசவே வெட்கப்பட்டான்.

சிறுவயது முதல் அவனது அப்பாவி சுபாவத்திற்காகவே திவாகரன் அவனைத் தன்னுடன் தன் கண்காணிப்பிலே வைத்து வளர்த்து வருவது புரிந்தது.



திவாகரனின் கிரானைட் தொழிலில் முக்கிய வியாபார விஷயங்களை அவன் திவாகரனே கவனிக்க அண்ணன் சுந்தரம் குடோனில் உள்ள கிரானைட் இருப்புகளை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தான்.

தன் வேலையுண்டு.... வேலை முடிந்தால் வீடு, பின் கோயில்... பக்திப் பிரசங்கம்... என சுந்தரம் தனக்கென்று ஒரு வட்டம் விருப்பம் வைத்திருந்தான்.

சின்னக்கா லட்சுமியின் சுபாவம் ஏறக்குறைய அது போலவே என்பதால் இருவருக்கும் நன்கு ஒத்துப் போயிற்று. கல்யாண முடிந்த பத்து பதினைந்து தினங்களிலே இருவரும் மனம் மொத்த தம்பதிகளாய் மாறிவிட்டனர்.

அதை விட எப்போதும் அளந்து பேசுபவள் போல் சிறு வயது முதல் இருக்கும் சின்னக்கா... கல்யாணத்திற்கு பின் லொடலொடவுக்கு மாறிவிட்டாள். சுந்தரமும் அவளும் அப்படி என்ன தான் பேசுவார்களோ... மொட்டை மாடியில் வீட்டு முற்றத்தில், முன் புறத் திண்ணையில் என விழுந்து விழுந்து பேசினர்.

அதைக் கண்டு வியந்து அதிசயித்தவளிடம் திவாகரன் சுட்டிக்காட்டி, ''பார்! மனமொத்த தம்பதிகள்!'' என்றான்.

''ஆமாம்...'' என்றாள் அவள் தலையசைப்புடன்.

''நாமும் அப்படி எப்போதுதான் ஆவது?'' என அடுத்த கேள்வியை வீசியதும், ''அது இந்த ஜென்மத்தில் இல்லை!'' என வெடுக்கென அவளிடமிருந்து பதில் வந்தது.

''அப்படியானால் அடுத்த ஜென்மத்தில் உண்டா?'' என்றான் கேலியாய்.

திரும்பி அவனை முறைத்தாள் வாணி.

''என் அண்ணன் கொடுத்து வைத்தவன்!'' என்றான் திவாகரன் பெருமூச்சு விட்டபடி ஒரு வித அலுப்புடன்.

''என் சின்னக்காவும் கொடுத்து வைத்தவள்தான்!'' என்றாள் வாணி அவனைப் போலவே செய்தபடி.

திவாகரன் திரும்பி நின்று அவளையே நேருக்கு நேராய் உற்றுப் பார்த்தான்.

''வாணி... உன்னிடம் ஒரு கேள்வி...'' என்றான்.

''கேளுங்கள்...'' என்றாள் வாணி எவ்வித உணர்ச்சியு மில்லாமல்.

''உன் விஷயத்தில் நான் பொறுமையை இழந்து விட் டால் எப்படியிருக்கும்?'' என்றான்.

''எப்படியிருக்கும் என்றால்...?''

''அதாவது நான் கொஞ்சம் முரட்டுத்தனத்தை காண் பித்தால்...'' என விளக்கினான் திவாகரன்.

''என் கைகள் ஒன்றும் பூப்பறித்துக கொண்டிருக்காது. அவைகளும் தன் கைவரிசையைக் காட்டும்...'' என்றாள் பதிலடியாய்.

''அவ்வளவு தைரியசாலியா நீ?''

அவன் கேட்க முகம் வெட்கிப் பார்த்தவள் ''தைரிய சாலி அல்ல. அவ்வளவு தூரம் உங்களை வெறுக்கிறேன்...!'' என்றாள் அமைதியாக.



அந்த பதிலில் திவாகரன் நிஜமாகவே அதிர்ந்து போய் விட்டான். சட்டென கூம்பிப் போன அவனது முகமே அதை பறை சாற்றியது.

இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, ''உன்னை மனதார விரும்பினேன். விரும்புகிறேன். அது அவ் வளவு பெரிய குற்றமா?'' என்றான் ஒரு விதமான தொனி யில்.

அதற்குப் பதில் சொல்லாமல் மறுபடியும் முகம் வெட்கியவாறு விறுவிறுவென அங்கிருந்து அகன்றாள் வாணி.

அன்று இரவு வாணி தூக்கமில்லாமல்தான் புரண் டாள். படுக்கையில் எதிர் எதிர் துருவங்கள் போல் திவா கருடன் தினம் தினம் படுப்பது அவஸ்தையாக இருந்தது. வாழ்நாள் முழுவதும் இதே... கோலம் தொடருமா? என்ற பயமும் எழுந்தது.

மேலும் இந்த அவஸ்தை தனக்கு மட்டுமல்ல அவ னுக்கும் தானே என்ற உணர்வும் அவளுள் ஓடிற்று.

தினம் சண்டைக்கோழி போல் அவனுடன் வார்த்தை களால் மோதுவதும் சண்டையிடுவதும் இன்னும் எத் தனை நாளைக்கு? என்ற சலிப்பும் அவளுள் உண்டா யிற்று.

கூடவே திவாகரன் ஒரு வித கெஞ்சல் தொனியில், 'உன்னை மனதார விரும்பியது தவிர நான் செய்த தவறு தான் என்ன?' என்று கேட்டதும் அவளை திகைக்க வைத்தது.

அவன் சொல்வது உண்மை தானே? அவளை விரும் பியது தானே அவன் செய்தது? அவளை எப்படியும் தன்

மனைவியாக்கி விட வேண்டும் என்ற மோகத்தினால் தானே அவளை மிரட்டி பணியவும் வைத்தான்? அவள் மீது ஆசைப்பட்டதினால் அவன் வகுத்துக் கொண்ட வன்முறை தானே அது?

மனம் கேள்விகளை எழுப்பிய போதும் அதை திட மாக மறுத்தாள் வாணி.


அதற்காக? இப்படியா ரவுடித்தனத்துடன் கொடூரமாய் நடந்து கொள்வது? காயை தடியால் அடித்து பழுக்க வைப்பது போன்ற செயல் அல்லவா இது?

ஆசைப்பட்டால் விரும்பினால் முறைப்படி பேசி அவள் சம்மதம் பெற முயன்றிருக்கலாம்... முயற்சி செய் திருக்கலாம்... அதை விட்டு விட்டு அவளுக்கென்று ஒரு மனம் இருக்கும் என்பதை கொஞ்சமும் புரிந்து கொள் ளாது அடாவடித்தனமாய் அவளது சூழ்நிலையைக் காட்டி மிரட்டி... உருட்டி... அப்போது... இந்த திவாகரன் கண்களை உருட்டி... உருட்டி பேசிய அந்த வில்லத் தனம்... அந்த விரட்டல் எல்லாம் அவள் நெஞ்சினில் ஆழமாய் பதிந்து விட்டனவையே...! மறுக்கக் கூடிய வைகளா அவைகள்...! அப்படிப்பட்ட வில்லன் ஒருவன் இன்று கணவனாகி விட்டால் எல்லாம் சரியாகி விடுமா? அப்படி அன்று நெஞ்சு துடிக்க வைத்தவன் இன்று தாலியை கட்டி பழையவைகளை மறந்து விடு... என் றால்... எல்லாவற்றையும் மறந்து விடுவதா? அல்லது தாலி கட்டிய கணவனாய் அவன் ஆகிவிட்டான் என மன்னித்து விடுவதா?

இரண்டும் ஒரு போதும் என்னால் முடியாது...! ஆத் திரமாய் தனக்குத்தானே பேசிக் கொண்டு பற்களைக் கடித்தாள் வாணி.



# 10



இருவாரம் சென்று விட்டது. வாணி கொஞ்சமும் மாறவில்லை. சீறிப் பாயும் புலியாகவே திவாகரனிடம் நடமாடினாள். அவன் எது சொன்னாலும் கோபப்பட் டாள்.

அவன் மிரட்டல்காரன் மற்றவர் உணர்வுகளை புரிந்து கொள்ளாத ரவுடி என்றே அவள் மனதில் பதிந்து விட் டது.

ஆனால் திவாகரன் அதற்கு நேர்மாறாய் நகைச்சுவை உணர்வுடன் இருந்தான். அவள் சீறினாலும் கோபப் பட்டாலும் அதிலும் ஹாஸ்யத்தை ஏற்படுத்தி சிரிக்கவே செய்தான்.

நேற்று கூட இப்படித்தான் அவளை ஷாப்பிங் அழைத் துச் செல்கிறேன் என வெளியே கூட்டிப் போனான். வேண்டா வெறுப்பாய்த்தான் இவளும் கிளம்பி பின் னால் உட்கார்ந்தாள்.

அவன் நகரின் பெரிய பஜாரில் வண்டியை நிறுத்தி கடைகளைக் காட்டினான். ''உனக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொள்!'' என்றான்.

அவளும் அக்கறையாய் போவது போல் போய் ஐந்து நிமிடங்களில் திரும்பி வந்தாள்.

''என்ன வாங்கினாய்?'' என்று கேட்ட போது கைகளை விரித்துக் காட்டினாள். ''உங்களுக்குத் தேவைப் படுமே... முதுகில் குத்துவதற்கு!'' என்றாள்.

பார்த்த அவன் அதிர்ந்து போனான்! சிறிய கூரான கத்தி அது!

''வாணி உன் கோபம் தீரவில்லை..? என்றான் திவாகரன் அதிர்ந்து.

''தீரவே... தீராது...!'' என்றாள் அமைதியாய்.

''எவ்வளவு நாள் தான் இப்படியே இருக்கப் போகி றாய்?''

அதற்கும் சட்டென அவளிடமிருந்து பதில் வந்தது.

''ஆயுசு முழுக்கும்....'' என்றாள்.

அதன் பின் திவாகரன் ஒன்றும் பேசவில்லை. இரண்டு நாள் கழித்து வேலை முடிந்து சீக்கிரமே திரும் பியவன் வாடகை டாக்ஸி ஒன்றில் வந்து இறங்கி னான்.

''உடை மாற்றிக் கொண்டு உடனே கிளம்பு!'' என அவசரப்படுத்தினான்.

பொதுவாக அவனது கேள்விகளுக்கு சரியாய் பதில் சொல்வதோ என்ன எதுவென்று கேட்பதோ அவள் வழக்கம் கிடையாததால் அவள் ரூமிற்குச் சென்று உடை மாற்றினாள்.

காரில் போய் ஏறிக் கொண்டாள்.

அப்போதும் முகத்தை திருப்பியபடி இறுக்கமான உதடுகளுடன் அவள் இருப்பதைப் பார்த்து, ''எங்கு போகிறோம் என்று கேட்க மாட்டாயா?'' என்றான்.



''அவசியமில்லை! தெரிந்து என்ன ஆகப் போகிறது?'' என்றாள் எதிர்கேள்வியாய்.

''சொன்னால் ஆச்சரியப்படுவாய்...!'' என்றான் அவன் விடாமல்.

''என் வாழ்வில் ஆச்சரியங்களும், அதிர்ச்சிகளும் வந்து முடிந்து விட்டன. இனி வருவதற்கு ஒன்றும் இல்லை...!'' என்றாள் விட்டேற்றியாய்.

''இல்லை... நீ பெரும் ஆச்சரியம் கொள்ளப் போகி றாய்! அந்த ஆச்சரியத்தில் அதனால் எழும் சந்தோஷத் தில்... என்னைக் கட்டிப் பிடித்து முத்தம் கூடத் தரலாம். எதற்கும் கன்னங்களை தயாராய் வைத்துக் கொள் கிறேன்!'' என்றான் சிரிப்போடு.

அவளும் பதிலுக்கு விடாமல் தன் கை விரல்களை பார்த்துக் கொண்டு, ''இன்று என்ன இந்த கை விரல்கள் பரபரவென்று துடிக்கத்தான் செய்கிறது... என்ன நடக்கப் போகிறதோ தெரியவில்லை...?'' எனவும் திவாகரன் முகம் மாறி வாயை மூடிக் கொண்டான்.

ஆனால் கார் அரைமணி நேரப் பயணம் முடிந்து நின்ற போது... அவள் கண்களாலே நம்ப முடிய வில்லை!

அது... பாளையம்பட்டி!

அவளது ஊர்! அவள் வீட்டு முன்னால் கார் நின்று கொண்டிருந்தது.

''ஐயோ! எங்கள் வீட்டுக்கா?'' குப்பென முகம் முழுவதும் சந்தோஷம் பரவியவளாய் துள்ளிக் குதிக்காத குறையாய் இறங்கி வீட்டினுள் ஓடினாள்.

இருபது நாட்கள் கழித்து தாயை, பெரியக்காவை, குட்டித் தங்கையை பார்க்கும் பரவசம்! குதூகலமான ஆனந்தம்!

அப்படியே எல்லோரையும் கட்டிப் பிடித்துக் கொண்டாள். ஆனந்தக் கண்ணீரில் கண்கள் மிதக்க ஆரம்பித்தது.

எல்லோரும் மகிழ்ச்சியாய் விஷயங்களைச் சொன்னார்கள். திவாகரின் ஏற்பாட்டின் பேரில் பக்கத்தில் இருக்கும் தீப்பெட்டி தொழிற்சாலையில் பெரியக்காவிற்கு சூப்பர்வைசர் உத்யோகமாம். கை நிறையச் சம்பளமாம். குட்டித்தங்கையும் படிப்பில் ஆர்வம் காட்டி சுட்டியாய் திகழ்கிறாளாம். அம்மா டவுன் ஆஸ்பத்திரிக்குச் சென்று காசநோயை சரிப்படுத்தி தற்போது பூரண நலமாம்...! என ஒவ்வொன்றாய் சொல்லச் சொல்ல... ஏழ்மை நிலையிலிருந்து வெளிப்பட்டு ஒரு நல்ல மத்திய தர வாழ்க்கைக்கு தனது குடும்பம் முன்னேறி வந்து விட்டது என்பது அவளுக்குப் புரிந்தது.

எல்லாவற்றுக்கும் பெரியக்காவிற்கு திவாகரனின் முயற்சியால் கிடைத்த சூப்பர்வைசர் வேலை... அதன் மூலம் கிடைக்கும் கூடுதல் சம்பளமே காரணம் என்பதையும் உணர்ந்தாள்.

ஆக... நடந்த கல்யாணத்தினால் அவள்தான் விருப்பமில்லாமல் பாதிப்படைந்திருக்கிறாள். அவள் குடும்பம் நல்ல நிலைக்கு வந்திருக்கிறது. திவாகரன் ஏமாற்றாமல் சொன்னபடியே அவள் குடும்பத்திற்கு உதவியிருக்கிறான். நல்ல நிலைக்கு கொண்டு வந்திருக்கிறான்!



இரண்டு மணி நேரம் அவர்களுடன் சந்தோஷமாய் பொழுதை கழித்து விட்டு, அடுத்த முறை சின்னக்காவை கூட்டிக் கொண்டு வருவதாய் சொல்லிவிட்டு விடைபெற்று கிளம்பினாள் அவள்.

திவாகரனும் ஆரம்பம் முதலே அவள் முகத்தில் குதித்து ஓடிய சந்தோஷத்தையும் அளவில்லாத மகிழ்ச்சியையும் ஓரக் கண்ணால் பார்த்து ரஸித்தபடியே இருந்தான்.

திரும்பி விடைபெற்று காரில் ஊருக்குத் திரும்பினார்கள். அப்போது வாணி முதன் முறையாய் அவன் பக்கம் திரும்பி நேருக்கு நேராய் அவன் கண்களைப் பார்த்து,

''நன்றி...'' என்றாள்.

''எதற்கு?'' என்றான் அவன் புரியாதவன் போல.

''உங்கள் வாழ்க்கையிலே முதல் முறையாய் ஒரு உருப்படியான காரியத்தை எனக்காகச் செய்திருக்கிறீர்களே... அதற்காகத்தான்!'' என்று அதிலும் ஒரு குத்தல் பொங்க முடித்தாள் அவள்.

திகைத்துத் தான் போனான் திவாகரன்.

# 11

அன்று என்னவோ சின்னக்கா லட்சுமிக்கு வாணி விஷயத்தில் சந்தேகம் வந்து விட்டது. அடிக்கடி

அவர்களை கவனித்தவள் சரியில்லை என்பதை உணர்ந்து நேரிடையாய் அவளிடமே விசாரித்தாள்.

''வாணி உங்கள் இருவரையும் பார்த்தால் சந்தோஷமாய் இருப்பது போல் தெரியவில்லையே?''

அவள் கேட்டதும் வலுக்கட்டாயமாய் வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன், ''இல்லையே...! நாங்கள் சந்தோஷமாய்த்தானே இருக்கிறோம்...'' என்றாள் வாணி.

''இல்லை... வாணி... நான் கவனித்த வரையில் நீங்கள் அதிகம் பேசுவது கூட இல்லையே?''

''அது உண்மை தான்...'' என அதற்கு மறுக்காமல் தலையாட்டிய வாணி, ''அதற்கு காரணமும் இருக்கிறது...'' என்றாள் பீடிகை போட்டவாறு.

''என்ன காரணம் வாணி?''

''அவரது டைப் அப்படி. அதிகம் பேசாத சுபாவம் அவருக்கு! அதனாலே அவரை கட்டிக் கொண்டதும் அந்த சுபாவமும் என்னுடன் வந்து ஒட்டிக் கொண்டது. மற்றபடி நீ நினைப்பது போல் இல்லை. நாங்கள் சந்தோஷமாய்த்தான் இருக்கிறோம்...'' என்று கூறி சமாளித்தாள்.

சின்னக்கா லட்சுமியும் அதை நம்பியது போலும் இருந்தது. நம்பாதது போலும் இருந்தது. இருந்தும் ஆச்சரியம் கொண்டவள் போல் அகன்றாள்.

அடுத்து வந்த இரண்டு வாரங்களில் திவாகரனின் நடவடிக்கையிலும் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தது.

அவள் முகம் வெட்கினாலும், கடுஞ் சொற்களை வீசினாலும் பின்னாலே வந்து ஹாஸ்யத்துடன் நகைச்



சுவையாய் பேசுபவன் அதை அறவே நிறுத்தினான். சொல்லப் போனால் முன்பு போல் இல்லாமல் அவளுடன் பேசுவதையே குறைத்தான். அவள் எப்படி அவனை சிறிதும் பொருட்படுத்தாமல் நடமாடுவாளோ அதே போல் அவனும் சட்டை செய்யாமல் நடமாட ஆரம்பித்தான்.

எதனால் இந்த திடீர் மாற்றம்? என அவள் அதிர்ச்சியாய் யோசித்து சிந்திக்கையிலே அந்தக் தகவலும் பணியாள் ஒருவர் மூலமாக அவளுக்கு கிடைத்தது.

அவனது அலுவலகத்தில் ரோஸி என்பவள் வேலைக்கு சேர்ந்திருக்கிறளாம். அவள் திவாகரனின் செகரட்டரியும் ஆவாளாம். அவள் வந்ததில் இருந்து திவாகரன் அவள் பின்னாலே சுற்றுகிறனாம்.

வேலை நேரங்கள் தவிர மற்ற நேரங்களிலும் பார்க், பீச், சினிமா என இருவரும் சுற்றுவதாக தகவல் அவளது காதுகளுக்கு வந்தது.

நம்ப முடியாமல் விசாரித்த போது... அது உண்மை தான் என அவளுக்கு கிடைத்த பதில் மிகவும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அது போதாதென்று அடுத்து வந்த இரண்டு தினங்களில் திவாகரன் அந்த ரோஸியை வீட்டிற்கே டின்னர் சாப்பிடுவோம் என கூட்டி வந்து விட்டான்.

அவள் சமைத்து வைத்த உணவு வகைகளை டைனிங் ஹாலில் ரோஸியை உட்காரவைத்து அவன் பரிமாறிய போது அவளுக்கு எழுந்த ஆச்சரியத்திற்கு அளவேயில்லை!

மேலும் அந்த ரோஸியை உற்றுப் பார்த்த போது இன்னொரு விஷயமும் புரிந்தது.

ரோஸி ஓரளவு கறுப்பாய் இருந்தாலும் அழகியாய்த் தான் தெரிந்தாள். நவநாகரீகமாய் ஜீன்ஸ் பேண்ட், டீ ஷர்ட்டில் பாப் கட் முடியுடன் அவள் ஸ்டைலாய் உட்கார்ந்திருக்கும் அழகு... வார்த்தைக்கு வார்த்தை 'திவு'... 'திவு' என திவாகரன் கொஞ்சி அழைத்தபடி பேசிய விதம்... என எல்லாமே இது திவாகரனை மயக்க வந்த சிங்காரி தான்! இவளிடம் திவாகரன் மாட்டி விடக் கூடாது...! என்ற பயத்தையே கொடுத்தது.

பின் இன்னொரு நாள் இருவரும் எதோ நாடகம் பார்க்கப் போகிறார்கள் என அலுவலக பணியாள் மூலம் தகவல் வர அடித்துப் பிடித்து ஓடினாள் வாணி.

அங்கு நாடக சபாவில் அவள் கண்ட காட்சி அவளை வெகுவாய் அரளவே செய்தது. சீவி சிங்காரித்து அழகி போன்ற ஒப்பனையுடன் ரோஸி தினகரின் கைகளோடு கோர்த்து இறுக்கமாய் பிடித்தபடி நாடக சபா நோக்கி நடந்து கொண்டிருந்தாள்.

இருவரும் உரசல்களாய் இடித்தபடி, சிரிக்கச் சிரிக்க பேசியபடி சென்ற விதம் அவர்கள் யாரையும் சட்டை செய்யாமல் நடந்து கொண்ட விதம் எல்லாமே அவர்களது திடீர் நெருக்கத்தை அவளுக்கு உணர்த்தியது.

மேலும் பத்து நாட்கள் ஓடியது.

ஒழுங்காய் வேலை முடிந்ததும் வீடு வந்து கொண்டிருந்த திவாகரன் இரவு வெகுதாமதமாய் வீடு வர ஆரம்பித்தான். அவள் முகம் கொடுத்து நின்றாலும் சட்டை செய்யாமல் அவளைக் கடந்து போனான்.



பொறுக்க முடியாமல் ஒரு நாள் கேட்டு சண்டையிட்டாள் வாணி.

''யார் அந்த ரோஸி...? அவளுடன் எதனால் இப்படி ஒரு நெருக்கம்?'' என்றாள்.

''அப்படியா? அதை பார்த்து விட்டாயா?'' என்றான் சர்வசாதாரணமாய்.

''ஆமாம்... என் இரண்டு கண்களால் பார்த்து தினம் தினம் பூரிப்படைகிறேன். விஷயத்தைச் சொல்லுங்கள்...'' என்றாள் கொதிப்பாய்.

''எதைச் சொல்வது?'' என்றான் அவன் பதிலுக்கு.

''எதனால் அவளுடன் அப்படி கொஞ்சிக் குலாவுகிறீர்கள்...?'' என்றாள் பொறுமையை இழக்காமல்.

''அதைக் கேட்க நீ யார்?''

கேட்டபடி திரும்பி அவன் பார்த்த பார்வையில் பொறி பறந்தது.

''நானா...? நான் உங்கள் தாலி கட்டிய மனைவி...!''

அவள் சொல்லியதும் கடகடவென சிரித்தான். அவள் எரிச்சலானாள்.

''எதற்குச் சிரிக்கிறீர்கள்?''

''அந்த மனைவி உரிமையைத்தான் எனக்கு நீ கொடுக்கவில்லையே...! பின் எந்த தைரியத்தில் நீ எதிர் கேள்வி கேட்கிறாய்? வாயை மூடு!'' என்றான் அவன் விரட்டலாய்.

நிஜமாகவே அவள் அவனது பதிலில் வாயை மூடி கப்சிப் ஆகிவிட்டாள். நிஜமாகவே அவன் சொல்வது உண்மைதானே?

அவனை இன்னும் கணவன் என்று ஏற்றுக் கொள்ளாத போது எந்த உரிமையில் மனைவி போல் அவனை கேள்விகள் கேட்க முடியும்?

திகைத்து ஒடுங்கினாள் வாணி.

மேலும் வந்து பத்து நாட்களில் திவாகரன் நட வடிக்கைகள் இன்னும் விபரீதமானது. தினம் தினம் ரோஸியை வீட்டுக்கு கூட்டி வருவதும் இருவரும் முன் ஹால், மொட்டை மாடி என உட்கார்ந்து மணிக்கணக் காய் பேசுவதும்... அதையெல்லாம் கண்ணிருந்தும் குருடு போல் அவள் பார்த்துக் கொண்டிருப்பதும் மிகவும் எரிச் சலைக் கிளப்பியது.

அவன் திவாகரனிடம் எதாவது கேட்டு சண்டை போடப் போனால், ''எந்த உரிமையில் இப்படி என்னிடம் கேள்விகளை கேட்கிறாய்?'' என எதிர் கேள்வி கேட்டு அவள் வாயை அடைத்து விட்டான்.

அவளுக்கு சில சமயம் என்ன செய்வதென்றே தெரி வில்லை.

போர்க்களத்தில் ஆயுதம் இல்லாமல் சண்டையிட நிற்பது போல் உணர்ந்தாள் அவள்!

முன்பு திவாகரன் மேல் கொண்டிருந்த கோபம், எரிச் சல், ஆத்திரம் எல்லாம் இப்போது எங்கே என தேடு மளவுக்கு... அவளது சுபாவம் மாறியிருந்தது.

நாளுக்கு நாள் திவாகரன் அவளைத் தவிர்த்த விதம், ரோஸியுடன் பழகுவதில் காட்டிய நெருக்கம்... நாம் இனி திவாகரனுக்கு தேவையில்லாத ஒரு பொருள் போல் ஆகிவிட்டோமோ...? என அவளை நினைக்க வைத்தது.



மேலும் ஒரு பத்து நாட்கள் தூங்காமல் கொள்ளாமல் நிலையில்லாமல் இருந்தாள். கடைசியில் மனம் வெறுத்தவள் போல் துணிந்து ஒரு முடிவும் எடுத்தாள் அவள்!

# 12

**வா**ணி நெடுநேரம் யோசித்திருந்தாள்.

இறுதியாய் அந்த முடிவிற்கு வந்தாள்.

அன்று மதியம் அலுவலகம் முடிந்து திரும்பிய திவா கரனிடம், ''உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்...'' என்றாள்.

திவாகரனோ அவள் பக்கம் திரும்பக் கூட செய் யாமல், ''எனக்கு நிறைய வேலை இருக்கிறது. ரோஸி எனக்காக காத்திருப்பாள். நிறைய என்கேஜ்மெண்ட்கள் வைத்திருக்கிறோம். நான் உடனே கிளம்ப வேண்டும்!'' என்றான்.

'ரோஸி காத்திருப்பாள். கிளம்ப வேண்டும்' என்ற அவனது வார்த்தைகள் மீண்டும் அவளை இம்சிக்க வேதனை கொண்டவளாய், ''ரோஸியைப் பற்றித் தான் பேசப் போகிறேன்...'' என்றாள் அழுத்தமான குரலில்.

திவாகரன் எதையோ தேடிக் கொண்டிருந்தவன் நிறுத்தி விட்டான்.

நிமிர்ந்து பார்வையைச் சுருக்கியபடி அவள் பக்கம் வந்தான்.

''ரோஸியைப் பற்றியா? அவளுக்கென்ன?''

அவளுக்கு டக்கென வார்த்தைகள் வரவில்லை. சமாளித்துக் கொண்டு மெல்ல மெல்ல வார்த்தைகளை விட்டாள்.

''நான்... நான்... போகிறேன்... இனி... இனி... இங்கு... என்... இடத்தில் ரோஸியை கொண்டு வைத்துக் கொள்ளுங்கள்... நீங்கள்... நீங்கள்... சந்தோஷமாய்... இருங்கள்... நான் உங்களுக்கு விடுதலைப் பத்திரம் கொடுத்து கையெழுத்திட்டு சட்டபூர்வமாகவும் விலகி... விடுகிறேன்...''

அவள் திக்கித் திணறி ஒருவாறு பேசி முடிப்பதற்குள் பளீரென அவளது செவிட்டில் திவாகரனின் கைகள் பொறி பறக்க பதிந்தது.

ஆங்...! அலறலுடன் கன்னத்தைப் பிடித்துக் கொண்டாள்.

அவன் அடித்ததாலும், கொண்டிருந்த பயத்தாலும் அவள் உடம்பே நடுங்கியது.

அப்படி நடுங்கியவளை இழுத்து ஆவேசமாய் அணைத்தான். நெஞ்சினில் இறுக பொதிய வைத்து பிடித்துக் கொண்டான் அவன்.

''கொஞ்ச நேரம் அப்படியே இரு. அப்போதுதான் உனக்கு புத்தி வரும்!'' என்றவன் தொடர்ந்து, ''என்ன... என்ன வார்த்தைகள் பேசி விட்டாய்... உன்னை...



உன்னை...'' என்றபடி மறுபடியும் அவளை வேகமாய் நெஞ்சினில் இறுக்கினான். முகம் நெற்றி கன்னம் என ஒன்று விடாமல் முத்தமாரி பொழிந்தான்.

''உனக்கு உண்மையை புரிய வைக்கத்தான் இந்த ரோஸி நாடகம்...'' என்றவன் விடுவித்து பின் சட்டென அவள் முகம் நிமிர்த்தி,

''இப்போது புரிந்ததா? எனக்கு வேண்டியது... நீ... உனது அன்பு மட்டும் தான்! ரோஸியல்ல...!'' என்ற போது மலங்க மலங்க விழித்தவளுக்கு அவன் சொல்வது எல்லாம் மூளையில் உரைக்கவும் செய்தது.

இருந்தாலும் முழுதும் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்பியவளாய் அவனைப் பார்த்தாள்.

''அப்படியானால்... அவள்... அவள் ரோஸி? உங்கள் செகரட்டரி...?''

அவன் கடகடவென சிரித்தான். பின் நிறுத்தி விட்டு. ''நீ நினைப்பது போல் ரோஸி ஒன்றும் என் செகரட்டரி அல்ல. அவள் எனது கல்லூரியில் ஒன்றாய் என்னுடன் படித்தவள். தற்போது நாடக சபா ஒன்றில் முழு நேர நாடக நடிகையாய் இருக்கிறாள். தற்செயலாய் ஒரு நாள் அவளை பார்த்து பேசிக் கொண்டிருக்கையில் அவள் என் முகவாட்டத்தைப் பார்த்து, என்ன குடும்பப் பிரச்சினையா? என்ன விஷயம்? என்று கேட்டாள். நானும் நீ பாராமுகமாய் வெறுப்புடன் நடந்து கொள்வது பற்றி விளக்கினேன். உடனே அவள் தான் பெண்களின் மனது

இப்படித்தான். அதை வழிப்படுத்த ஒரு வழி இருக்கிறது. அதற்கு நான் உதவி செய்கிறேன்... என்று சொல்லி என்னுடைய செகரட்டரியாய் நான் நெருங்கிப் பழகும் காதலி போல் நடிக்க ஆரம்பித்தாள். வேண்டுமென்றே உன் முன்னால், நீ போகும் இடங்களைத் தெரிந்து கொண்டு நாங்கள் இருவரும் ஜாலியாய் சுற்றுவது போல் எல்லாம் நடித்து உன்னை வெறுப்பேற்றினோம். இப்படி நாங்கள் தொடர்ந்து நடித்த நடிப்பில் தான் நீயும் நாங்கள் நினைத்தது போலவே சலனப்பட்டிருக் கிறாய்... உண்மையான உன் மனதை உணர்ந்திருக் கிறாய்...'' என அவன் முடிப்பதற்குள் அவள் பலமாய் தலையசைத்தாள், ''ஆமாம்... ஆமாம்... ரோஸியுடன் நீங்கள் நெருங்கி பழகுவது போல் தெரிந்ததும் தான் எனது உள் மனது விழித்து... பயங்கரமான பதட்டம் வந்தது... எங்கே... என்னை விட்டு நீங்கள் போய் விடுவீர்களோ? உங்களது அன்பு எனக்கு கிடைக்காமல் போய் உங்களை இழந்து விடுவேனோ என்ற பயமெல் லாம் வந்தது... அப்போது தான் வெளியே வெறுப்புக் காட்டினாலும் உள்ளுக்குள் உங்களை நான் எவ்வளவு நேசித்திருக்கிறேன் அன்பு செலுத்தியிருக்கிறேன்... என்பது எனக்கே முதல் முறையாய் புரிந்தது. புத்தியில் நன்றாக உணர்த்தும் என்றபடி அவள் தன் தலையையே தட்டிக் கொள்ள தடுத்த திவாகரன், ''இப்போதாவது புரிந்து கொண்டாயே? இன்னும் பல நாட்கள் பல மாதங்கள் ஆகி விடுமோ... என்று பயந்து கொண்டு அல்லவா இருந்தேன்...'' என்றான்.



அவள் மறுபடியும் தனக்குத் தானே குமைந்தவள், சரியான மரமண்டை நான். உங்கள் மீது எவ்வளவு வெறுப்பு காட்டியிருக்கிறேன்? உங்களை எவ்வளவு உதாசீனப்படுத்திருக்கிறேன்? ஏன்?... ஏன்? எனக்கே புரியவில்லை... நீங்கள்... நீங்களே... சொல்லுங்கள்!'' என்றாள்.

அவன் சிரித்தபடி சொல்கிறேன். ''வாணி, நான் கட்டாயப்படுத்தி உன்னை மணந்ததினாலே உள்ளுக் குள் நீ விரும்பினாலும்... வெளியே ஏற்பட்ட காயம் போல் அது ஆறாமல் உன்னை உறுத்திக் கொண்டே இருந்திருக்கிறது. அப்படி மட்டும் மிரட்டாமல் இயல் பாய் நம் இருவருக்கும் திருமணம் நடந்திருந்தால் நன்றா யிருக்குமே... அதை விட்டு விட்டு தடியால் அடித்து கனிய வைப்பது போல் நான் செய்த செய்கை பலமாய் உன்னை பாதித்து விட்டது. அதன் வெளிப்பாடே.... அந்த நீ... என் மீது காட்டிய அதீத வெறுப்பு. மேலும்...''

அவன் நிறுத்த ''சொல்லுங்கள்...'' என்றாள் ஆவ லாய்.

அவன் குறும்புச் சிரிப்புடன் தனது நெஞ்சை காட்டி, ''நீ கேட்க வேண்டிய இந்த இடத்தில் இருந்து கொண்டு தான்...'' எனவும் மறுபடியும் அவனது நெஞ்சினில் ஒண்டிக் கொண்டாள்.

அவன் தொடர்ந்தவன், ''எனக்கே சில சமயம் நீ காட்டும் அதீத வெறுப்பைப் பார்த்து எங்கே உனக்கு என்னை நிஜமாகவே பிடிக்காமல் போய் விட்டதோ என பயந்தேன். அதற்காகவே அன்று படுக்கையில் உன்

நெஞ்சில் தூங்குவது போல் படுத்து ஒரு சோதனையும் செய்தேன். அந்தச் சோதனையில் தூங்கும் என்னை நீ அன்பாய் கை வைத்து அணைத்ததும் அப்படியே சிலிர்த்துப் போனேன். நீ உள்ளுக்குள் என் மீது கொண்டிருக்கும் அன்பை புரிந்து கொண்டேன். அதை வெளியே வரவழைக்கத்தான் இப்படி உன்னை சட்டை செய்யாதது போல் ரோஸியிடம் நெருங்கிப் பழகுவது போல் எல்லாம் நடித்தேன். உன்னை பயப்பட வைத்தேன். நான் எதிர்பார்த்தது போலவே நீயும் மனதால் பயந்து... மாறிவிட்டாய் உண்மையை உனக்குள்ளே உணர்ந்து விட்டாய்... என்ன விளக்கம் போதும் தானே?'' என்றபடி குனிந்தவன் டக்கென பட்டான அவளது இதழ்களில் ஒற்றியெடுத்தான்.

அதில் பரவசமானவள் வெட்கம் பொங்கவே நிமிர்ந்து, ''என்னை மன்னித்து விடுங்கள். உங்களை ரொம்பவும் நோகடித்து விட்டேன்...'' என பதிலுக்கு அவனும், ''நீயும் அப்படியே ஒரு விஷயத்திற்கு மன்னித்து விடு வாணி...'' என்றான்.

''என்ன அது?'' என்றாள் வில் புருவங்கள் உயரும் ஆச்சரியத்துடன்.

''அது... அது... உன் மீது ஆசைப்பட்டது தான்! உன்னை என் சகோதரனது திருமணப் பேச்சு நடக்கும் சமயமே புரோக்கர் வைத்திருந்த போட்டோ மூலம் பார்த்து விட்டேன். அப்போ மனதில் ஒரு சின்ன சலனம். அந்தச் சலனம் உன்னை மண்டபத்தில் பார்த்ததும் அலையாய் மாறி சீற ஆரம்பித்து விட்டது. உடனே அவர் பொன்னுசாமி புரோக்கரிடம் விசாரித்தேன்.



அவர் உன் நிலையை, உன் குடும்பத்தை ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வர இன்னும் இரண்டு மூன்று வருடங்கள் நீ பாடுபட வேண்டிய உன் சூழ்நிலையை விளக்கினார். நீ ஒரு போதும் திருமணத்திற்கு இந்தச் சூழ்நிலையில் சம்மதிக்க மாட்டாய் என்பதை விளக்கினார்.

அதனால் தான் உன்னை அடைய ஒரு பிளான் செய்து அதற்கு வரதட்சணை ஐம்பதாயிரம் என உருவகம் கொடுத்தேன். அதை உன்னிடம் சொல்லி உன்னை அதிகம் யோசிக்கவிடாமல் மிரட்டி பயம் காட்டி கல்யாணத்திற்கு உன்னை சம்மதிக்க வைத்தேன். என்ன இருந்தாலும் இது தெரிந்தே செய்த தவறு தானே... அதற்காக எனனை மன்னித்து விடு...!'' என்றான் குரலில் கெஞ்சி கொஞ்சியபடி.

''மன்னிக்கிறேன்! ஆனால் அப்படி மன்னிப்பதிலும் எனக்கு பெரும் சந்தோஷம்தான். ஏன் தெரியுமா?'' என்றாள்.


''ஏன்...? நீயே... சொல்!'' என்றாள் ஆர்வமாய்.

''அவ்வளவு அன்பு என் மீது வைத்திருக்கிறீர்கள். அவ்வளவு ஆசை என் மீது கொண்டிருந்திருக்கிறீர்கள்... அதனால் தானே... புரவியில் வந்து தூக்கிக் கொண்டு போகும் ராஜகுமாரன் போல் என்னை அலாக்காக நிர்ப்பந்தம் செய்து கட்டியும் கொண்டீர்கள்...!''

''உண்மை தான்...!'' என தலையசைத்தவன் அதே தலையசைப்புடன், ''நான் ராஜகுமாரனோ இல்லையோ

நீ... கண்டிப்பாக ராஜகுமாரி தான்! இந்த அழகு ராஜகுமாரியை இனி என் இதயக் கோவிலில் வைத்து தினம் தினம் பூஜிக்கப் போகிறேன். ஆசை தீர ரஸித்து அப்படியே... உன்னை...'' - என ஆசையாய் சொல்ல ஆரம்பித்தவன் அப்படியே நிறுத்தி குறும்புடன் அவளைப் பார்த்தான்.

அவள் குங்குமமாய் சட்டென சிவந்து போன முகத்தை அழகாக வெட்டினாள். ''போதும்... போதும்...! இனி... சொல்ல வேண்டியது, செய்ய வேண்டியது என் முறை. என்ன வெட்கம் கொஞ்சம் தடுக்கிறது. அதான்....'' என்றபடி சட்டென குனிந்து அவனை தன்னோடு இறுக்கினாள். அவனது அதரங்களில் தனது பட்டான இதழ்களால் ஆசையாய் முத்தமிட ஆரம்பித்தாள். தங்களை மறக்க ஆரம்பித்தனர் இருவரும்.


பொன் மகள் வந்தாள்
அகிலா கோவிந்த்